புத்தம் புதிய தேன்சுவை நாவல்

# ரமணிசந்திரன்

ரூ.30/-

அழகிய மங்கையர் நாவல்



# சுந்தரி நீயும்

உலகிலேயே மிக அதிகமானவர்கள் படிக்கும் தமிழ்நாவல்






சற்றும் எதிர்பாராத வேளையில் சின்ன எஜமானனின் காரைக் கண்டதும், காவலாளி விழுந்தடித்துக்கொண்டு ஓடிப் போய், கேட்டை விரியத்திறந்து வைத்தான்.

வழக்கமான புன்சிரிப்பு, அதனோடு கூடிய சிறு தலையசைப்பு எதையும் காணாதது, பணியாளின் மனதைப் பெரிதும் குழப்பியது.

இன்னும் சுமார் ஒரு மாதத்தில். அவனுக்குத் திருமணம். சென்ற மாதமே, வீட்டளவில் போய் உறுதி செய்து வந்தார்கள். நேற்றுத்தான் காஞ்சீபுரம் போய்த்துணிமணிகள் வாங்கி வந்தார்கள். பணியாட்களுக்கும் அவரவர் குடும்ப முழுமைக்கும் கோடி எடுத்துக் கொடுப்பதாக வீட்டில் பேசிக் கொண்டதாக, வீட்டில் குற்றேவல் செய்யும் பூவாயி பகிரங்க ரகசியமாக எல்லோரிடமும் சொல்லியிருக்கிறாள். எனவே, எல்லோரும் ஆவலாக எதிர்பார்க்கும் மணவிழா. திருமணம் நடக்கப் போகிறது என்பதற்காக மட்டுமல்ல. எப்போதுமே சுதாங்கனின் முகம் குளிர்ச்சியாகத்தான் இருக்கும். கதவைத் திறக்கச் சற்று தாமதம் ஆனால் கூட, முகம் சுளித்துக் கோபப்பட மாட்டான்.

"என்னப்பா, உள்ளே எதற்கும் போயிருந்தாயா? இனிமேல், பதிலுக்கு யாராவது ஆள் வைக்காமல் போகாதே. நினைவிருக்கும்தானே?" என்று குரலை உயர்த்தாமல் அமைதியாகத்தான் கூறுவான். ஆனால், அந்தக் கடைசி வார்த்தை மட்டும் கொஞ்சம் வேறுமாதிரி, காதுக்குள் சற்று நேரம் ரீங்காரம் இடுவதைப் போல இருக்கும்.

அந்த ஒரு நாளைக்குப் பிறகு, ஒரு தரம் கூடச் சின்ன எஜமானின் கார் கேட்டுக்கு வெளியில் தாமதிக்க நேர்ந்ததே இல்லை.

இந்த முகச் சுளிப்பின் காரணம் என்னவாக இருக்கும்? யோசித்தபடியே, கதவை மூடினான் சிங்காரம்.

போர்டிகோவில் காரை நிறுத்தி, வராண்டாவைத் துடைத்துக் கொண்டிருந்த பூவாயியிடம் "நான் வந்திருக்கிறேன் என்று அம்மாவிடம் சொல்லு." என்று பணித்த குரலிலும் சிறு கடுமையே தெரிந்ததோ?

சின்ன முதலாளிக்கு என்ன பிரச்சினையோ என்று கவலைப்பட்டான் வாயில் காவலாளி.

அடுத்த கார் வந்தால், வீட்டு வாயிலுக்கு நேராக நிறுத்த வசதியாகத் தன் காரை ஒதுக்கி நிறுத்திவிட்டு, வேகமாகப் படியேறி வீட்டுக்குள் சென்றான், முதலாளி.

ஆனால், அவன் எதிர்பார்த்தது போல, அவனுடைய தாயார் ஹாலுக்கு வந்து காத்திருக்கவில்லை.

தாயைத் தேடிய அவனது பார்வையைக் கண்ட பூவாயி, "அம்மா, அவுக ரூம்பிலே இருக்காகளாம், சின்னய்யா. அங்க வரும்படி சொல்லச் சொன்னாக" என்றாள்.

"ரைட், நீ போய் வேலையைப் பார்" என்று பூவாயியை அனுப்பி விட்டு, இரண்டு படிகளுக்கு ஒரு காலாக வைத்து, வேகமாகப் படியேறிச் சென்றான் சுதாங்கன்.

தாயின் அறைக்குள் சென்ற மகனுக்கு, அன்னை கட்டிலில் உட்கார்ந்திருந்த விதம் எரிச்சலூட்டியது "என்னம்மா நீங்கள், அவசரம் என்று பூவாயியிடம் சொல்லிவிட்டால், நீங்கள் இங்கேயே உட்கார்ந்து, ஆர அமர என்னவோ செய்து கொண்டிருக்கிறீர்களே" என்றான் கோபமாக.



சற்றும் பரபரப்பின்றி, "வேறே என்னடா செய்கிறேன்? எல்லாம் உன் கல்யாணத்து வேலைதான். அன்று சேலை வாங்கி வந்தோமில்லையா? யார் யாருக்கு எதெது என்று அட்டைப் பெட்டியில் பேர் எழுதி வைத்துக் கொண்டிருக்கிறேன்" என்று புன்னகை செய்தாள் தாய்.

"பொல்லாத வேலை!" என்றான் அவன் எரிச்சலாக. "இப்போது, இதற்கு அவசியமே இல்லை!"

"அவசரப்பட வேண்டிய அவசியம் இல்லைதான். இன்னும் ஒரு மாதத்துக்கு மேலாகவே இருக்கிறதே! ஆனால், ஒரேயடியாகத் தேவை இல்லை என்று சொல்லாதே. கிடைக்கிற நேரத்தில் ஒவ்வொன்றாக வேலைகளை முடித்துக்கொண்டே இருந்தால்தான், கடைசி நேரத்தில் நெருக்கடியாக இராது. அப்புறம், அவசர கோலத்தில் அண்டாவுக்குள் கூடக் கை நுழையாது என்பது போல, உன் மனைவிக்கு உரிய சேலையைப் பாட்டிக்கும், பாட்டியின் சேலை மருமகளுக்குமாக இடம் மாறிவிடப் போகிறது! அவரவருக்குக் கொடுத்த சேலையைக் கட்டிக்கொண்டு வந்தால் ...." என்றுரைத்த பவானி, அந்தக் கற்பனையில் வாய் விட்டுச் சிரித்தாள்.

இது போன்ற கேலிக் கற்பனைகளில், மற்றவர்களோடு கூடச் சேர்ந்து கலகலக்கிறவன் சுதாங்கன். வழக்கம் போல அவனது சிரிப்பை எதிர்பார்த்தால், "அம்மா. ப்ளீஸ்" என்றான் மைந்தன் பொறுமையை இழுத்துப் பிடித்த குரலில்.

அன்னை திகைத்து நோக்கவும், "அம்மா இதோ பாருங்கள், மிகவும் முக்கியமான விஷயம் சொல்லப் போகிறேன், ஆ ஓ என்று கத்தாமல், அமைதியாகக் கேட்க வேண்டும்" என்று தொடங்கினான்.

"ஆ ஓ என்று கத்துவதா? நானா? என்னடா, பெரிய பீடிகையெல்லாம் போடுகிறாயே! ஏண்டா. கல்யாணச் சேலையை மாற்ற வேண்டும் எனப் போகிறாயா? அரை லட்சமடா! ஒரு சேலைக்கு, இந்த விலை கூடுதல்தான். ஆனால், மருமகளுக்கு என்ன பொருத்தம் பார்த்தாயா?"

"என்னைக் கொஞ்சம் முழுதாகப் பேச விடுங்களேன். அம்மா. ப்ளீஸ்! அம்மா, இப்போது நான் என்ன சொன்னாலும், நீங்கள் அசரக் கூடாது"

"அசரக் கூடாது! ஆ ஓ என்று கத்தக் கூடாது,1 ரொம்பப் ரொம்பப் பெரிய விஷயமாகத்தான் இருக்கும் போலத் தெரிகிறது. சொல்லுப்பா, எதற்கும்!" என்று இரு கைகளாலும். வாயை இறுகப் பொத்திக் கொண்டு, மேலே பேசுமாறு சைகை செய்தாள்.

"ஆமாம்! உடனே இப்படி மாறி விடுங்கள், ப்ளீஸ்மா. என்ன சொல்கிறேன் என்பதைக் கொஞ்சம் சீரியசாகத்தான் கேட்டுக் கொள்ளுங்களேம்மா. வந்து... நான் சொல்ல வந்தது என்னவென்றால்... இப்போது. உடனே, இந்தக் கல்யாணத்தை நிறுத்த வேண்டும்" என்று, இடையில் இழுத்ததற்கும் சேர்த்து வேகமாகப் பேசிக் குண்டு போட்டான் பிள்ளை!

மகன் எச்சரித்ததால் மட்டும் என்று சொல்ல முடியாது, சும்மாவே கண்டபடிக் கத்தி, அந்த வீட்டில் பழக்கம் இல்லாததால், பவானி "ஆஓ" என்று கத்தவில்லை,

ஆனால், திகைத்த பார்வையுடன் மகனிடம் கேள்வி கேட்டாள். "என்னடா இது. பைத்தியக்காரப் பேச்சு? கல்யாணத்துக்கு இன்னும் நாற்பதே நாட்கள்தான் இருக்கிறது, இந்த நேரம் போய், என்ன வார்த்தை சொல்லுகிறாய்! சும்மா வேடிக்கைக்குக் கூட, இப்படியெல்லாம் உளராதே" என்று அதட்டியவாறு மகனைக் கூர்ந்து நோக்கினாள்.

மகன் எங்கோ பார்த்தபடி உட்கார்ந்திருக்கவும். "ஓஹோ வேடிக்கைதான் செய்கிறாயாக்கும்? என்ன விளையாட்டுப் பிள்ளையடா நீ!" என்றவாறு அடுத்த சேலைப் பெட்டியை எடுத்துப் பெயர் எழுதத் தொடங்கினாள்.

ஆனால், பையன் அமர்ந்த குரலில், "இந்த விஷயத்தில் விளையாடுவேனா, அம்மா?" என்று கேட்கவும், தாயார் மறுபடியும் திகைத்தாள், "சுதாம்மா?" என்றாள் கேள்வியாக.

ஒரு நெடுமூச்சுடன். "ஆமாம்மா, நான் உண்மையாகத்தான் கூறுகிறேன், இந்தக் கல்யாணத்தை நிறுத்தியே தீர வேண்டும், அதுவும் உடனேயே. ஏனெனில் நாளாக நாளாக பிரச்சினை பெரிதாகிவிடும்" என்றான் சுதாங்கன்

"இதென்னடா திடீரென்று வந்து, தலையில் இடியைப் போடுகிறாய்? இப்போது என்ன ஆயிற்று? ரேவாவோடு ஏதாவது



பெரிய சண்டையா? நான் வேண்டுமானால், அவளிடம் பேசட்டுமா?" என்று மகனுக்காகத் தூது செல்ல முன்வந்தாள்.

ஆனால், "கல்யாணத்தையே நிறுத்தச் சொல்கிறேன், அவளிடம் தூது வேறா?" என்று அலுத்து, "அவள் நமக்கு வேண்டவே வேண்டாம்மா!" என்று முடித்தான் சுதாங்கன்,

"ஆனால் ஏண்டா? நல்ல அழகான பெண், சிரித்த முகமாக எப்போதும் கிளி மாதிரிக் கொஞ்சிக் கொஞ்சிப் பிரியமாகப் பேசுகிறாள்... அப்படி உங்களுக்கிடையே என்ன சண்டை? அம்மாதானே கேட்கிறேன்? சும்மாச் சொல்லேன்!" என்று கேட்டாள் அன்னை.

"என்னம்மா, சண்டை கிண்டை என்று ரசாபாசம் செய்கிறவனா, நான்? யோசித்துப் பார்த்ததில், எனக்கு ஓர் உண்மை தெரிந்தது, அந்தப் பெண் ரேவதி, நம் பணத்துக்காக மட்டுமே என்னை மணக்க முன்வந்திருக்கிறாள் என்பது தெளிவாகப் புரிந்துபோயிற்று, எனக்கு அது... ரொம்ப மானக் குறைவாக... அவமானமாகத் தோன்றுகிறதும்மா. அதனால், இனியும் இதைத் தொடர வேண்டாம். நல்லவேளையாக ஊர் கூட்டிப் பெரிதாக நிச்சயதார்த்தம் என்று எதுவும் பண்ணவில்லை. இப்போதே நிறுத்திவிட்டால் பிரச்சினை இராது" என்றுரைத்தான் பிள்ளை.

"யோசித்துப் பார்த்ததில் தெரிந்ததா? இதற்கு நீ யோசிக்காமலே இருந்திருக்கலாம், ஆனால். இந்த மாதிரி யோசித்துப் பார்த்தாயா? மருமகளே பணக்காரிதானே? தந்தையின் தொழில் நன்றாகத்தானே நடக்கிறது? அப்புறம், அவள் எதற்காகப் பணத்துக்காக உன்னை மணக்க வேண்டும்?" என்று பவானி மகனை மடக்கிக் கேட்டாள்.

சென்னியில் அறைந்தாற்போல அன்று அவன் அறிந்த உண்மையை, அப்படியே சொல்ல, சுதாங்கனுக்கு சுய கௌரவம் குறுக்கிட்டது. ஆனால், சொல்வதற்குத்தான் விஷயங்கள் எத்தனையோ இருந்தனவே!.

"அவர்களிடம் எவ்வளவு பணம் இருந்தாலும். இங்கே இருந்துமே எவ்வளவோ செல்வங்கள் வர இருந்தாலுமே, அவள் மனதில் திருப்தி இல்லாதவள், அம்மா. தற்சமயத்துக்கு எவ்வளவு கறக்கலாம் என்பதிலேயே குறியாக இருக்கிறாள். அவளைத் திருப்திப்படுத்த,

அந்தக் கடவுளால் கூட முடியுமோ, என்னவோ?" என்றான்.

பவானி பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கவும், அவனே தொடர்ந்தான்.

"நன்றாக யோசித்துப் பார்த்தால் அம்மா..."

"நன்றாக யோசித்துப் பார்த்தால், அன்று நாம் போய், அவளுக்குப் பூ வைத்துத் திருமணத்தை உறுதி செய்துவிட்டு வந்தோமே. அதுவே ஒரு நிச்சயதார்த்தம் போலத்தானே, கண்ணா? நீ மோதிரம் கூடப் போட்டாயே!" என்று மகனுக்குப் பவானி நினைவுபடுத்தினாள்.

அவன் தடுக்கில் புகுகிறவனாகி, "நிச்சயம் போலத்தானே, அம்மா? அதுவே நிச்சயம் அல்லதானே?" என்றான் பிள்ளை.

"ஆனால், நீ நினைக்கிறமாதிரி, அதை ஒன்றும் இல்லாத மாதிரி "பூ" என்று காற்றில் பறக்க விட்டுவிட முடியாதும்மா!" என்றாள் அன்னை விடாமல்.

முடியாதுதான் அதனால்தானே, அவளுக்கு இவ்வளவு அழுதிருக்கிறான்!

அவளைச் சந்தித்த ஒவ்வொரு தடவையுமே, ஒரு திருப்தியற்ற அவன் மனநிலையில்தான் திரும்பி வந்திருக்கிறான். காரணத்தை அவன் யோசிக்கவே இல்லை என்று சொல்ல முடியாது. எங்கேயோ ஏமாந்த மாதிரி உணர்வு, மாதிரிதான்.

ஒருவேளை, திருமணம் நிச்சயமான ஆண்களுக்கு, வருங்கால மனைவியைச் சந்தித்துத் திரும்பும்போது, இதே உணர்வுதான் இருக்குமோ என்று, அவன் தன்னைத் தானே சமாதானம் செய்துகொண்டும் இருக்கிறான். ஆனால், இன்றுதானே, உச்சந்தலையில் அறைந்த மாதிரி உண்மை தெரிந்திருக்கிறது!

ஆனால், தெரிந்த பிறகும், இன்னும் இந்த நிலை தொடர விடக் கூடாது!

தலையை ஆட்சேபமாக அசைத்து. "அம்மா. நான்தான் உங்கள் மகன். அந்த ரேவதி அல்ல! பிள்ளை எனக்கு ஆதரவாகப் பேசாமல், அந்தப் பெண்ணுக்குப் போய் வக்காலத்து வாங்குகிறீர்கள்?" என்று ஆத்திரம் காட்டினான்.

"என்னடா செய்வது? இத்தனை நாளில், அவளையும் குடும்பத்தில் ஒருத்தியாக நினைத்துப் பழகிவிட்டேனே! எப்படி விடுவது? எதற்கும்,



உன் அப்பாவிடம் கேட்போமே? அவர் சொல்லுகிறபடி செய்யலாம்"

"ஊகூம், இந்த விளையாட்டுக்கு நான் வரவில்லை, அம்மா!! இந்தக் கல்யாணத்தைப் பண்ணிக் கொள்ளும்படி, அப்பா வாய் மூலமாகவே சொல்லப் போகிறீர்கள். அது சரியாகுமா? இன்னுமே நான் எதனால் வேண்டாம் என்கிறேன் என்று கேளாமலே, அவளுக்கு சாதகமாகவே பேசுகிறீர்களே!" என்று பிள்ளை குறைப்படவும், பவானி மீண்டும் திகைத்துப் போனாள்.

"ஐயோ, ஆமாமில்லை? உன்னிடம் ஏன், என்ன என்று விவரம் ஒன்றும் கேளாமல், திருமணம் திருமணம் என்று உருப் போடுகிறேனே! சாரிடாம்மா. இப்போது சொல், ரேவதி மேல் உனக்கு என்ன கோபம்? அவள் என்ன தப்புச் செய்தாள்?" என்று விவரம் கேட்டாள் அன்னை!

"அது... இந்தத் திருமணம் நிச்சயம் ஆனதில் இருந்து, என்னை எவ்வளவு செலவு செய்ய வைத்திருக்கிறாள் தெரியுமா...." என்று தொடங்கியனைக் குறுக்கிட்டு. "டேய்ப் பையா, சரியான கஞ்ஜூஸ் மாதிரி அல்லவா கதை சொல்லுகிறாய்? வருங்கால மனைவிக்குச் செய்வதில் கணக்குப் பார்ப்பார்களா? போடா போ,!" என்று வேடிக்கை வினோதமாகவே பவானி பேச்சை முடிக்க முயன்றாள்.

ஆனால், அவன் பெற்ற பிள்ளைதானே? கொஞ்சமும் தொடர்பு அறாமல், தொடர்ந்து பேசலானான்.

"இயல்பாக இதை வாங்கித் தாருங்கள் என்று கேட்டால், அது நேர்மை, அம்மா. ரேவதி அப்படி ஆள் அல்ல. அவளது தொடக்கமே, என்னவோ நமக்காக உருகுவது போலவே இருக்கும். இன்று நாம் வெளியே எங்கேயும் போக வேண்டாம். உங்களுக்கு வீண் செலவாகி விடும் அதனால், இப்படி செல்ஃபோனிலேயே வேண்டியதைப் பேசி விடலாம். உங்கள் குரலைக் கேட்பதே எனக்குப் போதுமானது என்று தொடங்குவாள்..."

குறுக்கிட்டு. "வீண் செலவு வேண்டாம் என்றுதானே, மருமகள் சொல்லி இருக்கிறாள்? இதிலே என்ன பெரிய தப்பு இருக்கிறது?" என்று கேட்டாள் பவானி.

"கொஞ்சம் குறுக்கே பேசாமல்தான் கேளுங்களேன்மா.! என்ன சொல்ல வருகிறேன் என்று தெரியாமலே, இது போலக் கேள்வி

கேட்டால், நான் என்னதான் செய்வது?"

"சரி சரி சரிப்பா. நீ சொல்லி முடித்து அபிப்பிராயம் கேட்கும்வரை, இனி வாயைத் திறப்பதே இல்லை; சரிதானா?" என்றாள் பெற்றவள்.

"வெளியே போவதையே வீண் செலவு என்று தொடங்குகிறவள், அத்தோடு விட வேண்டியதுதானே? உங்களை நேரிலே பார்க்க வேண்டும் என்று ஆ...சையாக இருக்கிறது. அதனால், ஏதாவது "மாலி"ல் சும்மா சுற்றிவிட்டு வருவோம் என்று, ஏதாவது பெரிய சூப்பர் மார்க்கெட்டுக்கு வரச் சொல்லுவாள். இந்தக் கடையில், என் சிநேகிதி ஒன்று பார்த்துவிட்டு வரச் சொன்னாள் என்று ஏதாவது கடைக்குள் போய் நின்ற பிறகுதான், அவள் கூட, நான் இருக்கிறேனா என்று திரும்பிப் பார்ப்பாள்.

உடனேயே கடையில் உள்ள எதையாவது உடம்பில் வைத்து. தனக்கு நன்றாக இருக்கிறதா என்று கேட்பாள்.

"சொல்லுங்கம்மா, நான் ஆமாம் என்றுதானே சொல்லமுடியும்? உடனே அதை ஆசையாகத் தடவியபடியே பெருமூச்சு விடுவாள். போகட்டும். வேண்டாம்பா, இதெல்லாம் வாங்க இப்போது நம்மால் முடியாது, என்னால் உங்களுக்கு ஏன் செலவு? வேண்டிய பணம் கையில் வைத்திருக்கிறீர்களோ என்னவோ? எப்படியும் பெரியவர்களிடம் கணக்குச் சொல்லும்போது, வீண் செலவு என்று திட்டுவார்கள்... இப்படிக் கொஞ்ச நேரம் புலம்பல் நடக்கும். அப்படி எல்லாம் கிடையாது என்று சொன்னாலும், நிறுத்த மாட்டாள். கடைசியாக, நம் வீட்டில் அதுபோல நடக்காது; நீங்கள் இருவரும் அப்படிப்பட்டவர்கள் இல்லை என்று நிரூபிப்பதற்காகவே வாங்கிக் கொடுக்க நேரும். இப்படியே... என்னைச் சீண்டிச் சீண்டிப் பேசியே ஒவ்வொரு தடவையும், எதையாவது வாங்கிக் கொடுக்க வைத்திருக்கிறாள். வாங்கிய பிறகு உருகுவாள் பாருங்கள்! எல்லாம், இப்போது தனியே இருந்து யோசிக்கும்போதுதானே முழுதாகப் புரிகிறது..." என்று அவன் நடந்ததை எண்ணிப் பார்த்தவாறே கூற, பவானிக்குச் சிரிப்பு வந்தது.

பெற்றவளின் சிரிப்பு சினமூட்ட "என்னம்மா சிரிப்பு? எவ்வளவு எளிதாக ஏமாந்திருக்கிறேன் என்று, நான் கிடந்து குமுறிக் கொண்டிருக்கிறேன்! நீங்களானால் சிரிக்கிறீர்களே! உங்களுக்கு ஒன்று



தெரியுமா? நான் வீட்டுச் செலவுக்கு எடுக்கும் பணம் தவிர, என் சேமிப்பிலேயே, பத்து லட்சத்துக்கு மேல் காலி!" என்று எரிச்சல்பட்டான் மகன்.

சிரிப்பை லேசாக அடக்கிக்கொண்டு "அது, அப்படி இல்லைப்பா. மருமகள் கெட்டிக்காரி என்று நினை. ஏதோ வழியில், ஆசைப்பட்டதைச் சாதிக்கத் தெரிகிறது, பார்த்தாயா? அதை நினைத்து சந்தோஷப்படு" என்றாள் அன்னை புன்னகையுடனேயே.

"அம்மா. உங்களுக்கு இன்னும் புரியவில்லை. கொஞ்ச நாட்களாகவே, எனக்கு உள்ளூர ஒரு சலிப்பு ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. அவளைப் பார்த்துப் பேசிவிட்டுத் திரும்பும்போது, எதையோ தப்பாக இழந்துவிட்டது போல ஓர் உணர்வு தோன்றி, வலுப்பெற்றுக்கொண்டே இருந்தது. அவள் மேல் உள்ள ஆசையால், அவளைப் பிரிவது பிடிக்காத ஏக்கமோ என்று யோசித்துப் பார்த்தேன். ஆனால், அப்படியும் இல்லை. ஏதோ சிறையில் இருந்து மீண்ட நிம்மதிதான். உள்ளூர இருக்கும். அது ஏன் என்று, மண்டையைக் குடைந்து யோசித்து, இப்போதுதான் காரணம் சரியாகப் புரிகிறது. எல்லாவற்றுக்கும் அடிப்படை, அவளது பேராசை! நான் கஞ்சன் அல்லவே என்று எனக்கு நானே, பலமுறை சொல்லிக் கொண்டேன்தான். ஆனால், அவளது உண்மையற்ற போக்கு... என்னை ஏமாற்றிக் காரியம் சாதிக்கும் தன்மை... எல்லாமே எனக்குள் வெறுப்பைத்தான் ஏற்றிவிட்டன. இப்போது அவளைக் கொஞ்சமும் பிடிக்கவே இல்லை, அம்மா. நீங்களே சொல்லுங்கள், கணவன் மனைவிக்குள் நம்பிக்கை வேண்டாமா? அவளை இனி என்னால் நம்பவே முடியாதும்மா. கண்களில் கணக்கிடலோடு அவளது பார்வை, பேச்சு எல்லாமே எனக்கு... எனக்கு மிகவும் வெறுப்பாக இருக்கிறது! அதனால், முதல் வேலையாகத் திருமணத்தை நிறுத்துங்கள்" என்று பிடிவாதமாக் கூறினான் பிள்ளை.

என்ன, இவ்வளவு வெறுப்பாகப் பேசுகிறானே, இவளோடு எப்படி வாழப் போகிறான் என்று, தாயின் மனதிலும் கவலை உண்டாயிற்று.

சற்று யோசித்துவிட்டு. "கண்ணா, இது நாமாக மட்டும் செயல்படுத்த முடியாத முடிவு. அப்பாவே முடிவு செய்யட்டும் என்று சொல்லவில்லை. ஆனால், அப்பாவின் ஆலோசனையையும்

கேட்டுக்கொண்டு, என்ன செய்வது, எப்படிச் செய்வது என்று தீர்மானிக்கலாம். அப்பா கூட, ஆடிட்டரைப் பார்த்துவிட்டு, வீட்டுக்கு என்னிடம் கையெழுத்து வாங்க வருவதாகச் சொல்லியிருக்கிறார். அவர் வரும்வரை பொறுத்திரு" என்று நயந்த குரலில் கேட்டுக் கொண்டாள்.

தாயின் குரலில் மகனும் நிதானித்தான்.

ஊர் கூட்டி எதையும் செய்யவில்லை என்றாலும், நெருங்கிய முதல் சுற்று உறவினரோடு சென்று ரேவதிக்குப் பூ வைத்து, அவன் பங்கில் மோதிரமும் அணிவித்துத் திருமணத்தை, இரு' சாராரும் உறுதி செய்திருக்கிறார்கள்.

இந்த அளவுக்கு வந்துவிட்ட திருமணத்தை நிறுத்துவதானால், தந்தையின் வார்த்தைக்குத்தான் முழு மதிப்பிருக்கும், பெரியவராக. அவர் மூலமாகத்தான், வேலையை முடிக்க முடியும்.

அத்தோடு, மாதவனை ஒத்துக்கொள்ள வைப்பதும் அப்படி ஒன்றும் எளிதல்ல. தொழிலாகட்டும், வாழ்வாகட்டும், கொடுத்த வாக்கு முக்கியம் என்கிறவர், அவர்!

அதுவும், கடந்த ஒரு மாதத்தில், பெரும்பாலும், ரேவதியோடு அவன் வெளியே சுற்றியிருக்கிறான். அவனது திருமணம் பற்றிய செய்தி உறவு, நட்பு, மற்றும் தொழில் வட்டத்தில் கூட, நிச்சயமாகப் பரவியிருக்கும்.

இந்த நிலையில், கல்யாணத்தை நிறுத்த, அவரை ஒப்புக்கொள்ள வைப்பது, மிகவும் கடினமே.

ஆனால், எவ்வளவு கடினம் என்றாலும், அதைச் செய்துதான் தீர வேண்டும். மற்றபடி, அவனை இவ்வளவு மட்டமாக எண்ணும் ஒருத்தியை, அவளிடம் எவ்வளவு அழகும் பணமும் இருந்தாலும் மணப்பது, அவனால் முடியாது.

தந்தையிடம் எப்படிப் பேசித் தன் முடிவை ஏற்க வைப்பது என்று யோசித்தபடி, அவரது வரவுக்காக சுதாங்கன் காத்திருந்தான்.

பவானி கூறியிருந்த விதமாகவே ஆடிட்டரிடம் போய்விட்டு, அவரும் சற்று நேரத்தில் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.





# சுந்தரி நீயும்... 2

மாதவன் வீட்டுக்குள் வரும்போதே வெளியே மகனின் காரைப் பார்த்துவிட்டார்.

எனவே, உள்ளே வரும்போதே, மகனைக் கிண்டலாகப் பார்த்து, "என்னடா, கல்யாணம் நிச்சயமானதில் இருந்தே, சாருக்கு அலுவல் நேரம் மறந்து போன மாதிரி இருக்கிறது! சரிதான். வருங்கால மருமகள் ஆட்டி வைக்கிறாள் என்று நினைத்தால், இங்கே வீட்டுக்கு வந்து உட்கார்ந்திருக்கிறாய்? மனைவிக்குத் தோப்புக்கரணம் போடாமல் தப்பிப்பது என்று பாடம் கேட்கவா? அதற்கு, நீ என்னிடம் அல்லவா வந்திருக்க வேண்டும்?" என்று உற்சாகமாகப் பேசியவாறு உள்ளே வந்தார்.

"அது... வந்து, இப்போது உங்களுக்குக் குடிப்பதற்கு ஏதாவது வேண்டுமா?" என்று கேட்ட மனைவியை ஒரு தரம் கூர்ந்து பார்த்த மாதவன், அடுத்து மகனையும் ஆழ நோக்கினார்.

பிறகு. "வேண்டாம், ஆடிட்டர் வீட்டில் ஏதோ தந்தார்கள். வேறு வேண்டாம் இப்போது, நீ இங்கே உட்கார். இங்கே ஏதாவது பிரச்சினையா?" என்று வினவியவாறு, அவரும் அமர்ந்தார்.

"அது... வந்து... இவன் உங்களிடம் ஏதோ பேச வேண்டுமாம்" என்று மகனைக் கைகாட்டிச் சொன்னாள் பவானி.

"என்ன? அது என்ன என்றுதான் உனக்கும் தெரியும் போல இருக்கிறதே. போகட்டும். என்ன சுதா, என்ன விஷயம்? நான் முதலில் சொன்னது போல இல்லை என்று தெளிவாகத் தெரிகிறது. வேறு பிரச்சினை என்ன என்று சொல்லு. என்ன சிக்கல்?" என்று கேட்டார்.

தந்தையை நேராக நோக்கினான் பிள்ளை "அப்பா, நீங்கள் சொன்னது போலச் சிக்கல்தான். ஆனால், எப்படி இதைச் செய்வது என்பதில்தான் சிக்கல். ஆனால், செய்துதான் ஆக வேண்டும்! அதாவது, இந்தக் கல்யாணத்தை உடனே நிறுத்த வேண்டும், அப்பா." என்று பொட்டெனப் போட்டு உடைத்தான் பிள்ளை!

திகைப்புடன் நோக்கிய மாதவனின் பார்வை மனைவியிடம் ஒரு தரம் சென்று மீண்டது.

"உனக்கும் ரேவதிக்கும் திருமணம் என்று ஊரெல்லாம் பரவிவிட்டது. இப்போது போய், இப்படிச் சொன்னால் எப்படி, சுதாங்கா?" என்று கேட்டார்.

தாயிடம் சொன்னதை எல்லாம், சுதாங்கன் தந்தையிடம் மறுபடியும் எடுத்துச் சொன்னான். ஆனால், தாயளவு, தகப்பனார் அவனது வாதத்தை ஒத்துக்கொள்ளவில்லை.

"நீ ஆண்பிள்ளை, ரேவதியின் போக்கு வெறும் அசட்டுத்தனமாகக் கூட இருக்கலாம். அவளுடைய தந்தை ரகுபதி கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவர். அதனால் ஏற்பட்ட பாதிப்பாகவும் இருக்கலாமே. கிடைத்ததைப் பற்றிக் கொண்டால்தான் நிலைக்கும் என்று நினைத்திருக்கலாம். அவளைத் திருத்துகிற வழியைப் பார்க்காமல், துண்டு தரித்துக்கொண்டு ஓடப் பார்க்கிறாயே. பிரச்சினை என்று வந்தால், முயன்று அதை ஜெயிக்க வேண்டுமே. தவிர, பயந்து ஒளிவதால் என்ன கிடைக்கும், சொல்லு?" என்றார் அவர்.

பயந்து ஓடி ஒளிகிறவனா, அவன்?

படித்து முடித்திருந்தான். தொழிலில் ஒன்றுமே தெரியாத நிலை. திடுமென "இந்த டீலைப் பேசி முடித்துக்கொண்டு வா" என்பார். வெற்றிகரமாகச் செய்யவில்லையா? தயங்கியதே இல்லையே! அவனும் சேர்ந்து பார்க்கத் தொடங்கியதில் இருந்து, தொழில் மூன்று மடங்காகப் பெருகியிருக்கிறது.

அவர் கையில் இருக்கும் ஆடிட்டர் ரிப்போர்ட் கூட, அதைத்தான் சொல்லும்.

உண்மை அப்படியிருக்க, அவனைப் போய்ப் ப்யப்படுவதாகச் சொல்லிவிட்டாரே!

ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு, இறுகிய குரலில் அவன் சொன்னான். "அப்பா. இப்போது இருக்கும் வழிகள் இரண்டே இரண்டுதான். ஒன்று, அந்தப் பெண்ணுடைய அப்பாவிடம் பேசித் திருமணத்தை இப்போதே நிறுத்துவது. அடுத்தது, வேதனையான சில மாதங்களுக்குப் பின், விவாகரத்து. அதுவும் சொத்து பணம் என்று, நமக்குப் பெரும் இழப்பாகவே முடியும். இதுவரை இழந்திருப்பதற்கு மேலும் அவளிடம் பணத்தை இழப்பது என்றால், எனக்கு அது பெரும் தோல்வி. அதனால், எப்படியாவது இந்தத் தொல்லை தொடராமல்,



இத்தோடு முடிக்கிற வழியைப் பாருங்கள்!" என்றான்,

கணவனை யோசனையோடு பார்த்துவிட்டு. "சுதாம்மா, இன்றைக்கு உனக்கு மூடு சரியில்லை. எல்லாம் தப்புத் தப்பாகவே தெரிகிறது. மனதில் உற்சாகம் தலை தூக்கிவிட்டால், எல்லாம் சரியாகவே தெரியும். உனக்கு உடம்பு ஏதும் சுடுகிறதா?" என்று பரிவுடன் கேட்டாள் பவானி.

"ஆமாம்மா நூற்று ஐந்து டிகிரி! விட்டால் பல்லைத் தட்டித் தொட்டிலில் போட்டு ஆட்டுவீர்கள் போல இருக்கிறதே! காய்ச்சல் என்றால், ஒரு குரோசினைப் போட்டுக்கொள்ளத் தெரியாத முட்டாளாகவா என்னை வளர்த்திருக்கிறீர்கள்? அவள் முகத்தைப் பார்க்கவே வெறுப்பாக இருக்கிறது என்கிறேன். நீங்களானால், அதைப் புரிந்துகொள்ளாமல், என்னென்னவோ பேசுகிறீர்களே!" என்று அங்கலாய்த்தான் பிள்ளை.

"ஊகூம். இதை எப்படி ஒப்புவது? இவளை நீயும் பார்த்துத்தானே, சரி என்றாய்?" என்றாள் அன்னை ஆட்சேபக் குரலில்.

"அம்மா, எனக்கு வெறுப்பு அவள் குணத்திடம். அதுவே முகத்தைப் பார்க்கப் பிடிக்காமல் போக வைத்துவிட்டது என்று தோன்றுகிறது,?

மகனைக் கூர்ந்து பார்த்தாள் அன்னை.

அந்தப் பார்வையில் "என்னம்மா? உங்கள் பிள்ளைக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று பார்க்கிறீர்களா?" என்று சிறு முறுவலுடன் கேட்டான் பிள்ளை.

ப்திலாகத் தானும் முறுவலித்தாலும் "இல்லைமா. ஏதேனும் மயக்கமோ என்று தோன்றுகிறது. ஏண்டா? இடையில் வேறு எந்தப் பெண்ணையாவது பார்த்து, இன்ஃபாச்சுவேஷன் என்பார்களே, அதுபோல அவளிடம் ஒரேயடியாக மயங்கிப் போனாயா?" என்று சற்றுக் கவலையோடு பவானி விசாரித்தாள்.

"ஏதேது? ஏதோ பழைய ராஜா ராணிக் கதையில் வருமே, தேசாந்திரம் போன ராஜகுமாரன், சுவரில் தீட்டியிருந்த பெண் சித்திரத்தைப் பார்த்து "பெண்ணே கையில் இருக்கும் பூச்செண்டைக் கொடு" என்று புலம்பினானாமே, அவன் போல நான் என்று நினைத்துவிட்டீர்களா? போங்கம்மா. இந்த மாதிரி அசட்டுக்

கற்பனைகளில் இறங்காமல், இந்தக் கல்யாணத்தை நிறுத்துகிற வழியைப் பாருங்கள். சீரியஸ்மா! இப்போது நான் மறுபடியும் அலுவலுக்குச் செல்ல வேண்டும். பாதி வேலையில் விட்டு வந்தேன்! பை...ப்பா, பை..ம்மா!"

தன் வேக நடையுடன் சுதாங்கன், வெளியே காருக்குச் செல்வதைப் பெரியவர்கள் இருவரும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

காரோசை தேய்ந்து மறைந்ததும், கணவரின் புறம் திரும்பி, "என்னப்பா இப்படிச் சொல்லுகிறான்....?" என்று பவானி கலக்கத்தோடு வினவினாள்,

"ஏய், என்ன பெரிய கவலை உனக்கு? ஏதோ ஊடல்ப்பா! அதிலும் முதல் ஊடல் என்று நினைக்கிறேன். அதனால்தான், இப்படிக் குதிக்கிறான். சமாதானம் ஆகும்போது, பையன், அவளிடம் அடியோடு சரணாகதி ஆகிவிடாமல் இருக்க வேண்டும். சும்மாவே, நீயே ஒரு வைரமாலைக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறாய் இவன் வேறு சமாதானப் பரிசு என்று பெரிதாகத் தொடங்கினால், அரைக்கோடிக்கு மேலாகவே பழுத்துவிடும்" என்று வேறு விதமாகக் கவலைப்பட்டார். அவளுடைய கணவர்.

"போங்கப்பா. இதிலே போய்ப் பணக்கணக்குப் பார்த்துக் கொண்டு!" என்று செல்லமாக அலுத்தாலும், பவானிக்கு உள்ளூரக் கவலையாகவே இருந்தது.

சுதாங்கன் ஒரே பிள்ளை,. அடுத்த தலைமுறை என்று அதட்டி வளர்க்கப் பெற்றோர் இருவருக்குமே மனம் வந்ததில்லை. ஒரே வாரிசு என்பதால் அதிகச் செல்லம் கொடுத்துவிடக் கூடாது என்பதில் பெற்றவர்கள் இருவருமே மிகவும் கவனமாக இருந்தார்கள். நட்பாக நினைத்து இலகுவாகப் பழகும் போக்கையே மகனிடம் வளர்த்திருந்தார்கள்.

அதனாலேயே, இப்போதும் திருமணத்துக்காக அவனை அதட்டிப் பணிய வைக்க இருவருமே முயலவில்லை. அதே சமயம், அவசரப்பட்டு அவன் சொன்ன மாதிரி நடவடிக்கை எடுக்கவும், அவர்களுக்கு மனமில்லை.

இது ஒரு சின்ன சலனம். அவசரப்பட்டுக் குட்டை குழப்பாமல் இருந்தால், ஒரிரு நாட்களில் தானாகச் சரியாகிவிடும் என்ற நம்பிக்கையில், சும்மாவே இருந்து விட்டார்கள்.

ஆனால் ஒரு வாரம் கழிந்தபின், "அப்பா. மிஸ்டர் ரகுபதியிடம் சொல்லித் திருமண ஏற்பாடுகளை நிறுத்திவிட்டீர்களா, இல்லையா? அந்தப் பெண், இன்னமும் எனக்கு மெஸேஜ் அனுப்புகிறாளே!" என்று, சிறு எரிச்சலுடன் சுதாங்கன் கேட்கவும், பெற்றோருக்குக் கவலை உண்டாயிற்று.

"என்னடா, ஒரு சிறு சண்டைக்குப் போய், யாராவது திருமணத்தை நிறுத்துவார்களா? எவ்வளவு அலைந்து திரிந்து, உனக்கு எல்லா விதத்திலும் பொருத்தமாக இருக்கிறாள் என்று ரேவதியைத் தேர்ந்தெடுத்தோம்? எங்குமே, ஜெராக்ஸ் காப்பி மாதிரி, இரண்டு பேர் ஒரே மாதிரி நினைக்க முடியாதும்மா. சின்னச் சின்ன சண்டை, சச்சரவுகள் வரத்தான் செய்யும்..." என்ற தந்தையின் பேச்சில், சுதாங்கன் பொறுமையிழந்து குறுக்கிட்டான்.

"சின்னச் சண்டையா? என்னப்பா, ஏதோ சாதாரண ஊடல் என்று நினைத்தீர்களா? அது போலெல்லாம் ஒன்றுமே கிடையாது. எல்லாவற்றையும் சொல்லி, என்னை நானுமே அசிங்கப் படுத்த வேண்டாம் என்று நினைத்தேன். அன்றே முழுதும் சொல்லியிருக்க வேண்டும் என்று, இப்போது புரிகிறது. அன்று என்ன நடந்தது என்பதை, நீங்களும் கேட்டுவிடுங்கள். அன்று அவளிடம் சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்தேன். ஏதோ மால் சுற்றிவிட்டு வரலாம் என்று கேட்டாள் வழக்கம் போலச் சரிதான் என்றேன். சம்மதம் சொல்லும்போதே, உள்ளூரக் கையில் இருக்கும் பணக்கணக்கு ஓடியது. எதற்கும் வேறு பணமும் எடுத்துப் போக வேண்டியதுதான் என்று எண்ணமிடும்போதே, அவள் குரல் மறுபடியும் கேட்டது.

"ரேவதி செய்த தவறு, இணைப்பைச் சரியாகத் துண்டிக்காமலே பக்கத்தில் இருந்த அவளுடைய தோழியிடம் பேசியது. அவள் சொன்னதைக் கேளுங்கள். ஏதோ கினி என்று முடிகிற பெயர். அவளைக் கூப்பிட்டு. "பார்த்தாயா? அந்த இளிச்சவாய், நான் என்ன சொன்னாலும் செய்யும் என்று, சொன்னேன் இல்லையா? பார், அந்த மாலுக்குச் செல்ல ஒத்துக் கொண்டு விட்டதில்லையா? அங்கே



2

போனதும், அப்படியே, அவன் தலையைத் தடவி, அந்த ரூபி மோதிரத்தை இன்று வாங்கி விடுவேன், பார் என்று பெருமையாகக் கூறினாள்.

"எனக்குப் பெரிய அதிர்ச்சி! என்னை மணக்கப் போகிறவள் என்னை இவ்வளவு மட்டமாகவா எடை போட்டிருக்கிறாள் என்று மிகவும் அவமானமாகிப் போயிற்று. அது, அவன் என்ற குறிப்பிடல் வேறு! நேரில் பார்க்கும்போது, எனக்கு முன்னே உட்காரக் கூடத் தயங்குவாள். நான் சொல்லாமல் உட்காரவே மாட்டாள். ஆனால், அப்புறமாகத் தனியே அமர்ந்து, நிதானமாக யோசித்துப் பார்த்தபோதுதான், அவள் என்ன மாதிரி என்னிடம் பணம் பறித்திருக்கிறாள் என்று புரிந்தது. முழுக்க முழுக்கப் பொய், புளுகு, நடிப்பு! உண்மை என்றால் எந்தக் கடையில் கிடைக்கும் என்று கேட்கக் கூடிய ரகம்!. இருந்திருந்து, இவளையா நான் மணப்பது? அப்படி மணம் செய்தால், நம் வீடு என்ன ஆகும்?" என்று ஆத்திரமாகக் கேட்டான் சுதாங்கன்,

"சுதா. ப்ளீஸ்! கொஞ்சம் பொறுமையாக யோசி. ரேவதி அப்படிப்பட்ட பெண் இல்லைம்மா. சும்மா தோழியிடம் பெருமை கூடப் பேசியிருக்கலாம்!" என்றாள் அன்னை.

"அம்மா, நான் அதை யோசித்திருக்க மாட்டேனா? ஆனால் ஒவ்வொரு தரம் அவள் என்னை அதிகப்படியாகச் செலவு செய்ய வைத்த சம்பவங்களைப் பற்றித் தனித்தனியே ஆழ்ந்து யோசித்த பிறகுதான், அவளது இந்தப் பிச்சைக்காரப் புத்தியே எனக்குச் சரியாகத் தெளிவாயிற்று,? என்றான் மகன்.

தந்தை தாய் இருவருமே இன்னமும் யோசிக்கவும், "அம்மா, அப்பா, ஒன்று செய்யுங்கள். இப்போது அவளுக்கு ஃபோன் போட்டு, இப்படியா என்று நீங்களே கேளுங்கள்" என்றதோடு அல்லாமல், தாயின் கையில் இருந்த செல்லை வாங்கி, ரேவதியின் எண்ணை அழுத்தி "அம்மா. அடிக்கிறது, பேசுங்கள்" என்று கொடுத்தான்.

கண்களில் மிரட்சியுடன். "நான் என்னடா..." என்று பவானி தயங்கும்போதே, "சொல்லுங்கள் ஆன்ட்டி..." என்று மெலிந்த குரலில் ரேவதி கேட்டாள்.

மகன் கேட்கச் சொன்ன விக்ஷயம் மறந்து, "என்னம்மா விஷயம்? ஏன் குரல் ஒரு மாதிரி இருக்கிறது?" என்று கனிவாகக் கேட்டாள் பெரியவள்.

இந்தப் பக்கம் மகன் பல்லைக் கடிக்க, "ஆன்ட்டி, அவர் ஏன் என்னிடம் பேசவே மாட்டேன் என்கிறார்? எனக்கு அழுகை அழுகையாக வருகிறதே! என் மேல் அவருக்கு என்ன கோபம்? ஒன்றும் தெரியாமல், எனக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது, ஆன்ட்டி!" என்று அழுகுரலில் கூறினாள்.

"என்ன" என்று சுதாங்கன் சைகையால் கேட்கவும், செல்லைக் கையால் பொத்திக்கொண்டு, "டேய். பாவம்டா. கொஞ்ச நாட்களாக அவ்ளிடம், நீ சரியாகப் பேசவில்லையாம். அழுகிறாள். நீ ஏதோ தப்பாக எடுத்துக் கொண்டாய் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது" என்றாள் பவானி.

"ஆக, உங்களையும் ஏமாற்றிவிட்டாளா? ஜெகஜ்ஜலக் கில்லாடிதான்! ஆனால், எல்லோரையும் எப்போதும் ஏமாற்றிவிட முடியாதுதானே? இப்போதே அவள் குணத்தை உங்களுக்குப் புரிய வைக்கிறேன். இதோ பாருங்கள்" என்று, அவர்கள் எதிரிலேயே ஸ்பீக்கரை ஆன் செய்து. சுதாங்கன் ரேவதியிடம் பேசினான்.

ஆனால், இவன் பெயரைச் சொல்லிவிட்டுப் பேசத் தொடங்கு முன்னரே, ரேவதி மளமளவென்று வேகமாகப் பேசினாள்.

"ஒரு வாரத்துக்குப் பிறகு, அப்பாடி, உங்கள் குரலைக் கேட்கும்போது, எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது தெரியுமா? காதில் தேன் பாய்ந்தது என்பார்களே, அது எப்படி என்று உணர்த்துவது போல..." என்று சொல்லிக் கொண்டே போன அவளது பேச்சில் சுதாங்கன் குறுக்கிட்டு நிறுத்தினான்.

"போதும் ரேவதி, போதும். உண்மையில் காதில் தேனை ஊற்றினால், பிசுபிசுவென்று அருவருப்பாகத்தான் இருக்கும். காதையும் அடைத்துக் கொள்ளும். அதனால், இது போன்ற அசட்டு உவமானங்களைச் சொல்லி அறுக்க வேண்டாம். அத்தோடு, உன்னை மகிழ வைப்பதற்காகவும், இப்போது நான் பேசவில்லை. ஓர் உண்மையை உன் மூலமாகத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால், இந்த முறையேனும், நிஜத்தைப் பேசுவாய்தானே?" என்று ஒரு மாதிரிக் குரலில் கேட்டான்.

"ஐயோ என்னங்க நீங்கள்? நான் எப்போதுமே மெய்தான் பேசுவது என்று உங்களுக்குத் தெரியாதா? அதுவும் உங்களிடம் வேடிக்கைக்குக் கூடப் பொய்யே என் வாயில் வராதே! தெரிந்தும், நீங்கள் கூட, இப்படிச் சந்தேகமாகக் கேட்கலாமா?" என்று வருத்தம் சொட்ட வினவினாள்.

"என்னம்மா செய்வது? என் நிலைமை அப்படி! இப்போது நான் கேட்கலாமா, கூடாதா? அதற்கு முதலில் பதில் சொல்லேன்?"

"என்ன வேண்டுமானாலும், கேளுங்கள் சுதா. பதில் சொல்லக் கடமைப்பட்டவள், நான்" என்று தன் கடமை தவறாமையைப் பற்றி அடிக்கோடிட்டு விளக்கினாள் அவள்.

கண்களை இறுக மூடித் திறந்து, சுதாங்கன் தன்னைச் சமனப்படுத்திக் கொண்டான்.

பிறகு "நீ சொன்னால் சரிதான் ரேவதி, நம்பிக் கொள்கிறேன். நீ எனக்கு ஒரு சின்ன விவரம் மட்டும் தந்தால் போதும். சென்ற வாரம் இதே நாள், மாலையில் நாம் சந்திப்பதாகத் திட்டம் போட்டோம், நினைவிருக்கிறதா? அப்புறம் நான் வரவில்லை சரிதானே?" என்று கேட்டான்.

"ஐயோ, அதை நினைவு படுத்தாதீர்கள். உங்களுக்குப் பிடிக்கும் என்று இள நீல வண்ணத்தில் ஸ்வரோஸ்கிக் கல்லால் பூவேலை செய்த சல்வார் அணிந்து, அதற்குப் பொருத்தமாகக் கிறிஸ்டல்..."

அவள் பேச்சில் இடையிட்டு, "அதிருக்கட்டும். உன் அலங்காரத்தைத் தொடங்கு முன்பாக நடந்ததும் நினைவிருக்கும் தானே?" என்று கேட்டான், சுதாங்கன்.

"அதற்கு முன்பாக என்ன நடந்தது? வந்து... மாலையில் சந்தித்ததும் உங்கள் முகத்தைப் பார்த்ததும் எப்படி என் மனம் சிட்டாய்ச் சிறகடிக்கப் போகிறது என்று கற்பனையில்..."

"கற்பனைக்கு முன் நடந்ததற்கு வாயேன். என்னிடம் பேசி, வெளியே செல்வதை உறுதிப்படுத்திக்கொண்ட பிறகு, உன் தோழி ஒருத்தி அவள் பெயர்கூட ஏதோ ஒரு 'கினியில்' முடியுமே..."

"மந்தாகினி"

"கரெக்ட். அவளோடு பேசியது நினைவிருக்கிறதா?"

"எதைச் சொல்லுகிறீர்கள்? அன்று அவளைச் சந்தித்து, நாங்கள்



இருவருமாக ஐஸ்கிரீம் சாப்பிட்டோம். அந்த நேரத்தில், அவள் சும்மா ஏதேதோ வளவளத்துக் கொண்டே இருந்தாள். எனக்குத்தான், உங்களிடம் பேசிய பிறகு, அவளது பேச்சு ரசிக்கவே இல்லை. சும்மா ஊம் கொட்டிக்கொண்டே இருந்தேன். படுபோர்!"

"பின்னே இருக்காதா? உன்னைப் போல வர்ணிப்பதற்கு, அவளுக்கும் ஓர் இளிச்சவாய்க் வருங்காலக் கணவன் இருந்திருந்தால், அவளுக்கும் சொல்லவும், உனக்கும் கேட்கவும் எவ்வளவோ உற்சாகமாக இருந்திருக்கும்!" என்றான் சுதாங்கன் ஏளனமாக.

அவனது மாறிய குரலில் அவள் திகைத்தாள் போலும்.

ஒரு கணம் தயங்கிவிட்டு "என்னது? இளிச்சவாயா? உங்களை அந்த மாதிரி யாராவது என் முன்னே வந்து சொல்லட்டும். வாயிலேயே ஒன்று போடுவேன்!" என்றாள் அவள், குரலில் மிகுதியாக ஆத்திரம் காட்டி.

"அப்படியானால், உன் வாயிலேயேதான் போட்டுக்கொள்ள வேண்டும். நீதான் உன் தோழியிடம், 'அந்த இளிச்சவாய் நான் என்ன சொன்னாலும் செய்யும்' இன்று அவன் தலையைத் தடவி, ரூபி மோதிரம் வாங்கப் போகிறேன் என்று சொன்னாய். என்ன? நிஜமாகவே, வாயிலே போட்டுக் கொண்டுவிட்டாயா? பதிலையே காணோமே!"

என்ன முயன்றும் குரலில் எகத்தாளம் தெரிவதை, அவனால் தடுக்க முடியவில்லை.

ரேவதிக்கு எப்படிப்பட்ட அதிர்ச்சி என்பதை எதிர்புறத்து மௌனம் தெளிவாகத் தெரிவித்தது.

'பாருங்கள்' என்பது போல சுதாங்கன் தலையசைத்துக் காட்டும்போதே, ரேவதியின் குரல் செல்லில் படபடத்தது. "சுதா, நீங்கள் என்ன, ஏதேதோ பேசுகிறீர்கள்? நான் இது போலெல்லாம் பேசக் கூடியவளா? உங்களிடம் யாரோ, என்னைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்லிக் கலகமூட்டி இருக்கிறார்கள். ஒருவரை ஒருவர் உயர்த்திக் காட்டுவது போலப் பொருத்தமாக ஜோடி சேர்ந்திருக்கிறோம் என்று நிறையப் பேருக்கு வயிற்றெரிச்சல். அந்த மந்தாகினிக்கே அப்படித்தான். அந்தப் பொறாமைக்காரப் பிசாசு சொன்னதை நம்பாதீர்கள். உங்களைப் பற்றி எப்போதும்

பெருமையாகப் பேசுகிறவள், நான். அப்படியிருக்க, எவளோ ஒருத்தி என்னவோ சொன்னார்கள் என்று...."

"எவளோ ஒருத்தி வந்து என்னிடம் ஏன் இப்படிச் சொல்லுவாள்? ஆனால்.... நீ இப்படிச் சொல்லவே இல்லை என்று மட்டும் சொல்ல வேண்டாம். ஏனென்றால், எல்லாம், நான் காதாலேயே கேட்டது. என்ன பதிலையே காணோம்?" என்று அவளை விரட்டினான் சுதாங்கன்.

ஆனால் அப்போதும். "சுதா, அவளிடம் நான் வேடிக்கையாக அல்லவா சொன்னேன்! அதைப் போய் நீங்கள் தப்பாகப் புரிந்து கொண்டு...? என்று அவள் முடிக்கு முன்பே, சுதாங்கன் சீறினான்.

"சீ மூடு வாயை. தப்பாகப் புரிவதற்கு இதில் என்ன இருக்கிறது? அப்பட்டமான வார்த்தைகள். அப்படி நினைத்து, இப்படி எண்ணி என்று மாற்றிக் கூறக் கூட ஒன்றுமே இல்லையே! இந்த மாதிரி மட்டமாக என்னை எண்ணுகிறவளை நான் எப்படி மணக்க முடியும்? தடவ வாகாகத் தலையைக் கொடுக்கிற வேறு ஆளை, நீ பார்ப்பது நல்லது" என்று பேச்சோடு பேச்சாகத் தன் மனதை, மனமாற்றத்தை அவளிடம் தெரிவித்தான்.

"ஐயோ! விளையாட்டுக்காகக் கூட, இது போலெல்லாம் சொல்லாதீர்கள். என் உயிரே போய்விடும்! நான் உங்களை மிகவும் லவ் பண்ணுகிறேன், சுதா. நான்... நான் வேடிக்கையாகத்தான் அவளிடம் சொன்னேன். தப்பாக நினைக்காமல் நான் சொன்னதைப் போய், நீங்கள் தப்பாக எடுத்துக் கொள்ளலாமா? ஒரு சின்ன விஷயம்! இதற்காக எல்லாம் கோபித்தால் நம் வாழ்க்கை சோபிக்குமா...? என்று, எதுகை மோனையோடு அவள் வாதாடிக் கொண்டிருக்கும்போதே, அருவருப்புடன் சுதாங்கன் செல் தொடர்பைக் கட் பண்ணிவிட்டுத் தந்தையைப் பார்த்தான்.

"நீங்களே கேட்டீர்களே! எப்படிப் பேசுகிறாள் பாருங்கள்! என்ன ஆனாலும், இந்தக் கல்யாணத்தை நிறுத்தியே ஆக வேண்டும். அப்பா!" என்றான் உறுதியான குரலில்.

"ஆனால், என்னடா காரணம் சொல்வது? இதைச் சொன்னால், இல்லவே இல்லை என்று சாதிப்பாளே!"

சொல்லாமல் சொன்ன அவரது சம்மதம் புரிய, சுதாங்கனின் முகம்



சட்டெனத் தெளிந்தது.

"அப்பா, உங்களுக்கும் புரிகிறதல்லவா? அவள் எப்படிப்பட்டவள் என்று தெளிவாகத் தெரிகிறதுதானே? இப்படிப்பட்டவள் என்று தெளிவாகத் தெரிந்த பிறகும், அவளோடு எப்படி வாழ்வைப் பிணைப்பது? முடியவே முடியாதுப்பா!" என்றான்.

"அது சரிப்பா, ஆனால் மறுபடியும் கேட்கிறேன், அவளுடைய தந்தையிடம் என்ன காரணம் சொல்வது? மகள் இப்படி என்றால், எந்தத் தகப்பனும் நம்பமாட்டான். இந்த ரேவதி வேறு ரொம்ப... ரொம்பவும் மாற்றிப் பேசுவாள் போல இருக்கிறது...?"

"பொய் பேசுகிறவள் என்று தெளிவாகத்தான் சொல்லுங்களேன், அப்பா." என்றான் பிள்ளை எரிச்சலாக.

"அவள் எப்படியோ போகட்டும். ஏதோ பழைய ராஜாமகன் ஏதோ பெண்ணின் படத்தைப் பார்த்து மயங்கிய கதையை அன்று சொன்னாயே! அது போல, வேறே ஏதாவது காதல் மயக்கம் இருந்தாலேனும், அதை ஒரு காரணமாகச் சொல்லி, ஒரு முயற்சி செய்து பார்க்கலாம். அடுத்தவளை விரும்புகிறவனுக்கு எப்படிப் பெண்ணைக் கொடுப்பது என்று, பெண்ணைப் பெற்றவர் தயங்கி, அவராகவே விலகலாம். மற்றபடி, வில்லங்கம் இல்லாமல் இதிலிருந்து விலகுவது லேசுப்பட்ட காரியம் அல்லப்பா!" என்று கவலைப்பட்டார் பெற்றவர்.

மற்ற இருவரின் முகங்களிலும் கவலை பரவியது.

"என்னவோப்பா, என்னால் இந்தப் பெண்ணை நிச்சயமாக மணக்க முடியாது. அது மட்டும் உறுதி!" என்று, சுதாங்கன் மிகுந்த வெறுப்புடன், உறுதியாகக் கூறி முடித்தான்.



## சுந்தரி நீயும... 3

பெற்றவர்கள் இருவருக்குமே, ரேவதி பேசிய விதம் அதிர்ச்சியாக இருந்தது.

அப்படிப் பேசவே இல்லை என்றதை விடவும், கூட இருந்த தோழியைச் சட்டெனத் தூக்கி எறிந்து பொறாமைக்காரி, பிசாசு என்று பழிசுமத்திய விதம், அவர்களை மிகவும் பாதித்தது.

வருங்காலக் கணவனைப் பற்றித் தன் கீழ்த்தரமான கணிப்பைப் பகிர்ந்து கொள்ளும் அளவு நெருங்கிய சினேகிதி. அவளை எவ்வளவு எளிதாக கை கழுவி விட்டாள்!

அதிலும் மாதவனுக்கு இதில் ரொம்பவே பாதிப்பு. விசுவாசம் என்ற வார்த்தையே, அவளுக்குத் தெரியாது போல இருக்கிறதே என்று வருந்தினார்.

வருங்காலக் கணவனிடமும் அன்பு, விசுவாசம் எதுவும் இல்லை. தோழியிடமும் இல்லை.! பின்னே, இவள் யாருக்குத்தான் உண்மையாக இருப்பாள்?

வாழ்க்கை என்பது எப்போதும் ஒரே மாதிரி இராது. முப்பது ஆண்டுகள் வாழ்ந்தவரும் இல்லை. முப்பது வருஷம் தாழ்ந்தவரும் இல்லை என்று பெரியவர்கள் கூறுவார்கள். இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும்போது, இன்பத்தில் பங்கெடுப்பது போலத் துன்பத்திலும் துணை நிற்பதுதான் உண்மையான இல்லறம்.

ஆனால், ரேவதியிடம் அப்படிப்பட்ட பண்பு இல்லை என்பது தெளிவு.

ஒரு மோசமான நிலைமை நேர்ந்தால், மூழ்குகிற கப்பலின் எலி மாதிரி ரேவதி ஓடி விடுவாள் என்று தெளிவாகத் தெரிந்தது. இந்தப் பெண்ணைப் போய் மகனுக்காகத் தேர்ந்தெடுத்தோமே என்று வருந்தினாலும், காலம் கடக்குமுன், இப்போதே அவளது குணம் தெரிந்தது நல்லது என்று எண்ணினார் மாதவன்.

எனவே, அவர் பெரிதும் மகன் பக்கம் இருந்தார்.

ஆனால், ரேவதியின் அழகில் மிகவும் மயங்கி இருந்ததால், பவானிக்கு, இன்னமும் மனதில் ஆசை அடித்துக் கொண்டுதான் இருந்தது. பையனும் நன்றாக இருக்கிறான். பேரக் குழந்தைகள் அழகழகாகப் பிறக்குமே என்ற ஆசை!

என்ன பெரிய பேராசை? சுதாங்கன் ஒரே பிள்ளை. இங்கு உள்ளது எல்லாமே, அவளதாகத்தானே ஆகப் போகின்றன? அது புரியும்போது, ரேவதி தானாக மாறிவிடுவாள் என்று நம்பினாள்.

அவசரப்பட்டுத் திருமணத்தை நிறுத்தாமல், சற்று நிதானமாக யோசித்து முடிவு பண்ணலாம் என்பது அவளது அபிப்பிராயம். ஆனால், மகன் கொதித்து நின்றதைப் பார்க்கும்போது, அவளால்



வாயைத் திறக்க முடியவில்லை.

அத்தோடு. அவனை இளிச்சவாய் என்றாளே என்று, அவளது தாய் மனதுக்குக் கொஞ்சம் கோபமாகவும் இருந்தது. கல்யாணத்தைக் கொஞ்சம் தாமதப்படுத்தி, ரேவதியைக் கொஞ்சம் வருத்தப்படுத்திவிட்டு, அப்புறமாக அவளை மன்னித்து மருமகளாக்கிக் கொள்ளலாம் என்பது, அவளது யோசனை. இந்த ஒரு மிரட்டலில் அவளும் திருந்தி விடக் கூடும் என்பது அவளது ஆசை கலந்த நம்பிக்கை.

ஆனால். இப்போது அது பற்றி வாயைத் திறந்தால், அப்பாவும் மகனும் சேர்ந்து அவளைக் கிழிகிழியென்று கிழித்து விடுவார்கள் என்று புரிந்து வாளா இருந்தாள்.

மகனின் விருப்பத்தை ஏற்றுவிட்ட மாதவன், அதை நிறைவேற்றுவதில் உள்ள சிக்கல்களைப் பற்றி ஆலோசிக்கலானார்.

முதலில் ரேவதியுடைய தகப்பனாரைச் சமாளிப்பது பெரிய பிரச்சினையாக இருக்கக் கூடும். மான நஷ்டம் அது இது என்று அவர் ஏதாவது தகராறு பண்ணக் கூடும் என்று மாதவன் எதிர்பார்த்தார்.

"அதெப்படிப் பண்ணுவார்? வெறுமனே பூ வைத்தோம் அவ்வளவுதானே? நிச்சயதார்த்தம் கூட, திருமணத்தை ஒட்டியே செய்வதாகத்தானே என்று ஏற்பாடு? எழுத்து மூலமாகவோ, சம்பிரதாயச் சடங்குகள் நடத்தியோ நாம் எதையும் செய்ய வில்லையே! பிறகென்ன பிரச்சினை பண்ண முடியும்?? என்றான் சுதாங்கன்.

மறுப்பாகத் தலையசைத்தார் தந்தை "சட்ட நுணுக்கங்களின்படிப் பார்த்தால், நம் மீது குற்றம் சாட்டமுடியாதுதான். ஆனால், மனச்சாட்சிப்படி யோசித்தால், அதுவும் அவர்கள் நிலையிலிருந்து யோசித்தால், பெரிய சிக்கல்தானே? எப்படியும் அவர்கள் வீட்டுக்குப் போய், நகை போட்டு, இவள் மருமகள் என்று உறுதி செய்திருக்கிறோம். அதன் மூலமாக, இது பெண், இது பிள்ளை என்று முக்கியமான எல்லோருக்கும் தெரிவித்தோம்தானே?"

"எனக்கென்னவோ, வீண் பிரச்சினையைக் கிளப்பாமல், பேசாமல் கல்யாணத்தை முடித்த பிறகு. அவளிடம் சொல்லித் திருத்துவது மேல்

என்றே தோன்றுகிறது" என்று. சந்தடி சாக்கில், பவானி தன் விருப்பத்தை வெளியிட்டாள்.

"அம்மா. உங்கள் திருமணத்துக்கு முன், அப்பா உங்களை இது போல அவமானப் படுத்தியிருந்தால், நீங்கள் இப்படிப் பேச மாட்டீர்கள்" என்றான் மகன் அடக்கிய ஆத்திரத்துடன்.

தொடர்ந்து. "யோசியுங்கள் அம்மா. இந்த ஒரு தோழியிடம், அதுவும் அவ்வளவாக நெருக்கம் இல்லாத ஒருத்தியிடம் அந்த ரேவதி பேசியதைத் தற்செயலாக நான் கேட்டுவிட்டேன். இன்னும் எத்தனை பேரிடம் இது போலப் பெருமை பேசினாளோ? இந்தத் திருமணம் நடந்தால், அவர்கள் அத்தனை பேரும் என்னை ஏளனமாகத்தானே எண்ணுவார்கள்? என்னையே எடுத்துக் கொள்ளுங்களேன், ஒரு சாதாரணமான கேலி கூட, எனக்குத் தப்பாகத்தான் தெரியும். அதற்கு இந்தச் சித்திரவதை? இந்த மான, அவமானத்தை ஒதுக்கினால் கூட, ஒரு பிரச்சினை என்று வரும்போது, அதைச் சமாளிப்பதற்கு, என்னவெல்லாம் புரட்டிப் பேசினாள், பாருங்கள்! நம் வீட்டுக்கும் இவளுக்கும் ஒத்தே வராதும்மா. இப்போதே திருமணத்தை நிறுத்தினால், அந்த ஒரு பிரச்சினையோடு, விஷயம் முடிந்து போகும். ஆனால், அவள் உரிமையோடு இந்த வீட்டுக்குள் வந்தால், தினம் தினம் பலப்பல பிரச்... வாழ்க்கையே பிரச்சினை ஆகிவிடும்மா. அதனால் ரேவதியை மணப்பது என்று மட்டும் தயவு பண்ணிப் பேசாதீர்கள்" என்று, நீளமாகப் பேசி முடித்தான்.

"எனக்கும் அப்படித்தான் படுகிறது பவானி" என்று குடும்பத் தலைவரும் கூறிவிடவே, அதற்கு மேல், திருமணத்தை நடத்துவது என்ற பேச்சு எழவில்லை.

ஆனால், திருமணத்தை எப்படித் தடுத்து நிறுத்துவது என்பது பற்றி எந்த முடிவுக்கும், அவர்களால் வர முடியவில்லை.

உண்மையே சொன்னாலும், அதை நிரூபிப்பது இயலாது. பெண்ணைப் பெற்ற மனிதருக்கு, மகள் சொல்வதுதான் மெய்யாகத் தோன்றும். மகளோ, சகட்டு மேனிக்குப் புளுகுகிறவளாக இருக்கிறாள்.

என்ன காரணம் சொன்னாலும், அது ஏற்கத் தக்கதாக, மாதவனுக்கே தோன்றவில்லை!

பெண்ணைப் பிடிக்கவில்லை என்றால், முதலில் பார்த்தபோது, கண்களைப் பிடரியிலா வைத்திருந்தாய் என்ற கேள்வி வரும். அதைப் பொறுத்தாலும், எந்த வகையிலும் மறுக்க முடியாத, பெண் வீட்டினர் ஒத்துக்கொள்ளும் படியான எந்தக் காரணத்தையும், அவர்கள் மூவரில் யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த நிலையி,. ரேவதி வேறு விதமாகச் செயல்பட்டாள்,

அவளுடைய தந்தை ரகுபதி மாதவனுக்கு ஃபோன் பண்ணி, 'மாப்பிள்ளை'க்கு சூட் தைப்பதற்குத் துணி தேர்ந்தெடுத்து, அளவு கொடுக்க வருவதற்கு, சுதாங்கனுக்கு எப்போது நேரம் கிடைக்கும் என்று விசாரித்தார். "கடைசி நேரத்தில் அவசரப்படாமல், இப்போதே கொடுத்துவிட்டால், தையலில் ஏதாவது தப்பு இருந்தாலும் சரி பண்ண அவகாசம் இருக்கும் என்று மகள் அபிப்பிராயப்படுகிறாள். அப்படியே அழைப்புப் பத்திரிகை வாசகம் பார்த்துவிட்டால், அதையும் அச்சுக்குக் கொடுத்து விடலாம். தாலிக்குப் பொன் உருக்கியதும், அழைப்புக் கொடுப்பதற்குச் சரியாக இருக்கும். தொழில் தொழில் என்று நான் போனதே, எனக்குத் தெரியவில்லை. நல்லவேளை, எல்லாம் ரேவதிதான் நினைவு படுத்தினாள்!" என்று பெருமையோடு தெரிவித்தார்.

வருங்கால மருமகளின் முன்னெச்சரிக்கை பற்றி, மாதவன் குடும்பம் மகிழும் என்பது, அவரது எதிர்பார்ப்பு!

பின்னணியில் இருந்த ரேவதியின் கை புரிய, மாதவன் மகனை எச்சரித்தார்.

"அன்று எங்கள் முன்னிலையிலேயே திருமணம் ஒத்து வராது என்று அவளிடம் நேராகச் சொன்னாய். ஆனால் அவளோ அதைக் கொஞ்சமும் பொருட்படுத்தாமல், பின்னணியில் இருந்து திருமண வேலைகளைத் துரிதப்படுத்துகிறாள். இந்தக் குணம், வாழ்க்கைக்குச் சற்றும் சரியில்லை. இனியும் தள்ளிப் போடாமல், நேரிலே போய்ச் சொல்லிவிட்டு, என்னவானாலும் வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியதுதான்" என்றார் மகனிடம்,

சுதாங்கனுக்கு எல்லாமே அருவருப்பாக இருந்தது. ஆனால், அடைத்துக்கொண்ட சாக்கடையைச் சுத்தம் செய்வது போலச் செய்தே தீர வேண்டிய கட்டாயம்! அதற்கு அஞ்சி, நடப்பது நடக்கட்டும் என்று சும்மா இருந்து ரேவதியை மணப்பதோ, தன்

கையாலேயே தூக்கு மாட்டிக் கொள்வதற்குச் சமானம்! வாழ்க்கை முழுதுமே கெட்டுவிடும்.

தந்தை சொன்னது போலச் செய்ய வேண்டியதுதான். ஆனால், அவள் வீட்டுக்குப் போய், விஷயத்தைச் சொல்லும்போது, அந்த ரேவதி என்னென்ன டிராமாப் போடுவாளோ என்று எண்ணிப் பார்க்கவே அவனுக்குக் கூசியது.

பல முறை அவளை வெளியே கூட்டிப் போயிருக்கிறான். எல்லாமே அவளது விருப்பப்படி, அவளுக்கு எதையாவது வாங்கிக் கொடுப்பதற்காகச் சென்றதுதான். ஆனால், அந்த வேளைகளில் தப்பாக எதுவும் நடந்ததாக அவள் சொன்னால் என்ன ஆகும்? அவளோ, பொய் சொல்ல அஞ்சக் காணோம்!

ஆனால், அதற்குப் பயந்தால், வாழ்க்கை முழுவதும் வெறும் நாடக மேடையாகி விடும். வீட்டுக்குள் நடிப்பது கூடாது என்று வளர்ந்த விதத்துக்கு, வாழ்வு வெறுத்துவிடும்!

என்ன செய்வது, எப்படிப் பேசுவது என்று அதே யோசனையும் அலுவலக வேலைகளும் முட்டிக்கொண்டு நின்றன.

இரண்டுமே அரை குறையாகிவிடும் என்று உணர்ந்த சுதாங்கன் ஒரு முடிவுக்கு வந்தவனாக எழுந்தான். செயலாளரை அழைத்து, அடுத்து செய்ய வேண்டிய பணிகளைப் பார்த்துக் கொள்ளுமாறு ஒப்படைத்துவிட்டு, அலுவலகத்தை விட்டுக் கிளம்பினான்.

சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்தில், ஒரு பெரிய பூங்கா இருந்தது. அந்தப் பகுதியைக் குடியிருப்பாக்கத் திட்டமிட்டபோதே ஏற்படுத்திய பழைய பூங்கா. நடை பாதையும், உட்கார இருக்கைகளும், நிழல் தரும் பெரிய மரங்களுமாக, அங்கே போய்ச் சற்று நேரம் அமர்ந்திருந்தாலே, மன இறுக்கம் தளர்வதை உணர முடியும்.

தொழிலில் இறங்கிய புதிதில், சுதாங்கன் அடிக்கடி அங்கே சென்று அமர்திருப்பான். திரும்பி வரும்போது, உற்சாகம் திரும்பியிருக்கும். இன்றும், அதையே எதிர்பார்த்து, அங்கே சென்று, வழக்கமான மரத்தடியில் கிடந்த சிமெண்ட் பெஞ்ச் மீது அமர்ந்தான்.

ரேவதி வீட்டில் என்னென்ன பேச்சு எழக்கூடும், அவைகளை எப்படியெப்படி சமாளிப்பது என்று மனதுள் ஒத்திகை நடந்தது.

அலுப்புடன் யாரோ 'உச்சு'க் கொட்டும் சத்தம் சற்று அருகிலேயே



கேட்டு, அவனது கவனத்தைக் கலைத்தது.

ஆக, அவனைப் போலவே வேறு யாரோவும் அலுப்பும் வெறுப்புமாக இங்கே வந்திருப்பார்கள் போலும்! பாவம்! என்ன கஷ்டமோ?

தன்னையறியாமல், சுதாங்கனின் கவனம் அந்த 'உச்சு'க் கொட்டியவளின் பேச்சில் லயித்தது.

"சே! தப்புப் பண்ணிவிட்டோம் பாலும்மா. ஊரிலிருந்து நாம் இப்படி ஓடி வந்தே இருக்கக் கூடாது. ஏதோ பண்ணிப் போராடி இருக்க வேண்டும். எவ்வளவு சொத்து! நம் சொந்தச் சொத்து! அவ்வளவையும் விட்டு விட்டு வந்ததை நினைத்தால் மனசு கொதிக்கிறதுடா. இப்போது, இந்தப் பத்திருபது லட்சங்களுக்காக இப்படி ஏங்க நேர்ந்திராதே!" என்று கோபமும் வருத்தமுமாக நொந்து வருந்தியது ஒரு பெண் குரல்.

ஆக, இவர்களுக்குப் பணம் தேவை. குறைந்தது பத்து லட்சங்கள், அந்த ரேவதிக்காக அனாவசியமாக அழுதானே!

"சீ! சும்மா உளறாதேக்கா! இன்று நாம் உயிரோடு இருக்கிறோமே, அதுவே பெரிதில்லை?" என்று அதட்டியது ஓர் ஆண் குரல்,

அக்காவும் தம்பியும் போலும்...

அதட்டியதோடு முடிக்காமல், தம்பி தொடர்ந்தான், "அந்தச் சொத்துக்காக நம் உயிரையே எடுத்து விடுவார்கள் என்பதால்தானே, ஒளிந்து மறைந்து ஓடி வந்தோம்! இந்த மூன்று ஆண்டுகளாக நிம்மதியாகத்தானே இருந்தோம்? உன் உழைப்பில். இப்போது என் படிப்பும் முடிந்து விட்டது..."

"என் உழைப்பு மட்டுமாடா? நீயும்தான் காலையில் பத்திரிகை போட்டாய், மாலையில் லைப்ரரியில் வேலை பார்த்தாய், பார்க்கிறாய், பாதிக்கு மேல், உபகாரச் சம்பளம் வேறு. அவை எல்லாம் உன் உழைப்புதானே? இப்போது அதற்குப் பலன் கிடைக்கிறபோது, இந்தப் பணம் இல்லாமல், அத்தனையும் ஒன்றுமில்லாமல் போகப் போகிறதே.." என்று வருந்தினாள் தமக்கை.

"போகட்டும் அக்கா. அந்த வெளிநாட்டுப் படிப்போ வேலையோ இல்லாவிட்டால் போகிறது. இங்கேயே ஏதாவது சின்னதாக ஒரு வேலையைப் பார்த்துக் கொண்டு..."

"ஐயோ. அதுதானேடா என்னால் தாங்க முடியவில்லை! உன் திறமைக்காகப் படிப்புச் செலவு முழுவதையும் உபகாரச் சம்பளமாகத் தருகிறார்கள். தங்கும் செலவு கிடையாது. இதற்காக என்னமாகப் படித்தாய்! அப்பா அம்மா நமக்கு என்று விட்டுப் போன பணம் சில கோடிகளில் இருந்தபோதும், அதில் சிறிதளவு பணம் இல்லாமல் உன் உழைப்பு முழுதும் வீணாவது என்றால்... என்னால் தாங்கவே முடியவில்லையே! சும்மாப் போய், அந்தக் கிழட்டு மாமாவை மணந்துகொள்ளலாமா என்று வருகிறது, பாலா!"

அவள் முடிக்கு முன்னரே, தம்பிக்காரன் மறுபடியும் அதட்டினான். "அக்கா, இன்னொரு தடவை இந்தப் பேச்சுப் பேசினால், எனக்குக் கெட்ட கோபம் வரும். அது மட்டுமல்ல, அந்தக் கண்றாவிக் கல்யாணம் நடந்தாலுமே, அதன் பிறகும், நம் உயிருக்கு உத்திரவாதம் கிடையாது என்று, உனக்குத் தெரியாதா? அந்த மோகினி, மாமாவுடைய ஆசைநாயகி, மாமாவுக்கு ஓதியதைக் கேட்டுவிட்டுத்தானே, விழுந்தடித்துக்கொண்டு ஓடி வந்தோம்? எல்லாம் மறந்து உளறுகிறாயே! விடு. அந்தப் பேச்சையே விட்டுவிடு! அடியோடு மறந்தும் விடு."

ஓ! இவ்வளவு கதை இருக்கிறதா? ஆசை நாயகி உள்ள கிழட்டு மாமா! சொத்துக்காக ஓர் இளம் பெண்ணைக் கல்யாணம் செய்து, அதன் பின் கொலை செய்யவும் துணிந்தவன்! அவன் பிடியில் இருந்து தப்பி... பாவம்தான்!

சிறு அமைதியின் பின், பெண் குரல் பேசியது. "ஆமாம்டா, நம் அம்மா அப்பா வைத்துவிட்டுப் போன சொத்து முழுதும் போனாலும் பரவாயில்லை என்று உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடி வந்தோமே! உன் படிப்பு, அதைச் சார்ந்த எதிர்காலம் எல்லாம் வீணாகப் போகிறதே என்ற வேதனையில், அதைக் கூட மறந்து, ஏதேதோ உளறிவிட்டேன். பார்க்கலாமடா, இன்னும் ஏதாவது பாங்கில் கடன் கிடைக்கிறதா என்று பார்ப்போம்" என்றாள் அவள்.

இப்போது நம்பிக்கையற்றுப் பேசினான் தம்பி "அட போக்கா. இந்த ஒரு மாதமாக எத்தனை பாங்க்குகளில் கேட்டுவிட்டோம்! அவர்களுக்கு டெப்பாசிட் கட்ட வேண்டும். அதில்லாமல், ஒன்றும் நடக்காது. இப்படிக் கல்விக் கடனுக்காக அலைந்து நாட்களை



வீணாக்குவதை விடப் பேசாமல் ஒரு வேலையைத் தேடுவது மேல். முதலிலேயே அதைச் செய்திருந்தால், இப்போது ஒரு மாத ஊதியம் கூடக் கைக்கு வந்திருக்கும்... என்ன, அந்த மாதிரிப் பணம் வராது. அதுதானே? போகிறதுக்கா..."

குரலில் கசப்பும் விரக்தியும் இழையோடுவதைப் பாவம், அந்தப் பையனால் தவிர்க்க முடியவில்லை என்று சுதாங்கனுக்குப் புரிந்தது.

"ஆனாலும், இந்த அளவுக்கு வந்துவிட்டு, எப்படி பாலா விடுவது? விட நேருமோ என்று நினைக்கவே வலிக்கிறதே. பார்ப்போமடா. இன்னும்... மிச்சம் மீதி இருக்கும் பாங்க் கதவுகளையும் தட்டிப் பார்ப்போம். யாருக்காவது மனம் இளகாமலா போகும்? பார்க்கலாம். நம்பிக்கையை விட்டுவிடாதே, பாலா!" என்று தேற்றியவளின் குரலிலும் பெரிதாக நம்பிக்கை இருக்கவில்லை.

உணர்ந்தவனாக. "சே! இந்த வாய்ப்பு நமக்குக் கிடைக்காமலே போயிருக்கலாம். குறைந்த பட்சமாக, கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே என்ற இந்தத் தவிப்பாவது, இல்லாமல் போயிருக்கும்!" என்ற தம்பியின் குரலில் இருந்த நிராசை, முழுக்க அன்னியனான சுதாங்கனையே உலுக்கியது.

இவனுக்கு ஏதாவது உதவி செய்ய முடியுமா என்ற யோசனை அவனுள் இழையோடும்போதே, பையனுடைய தமக்கையின் குரல் சீறியது.

"சீச்சீ பாலும்மா, இப்படியா உளறுவாய்? இப்போதைக்கு நல்ல பலன் கிடைக்கிறதோ இல்லையோ, ஆனால், இந்த அளவுக்கு உன்னால் முடியும் என்ற தன்னம்பிக்கை கிடைத்திருக்கிறது அல்லவா? அது எவ்வளவு பெரிய விஷயம்! அத்தோடு... அத்தோடு, நீ வேண்டுமானால் பார்! கட்டாயம், கடவுள் நமக்கு எப்படியாவது உதவி செய்வார். இவ்வளவு தூரம் கூட்டி வந்தவர், இப்போது கைவிட மாட்டார். பாரேன், எங்கிருந்தாவது, எப்படியேனும் நமக்கு உதவி கிடைக்கச் செய்வார்!" என்ற குரல், செய்யாமல் போய்விடுவாயா என்று கடவுளையே கேட்டது.

அந்த அக்காக்காரி பார்வைக்கு எப்படி இருப்பாள்? ஆனால், அவளது தோற்றம் எப்படி இருந்தாலும், அவனது பிரச்சினைக்கு. அவர்களது துன்பத்தில் ஒரு விடை கிடைக்கக் கூடுமோ?

கூடவே, அவர்களது சிக்கலுக்கும் தீர்வு கிடைக்கும்!

ஆனால், வெறும் குரலை வைத்து ஒரேயடியாக யாரையும் நம்ப முடியாது. நம்பவும் கூடாது. இவள் இன்னொரு ரேவதியாக இருக்க மாட்டாள் என்று என்ன நிச்சயம்?

'வாணலிக்குத் தப்பி அடுப்பு நெருப்பில் விழுந்த மாதிரி' என்பார்களே, அது போல ஆகி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். புதிய பிரச்சினை எதுவும் உருவாக முடியாத அளவுக்கு, மிகவும் எச்சரிக்கையோடு திட்டமிட வேண்டும்.

சும்மாவேனும் சொன்ன பழங்கதைதான். இன்றைக்கேற்றபடி அதைப் பயன்படுத்தினால்?

அந்த ரேவதியிடம் இருந்து மீள வாய்ப்புக் கிடைக்குமே!

வேகமாக யோசித்தவனுக்கு, மரத்தின் மறுபுறத்தில் இருந்து சில நிமிஷங்களாகப் பேச்சுச் சத்தம் கேட்கவில்லை என்று தோன்றியது.

ஐயோ! அவர்கள் போய்விட்டிருந்தால்? முகத்தைக் கூடப் பார்க்கவில்லையே! எங்கே போய், எப்படித் தேடுவான்?

பதறியடித்து, மரத்தைச் சுற்றிக்கொண்டு ஓடி வந்து பார்த்தால், இரண்டு பேர், ஒல்லியும் உயரமுமாக ஆணும் பெண்ணும், ஏதோ பைகளை எடுத்துத் தோளில் மாட்டிக்கொண்டு கிளம்புவது தெரிந்தது.

"ஹே... ஒரு நிமிஷம்!" என்று அவசரமாக அழைத்து, அவர்களை நிறுத்தினான் சுதாங்கன்.

தலையை மட்டும் லேசாகத் திருப்பி. 'எங்களையா' என்பது போல இருவரும் பார்த்தனர். அப்படிப் பார்க்கும்போதே, அவர்கள் இருவரின் பார்வையும் அவனை ஊடுருவிக் கணிப்பதை, சுதாங்கனால் உணர முடிந்தது.

ஆனால், அவனது பார்வையும் அதையே செய்து கொண்டிருந்தது என்பதால், உள்ளூர மனம் லேசாவது போலவே அவன் உணர்ந்தான். கொஞ்சம் சிரிப்புக் கூட வரும்போல இருந்தது.

அடக்கிக்கொண்டு, "ஆமாம். உங்களைத்தான் கூப்பிட்டேன்" என்றான் சுதாங்கன்.

இருவரின் பார்வையும் இன்னும் அதிகமாக அவனைத் துளைத்தன. வெளிப்படையான சந்தேகத்துடன். "ஏன்?" என்று கேட்டான் பையன்.

பையன்தான் வெடவெடவென்ற உயரத்துடன், மிஞ்சி மிஞ்சி



இருபதை எட்டியிருக்கக் கூடும். வயதை மீறிய கவலைக் கோடுகளை அந்த இளம் முகத்தில் காண்கையில் சுதாங்கனுக்கே பாவம் போல இருந்தது.

ஆனால், அவன் செய்ய முனைவது, வெறும் ஓர் உடன்படிக்கை. இரு சாரரின் தேவைகளையும் நிறைவேற்றக் கூடிய ஒப்பந்தம். அவ்வளவே. இதில் பாவ புண்ணியத்துக்கோ, பரிவுக்கோ இடமில்லை.

முதலில், பாலு... பாலா என்கிற இந்தப் பையனின் கேள்விக்கு நம்பும்படியாகப் பதில் சொல்ல வேண்டும். ஒட்டுக் கேட்டதாகத் தப்பாக எண்ணி, ஒதுக்கி விடாதபடி பேச வேண்டும்.

அவனுடைய தமக்கையின் பெரிய கண்கள் தன்னை ஆராய்ச்சி செய்வதைக் கவனியாதவன் போல, அந்தப் பாலாவையே நோக்கி, சுதாங்கன் பேசினான்.

"முதலில், நான் வேண்டும் என்றே ஒட்டுக் கேட்கவில்லை என்பதை, நீங்கள் இருவரும் புரிந்துகொள்ள வேண்டும். நானும், என் பிரச்சினை தீருவதற்கு ஒரு வழி காணாமல் திணறிப் போய், மன இறுக்கம் தளர்வதற்காகத்தான் இங்கே வந்து, மரத்தின் அந்தப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தேன். அப்போது, உங்கள் பேச்சு என் காதில் விழுந்தது, ஒருவேளை, நாம் இரு சாராரும் ஒருவருக்கொருவர் உதவினால், அவரவர் கஷ்டங்கள் தீரக் கூடுமோ என்று ஒரு யோசனை எனக்குத் தோன்றியது. அதைச் சொல்லவே அழைத்தேன்" என்று, அவர்களை அழைத்ததன் காரணத்தை, மறைப்பதற்கு எதுவும் இல்லை என்பது போலத் தெளிவாகத் தெரிவித்தான்.

ஆனால், உடன்பிறந்தோர் இருவரும் ரொம்பப் பட்டிருப்பார்கள் போல!

சட்டென ஓர் எட்டு எடுத்து வைத்துத் தமக்கையை மறைத்தாற்போல நின்று. "எங்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. நீங்கள் போகலாம்" என்று திரும்பி, தமக்கையின் கையில் பிடித்து, "வாக்கா, நாம் கிளம்புவோம்" என்று முடித்தான் தம்பி.

# சுந்தரி நீயும்... 4

என்னடா இது? தொடங்கவே விட மாட்டான் போல இருக்கிறதே. இதற்குள்ளாகவே இப்படிப் பேசுகிறவன், முழுதும் கேட்டால் என்ன செய்வான், எட்டி ஓர் அறை வைத்தாலும் வைப்பானோ?

சுதாங்கன் யோசிக்கையில், அந்தப் பெண், தம்பியிடம் பேசினாள்.

"சற்றுப் பொறு பாலா. முதலில், அவர் என்ன சொல்கிறார் என்று கேட்கலாம். ஒருவேளை, அவர் சொல்வது போல ஒரு நல்ல தீர்வு கிடைக்கக் கூடுமோ என்னவோ? எதற்கும், என்ன என்று கேட்பதில் என்ன இருக்கிறது? பிடிக்கவில்லை என்றால், ஒத்து வராது என்று விலகிவிடப் போகிறோம். அது, நம் கையில்தானே இருக்கிறது? நீங்கள் சொல்லுங்கள் சார்" என்றாள், அவனை நோக்கி.

என்ன கூர்மையான பார்வை! இவளிடம் பொய் சொல்லுகிறவர்கள் பாடு திண்டாட்டம்தான் என்று, சுதாங்கனுக்குத் தோன்றியது.

எனவே, எந்த விதமான நகாசு வேலைகளும் இல்லாமல், "பாருங்கள் எனக்கு இன்னும் ஒரு மாதத்தில் திருமணம் நடக்க இருக்கிறது. அதை நிறுத்த வேண்டும்" என்று உண்மையை அப்படியே தெரிவித்தான்.

"வாயைத் திறந்து முடியாது என்று சொல்ல வேண்டியதுதானே? உங்களை என்ன கையைக் காலைக் கட்டியா தாலி கட்ட வைக்க முடியும்? பெண்களை வேண்டுமானால், அப்படிச் செய்ய முடியும்" என்றான் பையன் கசப்புடன்.

அது போல ஏற்பாடு வேறு நடந்திருக்குமோ? அதுவும், இங்கே வந்தே மூன்று ஆண்டுகள் ஆனதாகப் பேசினார்களே! அதற்கும் முன்பாக என்றால். எவ்வளவு சின்ன வயதில், அந்தத் துன்பம் நேர்ந்திருக்க வேண்டும்!

உள்ளூரப் பரிதாபப்பட்டபடி, சுதாங்கன் தன் பிரச்சினையைச் சொன்னான்.

"அப்படிக் கட்டாயக் கல்யாணமில்லை. ஆனால், என் பெற்றோர், பெண் வீட்டாருக்குச் சரியான காரணம் காட்ட வேண்டும் என்கிறார்கள்"



"காரணமே இல்லாமலா, இவ்வளவு நெருங்கி வந்த கல்யாணத்தை மறுக்கிறீர்கள்?"

சுரு சுருவென்று இப்படி நோண்டுகிறானே என்று எழுந்த எரிச்சலை அடக்கிக்கொண்டு, சுதாங்கன் அமைதியாகவே பதில் சொன்னான். "அந்தப் பெண்ணின் வெளித் தோற்றத்தில் சற்று ஏமாந்துவிட்டோம். இப்போது சுயரூபம் தெரிந்த பிறகு, முகத்தைப் பார்க்கவே அருவருப்பாக இருக்கிறது."

"அந்தப் பெண்ணின் சுயரூபம் எப்படித் தெரிந்தது என்பதெல்லாம் எங்களுக்கு அனாவசியம். ஆனால், இதில் எங்கள் பங்கு என்ன?" என்று, அவனை நேராக நோக்கிக் கேட்டாள் பாலாவுடைய தமக்கை.

சிக்கலான விஷயத்தைச் சொல்ல வேண்டிய தருணம். அதுவும், சும்மாவே எகிறுகிறவன். இந்தத் தங்கத் தம்பி!

"வந்து... மிஸ்...."

"என் பெயர் மதிவதனி. மேலே உங்கள் திட்டம் பற்றிச் சொல்லுங்கள்" என்றாள் அவள்.

பெயருக்கேற்றபடி அவளது முகம் அழகாகவே இருந்தாலும், அது பற்றி இப்போது குறிப்பிடுவது தவறாக முடியும் என்று உணர்ந்து, சுதாங்கன் அதைத் தவிர்த்தான்.

"வந்து, மிஸ் மதிவதனி, இப்போது நான் சொல்வதைக் கேட்டு நீங்கள் இருவரும் கோபப் படக் கூடாது. ஏனெனில், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு வழியாகத்தான் இதைச் சொல்கிறேனே தவிர, மற்றபடி எல்லாம் வெறும் நாடகம்தான்..."

"இந்த முன்னுரையைத் தாண்டி விஷயம் என்னவென்று, எப்போதாவது சொல்வீர்களா, மாட்டீர்களா?"

"ஷ்... பாலா, சற்று அமைதியாக இரேன். ஏதோ, அவருக்கே சொல்லச் சங்கடமாக இருக்கிறது போல. என்னதான் சொல்கிறார் என்று முழுதாகக் கேட்போமே!" என்றாள். மதிவதனி.

நன்றியுடன் அவளை நோக்கி. "நிஜம்தான். சொல்லத் தயக்கமாகத்தான் இருக்கிறது. இது ஒன்று தவிர வேறு வழி இல்லை என்பதால்தான்..." என்ற சுதாங்கனின் பேச்சில், பாலா பொறுமையிழந்து குறுக்கிட்டான்.

"இன்னும் எவ்வளவு நேரம், இதையே ஜவ்வு இழுப்பீர்கள்?"

"நான் சொல்லி முடிக்கிறவரை, தயவு பண்ணிப் பேசாதிருக்கிறாயா?" என்று சுதாங்கன் முடிக்குமுன், பாலன் மறுபடியும் குறுக்கிட்டான். "ஏன்? உருப்போட்டது, பாதியில் மறந்து போகும் என்று பயமா?"

"பாலா, ப்ளீஸ் பேசாதிரு. இவர் சொல்வது எவ்வளவு மோசமான யோசனை என்றாலும், நாம் சம்மதித்தால்தான், அது நடக்கும். ஒரு வேளை, சற்று முன் நான் உன்னிடம் சொன்னது போல, இது கடவுள் நமக்குக் காட்டும் வழியாக இருக்குமோ என்ற சிறு சந்தேகத்தில்தான், யார் என்னு கூடத் தெரியாத அன்னியரான இவரது பேச்சை நானுமே நின்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆனால், அவரைச் சொல்லவே விடாமல் நீ குறுக்கே குறுக்கே பேசிக் கொண்டிருந்தால் எப்படி?" என்று குரலில் சிறு கண்டிப்புடன் கேட்டாள் மதிவதனி.

குரலை உயர்த்தாமலே, என்னமாய்க் கண்டிக்கிறாள் என்று வியந்தான் சுதாங்கன்.

கண்டனம் அவனுக்கும்தான், "சாரிக்கா" என்று தம்பி ஒதுங்க, மற்றவனும் வருத்தம் தெரிவித்தான்.

"சாரி, முதலிலேயே நான் சொல்லியிருக்க வேண்டும். 'பவானி எண்டர்பிரைசஸ்' என்று ஒரு நிறுவனம். அண்ணாசாலையில் அலுவலகம் இருக்கிறது. தந்தை தொடங்கியது. நான் அதில் நிர்வாக இயக்குனர். பெயர் சுதாங்கன்" என்று தன்னைப் பற்றிய விவரத்தை முதலில் தெரிவித்தான்.

"நான் பணி புரியும் நிறுவனத்தில், இந்தப் பெயர் கேள்விப்பட்டிருக்கிறேன். இனி, இப்போதைய விவரம் சொல்கிறீர்களா?"

இன்னும் நேரத்தை வீணாக்காதேடா, மடையா என்கிறாளா?

எப்படியும், தான் ஒன்றுமில்லாத காமாசோமா அல்ல என்றாகி விட்டதால், தயக்கம் அகன்று, சுதாங்கனும் அவனது திட்டத்தை விளக்கினான்.

"இந்தக் கல்யாணத்தை நிறுத்துவதற்காகக் கொஞ்ச நாட்கள், மதிவதனி என்னை... என் காதலியாக நடிக்க வேண்டும்"

"தூத்தேறி! திமிரைப் பார்த்தாயாக்கா!" என்று சீறியவாறு, குத்துவது போலக் கையை நீட்டிக்கொண்டு ஓர் எட்டு முன்னே வந்தான் பாலா.



இந்த ஒரு விளைவை எதிர்பார்த்தவன் போல, சுதாங்கனும் தயாராகவே இருந்தான். அவனது ஒரு குத்தை, இந்த ஒல்லிப் பிச்சு தாங்குவானா?

அதையே எண்ணியவள் போல, தம்பியின் கையைப் பற்றி, மதிவதனி தடுத்தாள்.

"சும்மா இரு, தம்பி. நான்தான் ஏற்கனவே சொன்னேனே, நாம் ஒத்துக் கொள்ளாமல், எதுவும் நடக்காது. அதனால், முதலில் அவரது திட்டம் என்ன என்று முழுதாகக் கேட்கலாம். சொல்லுங்கள் சார், நான்... வந்து, நீங்கள் சொல்லுகிற இந்தத் திட்டம், உங்கள் திருமணத்தை எப்படித் தடுக்கும் என்கிறீர்கள்?" என்று மேற்கொண்டு விவரம் கேட்டாள் அவள்.

உடன் பிறந்தவனைப் போல ஒரேயடியாக அவள் மறுக்கவில்லை என்பதே, சுதாங்கனுக்கு ஓரளவு நம்பிக்கை அளித்தது.

"அந்தப் பெண் ரேவதியுடைய தந்தை பணக்காரர். புதுப் பணம். ஒரு பையன், ஒரு பெண். பெண்ணின் ராசிதான் பணம் வந்தது என்கிற நம்பிக்கை. அதனால் பெண்ணின் மீது பிரியம் அதிகம். இன்னொருத்தியைக் காதலிப்பவனுக்குப் பெண்ணைக் கொடுக்க, அந்த மனிதர் விரும்ப மாட்டார் அல்லவா?"

சின்னவன் உதட்டைப் பிதுக்கினான். "இது கொஞ்சம் கொக்கு தலையில் வெண்ணையை வைத்து, அதைப் பிடிக்கிற கதை மாதிரி இல்லை?" என்றான் ஏளனமாக.

இந்த உவமையில் சுதாங்கன் தன்னை மீறி முறுவலித்தான். "கூடக் கொஞ்சம் கற்பனையைத் தட்டிவிட்டு, ஒரு பெண்ணுடைய அன்பான தகப்பனாரின் மனநிலையில் இருந்து பார். வேறு மாதிரித் தெரியும்!" என்றான்,

"ம், கஷ்டமாகத்தான் இருக்கும்" என்று மதிவதனி ஒப்புக் கொண்டாள். தொடர்ந்து, "இதிலும் பல ஓட்டைகள் இருந்தாலும், நடக்கவும் கூடியதே! உங்கள் திருமணம் நின்றுவிடவும் கூடும். ஆனால், இதற்கு ஒப்புக் கொண்டால், அதனால் எங்களுக்கு என்ன பயன்? இந்த ஒப்பந்தத்தில் எங்கள் தரப்பு லாபம் என்ன?" என்று கேட்டாள்.

"பாலனின் படிப்புக்கு வேண்டிய பணம் தருகிறேன்" என்று

சுருக்கமாகக் கூறினான் சுதாங்கன்,

சற்று ஏளனமாக நோக்கி, "சார், இது ஒன்றும் சில பல ஆயிரங்களில் முடியக் கூடியது அல்ல. லட்சங்கள் பத்துக்கு மேற்பட்ட லட்சங்கள்! கிட்டத்தட்ட இருபது!" என்றான் பாலன்.

"தெரியும். நானும் வெளிநாடு போய்ப் படித்திருக்கிறேன். பெரும் பகுதிக்கு, இங்கே ஏதாவது டெப்பாசிட்டை ஈடு காட்டினால் போதும்" என்றான் சுதாங்கன்.

அக்காவும் தம்பியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

ஆவலும் நம்பிக்கையும் கூடவே சந்தேகமுமாக அந்தப் பார்வையை சுதாங்கனால் புரிந்துகொள்ள முடிந்தது.

ஐயத்தைப் போக்கும் நோக்கோடும், அதே சமயம் தனக்குப் பாதுகாப்பாகவும் அவன் இன்னொன்று சொன்னான்.

"ஆனால் பாலன், நீ எனக்குப் பத்திரம் எழுதித்தர வேண்டும். உன் படிப்பு முடிந்ததும், உன் வரையில் பார்த்துக்கொண்டு அங்கேயே தங்கிவிடாமல், திரும்பி வந்து, மதிவதனியை உன்னோடு கூட்டிப் போவதாக எழுதித் தர வேண்டும். மதிவதனியும், இது எல்லாமே வெறும் நாடகம், மெய்யான காதலோ, அதன் சார்பான உரிமையோ எதுவும் கிடையாது என்று எழுதித் தர வேண்டும்" என்று தெரிவித்தான்.

மீண்டும், உடன் பிறந்தோர் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

அடுத்து சுதாங்கனைப் பார்த்த பார்வையில், அவன் எதிர்பார்த்தது போலவே, ஓரளவு நம்பிக்கையும் இருந்தது.

முதல் முறையாகச் சற்றே இணக்கமான குரலில் பாலன் பேசினான். "பாருங்கள் சுதாங்கன் சார், சற்றுமுன் உங்கள் காதில் விழுந்தது தவிர, எங்களைப் பற்றி, உங்களுக்கு எதுவும் தெரியாது. தெரிந்திருந்தால், அக்காவைக் கூட்டிப் போவது பற்றி எழுதித் தரும்படி என்னிடம் கேட்டிருக்க மாட்டீர்கள்! ஆனால், உங்களுக்கு நம்பிக்கை ஏற்படுவதற்காக, நீங்கள் சொன்னபடியே எழுதித் தர, நான் தயார். அக்காவும் அப்படித்தான் ஆனால், நீங்களும் இதே போல, எல்லாம் நாடகமே என்று எழுதித் தர வேண்டும்" என்றான்.

"கட்டாயம்!" என்றான் சுதாங்கன் "ஒப்பந்தம் என்றாலே, அது இரு சாராரையும் கட்டுப்படுத்துவதுதானே?" என்றான் கேள்வியையே பதிலாக்கி.

லேசான புருவச் சுளிப்புடன் இருந்த மதிவதனி எங்கோ பார்த்தபடி மெல்லக் கேட்டாள். "காதலி என்றால், எப்படி நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? ரொம்ப... ஒரு மாதிரியெல்லாம் என்னால் முடியாது" என்றாள்.

"தேவையில்லை. நம் நாடு, அதிலும் தமிழ்நாடு இன்னமும் அவ்வளவு தூரம் முன்னேறிவிடவில்லை. சும்மா பக்கத்தில் நின்றால், உட்கார்ந்தால் அது போதும்" என்றான் சுதாங்கன், அக்கறையற்ற குரலில்.

கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, "நான் லைப்ரரி வேலைக்குப் போக வேண்டுமே!" என்றான் பாலன், தயக்கத்துடன்.

"இது பற்றி இன்னொரு நாள் பேசுவோமா?" என்று, சுதாங்கனைப் பார்த்துக் கேட்டாள் மதிவதனி.

இந்தப் பூங்காவில், சுதாங்கனோடு தனியே நின்று பேச அவளுக்கு விருப்பம் இல்லையாம். சொல்லாமல் சொல்லுகிறாள்! அவனுக்கு மட்டும் என்ன ஆசையா?

அந்த மட்டும் ஒரு நல்ல விஷயம். காலில் கட்டிய கல்லாக இவள் மாறிவிட மாட்டாள். ரேவதியைப் போல அல்லாமல், இவளை விலக்குவது இலகுவாக இருக்கும்.

ரேவதியின் பெயர் அடுத்துச் செய்ய வேண்டியதை நினைவூட்ட, சுதாங்கன் அவசரமாகப் பேசினான்.

"நான் அந்தப் பெண்ணின் வீட்டிற்குப் போய், அவளுடைய பெற்றோருடன் திருமணத்தை நிறுத்துவது பற்றிப் பேச வேண்டியிருக்கிறது. எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாகச் செய்தாக வேண்டும். அதனால், என்ன, எப்படிச் சொல்வது என்று நாமும் விரைந்து திட்டமிடுவது அவசியம். எனவே, அடுத்து எப்போது, எங்கே சந்திக்கலாம்? சற்று முன்னதாகத் தெரிந்தால்தான், நான் வேலையை ஒதுக்கிக்கொண்டு வர முடியும்" என்று சொன்னான்.

"பாலாவுக்கு லைப்ரரி வேலை தவிர வேறு கட்டுப்பாடுகள் இப்போது இல்லை. நான் ஒரு மணி நேரம் அனுமதி கேட்டுக் கொண்டு வர முடியும். நாளைக்கு இங்கேயே வருகிறோம். இப்போது

நாங்கள் கிளம்புகிறோம்" என்றவள் அதற்கு மேல் நில்லாமல், தம்பியின் கையைப் பிடித்துக்கொண்டு மடமடவென்று நடந்து விட்டாள்.

பையனின் "பை சார்" காற்றில்தான் வந்தது.

சென்றவர்களின் முதுகைப் பார்த்தபடி தனியே நிற்கையில், சுதாங்கனுக்கு ஒரு மாதிரிதான் இருந்தது.

சொல்லப் போனால், அவனுக்கு நன்றாக நினைவு தெரிந்த நாளில் இருந்து, ஆணாகட்டும் பெண்ணாகட்டும், யாரும் இப்படிப் பேச்சை வெட்டிக்கொண்டு அவனை விட்டு விலகிச் சென்று, அவனுக்கு ஞாபகமே கிடையாது.

இவள் என்ன பெரிய... என்று எரிச்சல் மண்டும்போதே, சற்று முன் எண்ணியதே நினைவு வந்து, அவனை அமைதிப்படுத்தியது. பிற்பாடு இவளை விலக்குவது, பெரிய தொல்லையாக மாறாது! மற்றெதையும் விட, அது முக்கியம்!

ஆனால், பெயர் தவிர எந்த விவரமும் இல்லாமல் யாரிடம் என்ன பேசுவது?

நாளைக்கு நாலு மணிக்குள் இங்கே வந்துவிட வேண்டும்.

இப்போதைக்கு... திட்டமிட்டவாறே, காரை நோக்கி நடந்தான் சுதாங்கன்.

மறுநாள் சரியான நேரத்துக்குப் பூங்காவுக்குச் சென்றுவிட வேண்டும் என்றுதான் சுதாங்கன் எண்ணியிருந்தான்.

அன்று, தொழில் ரீதியான 'பிசினஸ் லன்ச்' ஒன்றில் அவன் கலந்துகொள்ள வேண்டியிருந்தது. மூன்று மணிக்குள் அது முடிந்துவிடும். ஓர் அரை மணி நேரம் எங்கேனும் சுற்றிவிட்டுக் கிளம்பினால், சரியாக நாலு மணிக்குப் பூங்காவை அடைந்துவிடலாம் என்பது அவனது திட்டம்.

மதிய உணவோடான சந்திப்பு, எதிர்பார்த்தது போலவே சரியாக மூன்று மணிக்கு முடிவடைந்தது. மிகுதியாக இருந்த அரைமணி நேரத்தில், உபயோகமாக 'ஷாப்பிங்' செய்யப் போனபோதுதான், சுதாங்கன் சிக்கலில் மாட்டிக் கொண்டான்.

ஒரு பெரிய கடையில், தேவைப்பட்ட ஆஃப்டர்ஷேவ் லோஷன். டியோ போன்றவைகளை பில் போடும்போது, அதே கடைக்குள் ரேவதியும் அவளுடைய அண்ணனும் வருவதைப் பார்த்துத் திடுக்கிட்டான்.

அதுவும், யாரையோ தேடுவது போன்ற பாவனையில், இன்னமும் திகைத்தான். தேடுவது அவனைத்தானா?

இன்னும் ஏதோ சாமான் எடுக்கச் செல்வது போல ஒரு சாமான் 'ராக்'கின் பின் மறைந்து நின்று கவனித்தான்.

ஏதோ 'கார் நிற்கிறதே' என்பது போலப் பேச்சு கேட்கவும், தன் காரைப் நிறுத்துமிடத்தில் பார்த்துவிட்டுத்தான் கடைக்குள் வந்திருக்கிறார்கள் என்பது, அவனுக்குப் புரிந்தது.

சும்மாவே அவர்களிடம் பேசப் பிடிக்காதது ஒரு புறம் என்றால், மதிவதனி, பாலாவைச் சந்திப்பதற்குத் தாமதம் ஆகி விடக் கூடாதே என்பது இன்னொன்றாக, அவர்கள் இருவரும் உட்புறமாகச் சென்றபின் அவசரமாக பில்லுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியே விரைந்தான்.

காரை எடுத்து, சாலைப் போக்குவரத்தில் இணைந்தபடி 'அப்பாடா' என்று பார்த்தால், நாலைந்து கார் தள்ளி, ரேவதியின் கார், பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

அவள் அண்ணன் ஓட்ட, ரேவதி. சுதாங்கனின் காரைக்காட்டிக் கொண்டிருந்தாள்.

காரை நிறுத்திப் பேசினாலும், அத்தோடு நில்லாது 'நீ போண்ணா, நான் சுதா காரில் வருகிறேன்' என்று அனுமதி கேளாமலே, அவன் காரில் ஏறி உட்கார்ந்து விடுவாள். இது, முன்னர் நடந்த கதைதான்.

மூன்றாவது பக்கவாட்டுச் சாலைகளில் காரைத் திருப்பிச் சென்றும், ரேவதியின் கார் தொடர்வதைக் கண்டதும், அவளது திட்டமே இதுதான் என்று, சுதாங்கன் உணர்ந்தான்.

அவனது மன வேறுபாட்டை வெளிப்படையாகச் சொன்ன பிறகும், ரேவதி நடந்துகொள்ளும் விதம், சுதாங்கனுக்கு அருவருப்பாக இருந்தது. இதை நிறுத்தியே ஆக வேண்டும்!

சென்னை மாநகரத்துப் போக்குவரத்து, எந்த அளவுக்கு வேகம் எடுக்க முடியாமல் அவனைத் தடுத்ததோ, அதே அளவு அவனை நெருங்கி வர முடியாமல், மற்றவர்களையும் தடுத்தது.

ஆனால், அப்போதே மணி நாலை நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னமும் இவர்களுக்குப் பயந்து இப்படியே சுற்றிக் கொண்டிருக்க

முடியாது!

ஒரு முடிவுக்கு வந்தவனாக, ஒரு பெரிய ஹோட்டல் வளாகத்தினுள் காரைச் செலுத்தி நிறுத்தினான்.

ரேவதியின் கார் உள்ளே நுழைவதை ஓரக் கண்ணால் பார்த்தபடி, மடமடவென்று உள்ளே சென்றான்.

அந்த ஹோட்டலுக்குப் பின் பக்கம் ஒரு வாயில் உண்டு என்பது அவனுக்குத் தெரியும். வேகமாக அதன் வழியே வெளியேறி, அந்தப் பக்கம் நின்ற ஓர் ஆட்டோவில் ஏறிச் செல்லுமிடம் சொல்லி ஓட்டச் சொன்னான்.

இவ்வளவு சாமர்த்தியமாக ரேவதி, அவள் அண்ணனிடமிருந்து தப்பிச் சென்றபோதும், மதிவதனி, பாலாவிடம் போய்ச் சேர, சுதாங்கனுக்கு அரை மணி நேரம் தாமதமாகிவிட்டது.

அதற்குள், மதிவதனியும் பாலனும் பூங்காவில் காத்திருந்து அலுத்துப் போய்க் கிளம்பிவிட்டார்கள்.

அதிலும் பாலன் கொதித்து விட்டான், "அவன் ரொம்பவும் திமிர் பிடித்தவன் அக்கா. நம் பேச்சைக் கேட்டதும் விளையாடிப் பார்த்திருக்கிறான். பணத்துக்காக எந்த அளவு போவோம் என்று ஆழம் பார்த்திருக்கிறான். இல்லாவிட்டால், முன்பின் அறியாத பெண்ணைக் காதலியாக நடிக்கக் கூப்பிடுவானா? சே! அவன் மட்டும் இப்போது என் கையில் கிடைத்தால், அடித்தே கொன்றுவிடுவேன்.. என்னக்கா சிரிப்பு?"என்று அருகில் இருந்தவளிடம் ஆத்திரப்பட்டான்.

"அதில்லையடா. அந்த ஆள் ஒரு குத்து விட்டால், நீ குறைந்தது எட்டுக் குட்டிக்கரணம் போடுவாய்! அவரை அடிக்கிறேன் என்கிறாயே. ஆனால், நீ சொல்வதும் நிஜம்தான். அந்த மனிதருக்கு ஒரு வித்தியாசமான பொழுது போக்கு! நமக்கு விலை மதிப்பற்ற பாடம். பகலில் பக்கம் பார்த்துப் பேசு. இரவில் அதுவும் பேசாதே என்பார்கள். பட்டப் பகலில், மரத்துக்கு அந்தப் பக்கம் ஓர் ஆள் இருப்பபதைக் கூடக் கவனியாமல் உள்ளதையெல்லாம் பேசினோமே! அதற்கான தண்டனை! சரி வா போகலாம் இதற்கு மேல், அவர் வருவார் என்று எனக்கும் தோன்றவில்லை"

"என்னக்கா பெரிய 'அவர்' சும்மா அவன் என்றே சொல்லு. நாம் எவ்வளவு மனதில் கஷ்டப்படுகிறோம் என்று தெரிந்தும், நம்மிடம்



ஆசை காட்டி விளையாடி இருக்கிறான், சுத்த ஃப்ராடு!"

"ஆனால்... அப்படிப்பட்ட ஆளாக இருந்தால், அவர் யார், என்ன என்கிற விவரம் நம்மிடம் தெரிவிப்பானேன்? அதுதான் யோசனையாக இருக்கிறது" என்றாள் தமக்கை.

"என்ன பெரிய விவரம்? அண்ணசாலை எவ்வளவு நீளம்? அதன் தொடக்கத்திலிருந்து முடிவு வரை என்ன தேடினாலும், அவன் சொன்ன நிறுவனம் கிடைக்காது, பார்!" என்றான் பாலன் மிகுந்த வெறுப்புடன்.

"இல்லை, பாலும்மா, நான் அலுவலகத்தில் விசாரித்தேன். எங்கள் நிறுவனம் அந்தப் 'பவானி எண்டர்பிரைச்'சோடு தொழில் தொடர்பு வைத்திருக்கிறார்களாம். ஆனால், வாய்க்கு வந்த ஒரு நிறுவனத்தின் பெயரையும் அவர் சொல்லியிருக்கலாம். சரிம்மா, ஏதோ ஒரு வழி கிடைக்கிறதோ என்று நினைத்தேன். போகட்டும், இதற்கு மேல் இங்கே காத்திருந்து பயனில்லை. கிளம்புவோம்" என்று மதிவதனி எழ, இருவருமாகச் சேர்ந்து நடந்தார்கள்.

இருவரின் நடையுமே மிகவும் சோர்ந்திருந்தது.

கிட்டத்தட்ட விட்டுப் போயிருந்த நம்பிக்கை! முன் தினத்தில் இருந்து முணுக்முணுக்கென்று ஒரு சிறு பொறி, அவ்வப்போது பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. இப்போது அதுவும் இல்லை என்று ஆகவே, சும்மாப் பெயருக்கு அடுத்தவரை உற்சாகப் படுத்தக்கூட, இருவருக்குமே இயலவில்லை.

அவர்கள் இடத்துக்குச் செல்ல வசதியான பின் வாயிலை அடைந்தபோது, தன்னையறியாமல் இருவருமே திரும்பி, முன்புற நுழை வாயிலை, ஏக்கத்தை மறைத்து, சும்மாப் பார்ப்பது போலப் பார்த்தார்கள்.

ஆனால், விரும்பிய காட்சி கிடைக்காது போகவும், நெடுமூச்சை இருவராலும் அடக்க முடியவில்லை.

உச்சுக் கொட்டிவிட்டு. இருவரும் மேலே நடக்கலானார்கள்.



# சுந்தரி நீயும... 5

இருவருக்குமே பயங்கரச் சோர்வு!

அதே சமயம், சுதாங்கன் மேல் பயங்கரக் கோபமும் கூட. எப்போதும் போல, முயற்சியும் தோல்வியுமாக, அடுத்து ஒருவரை ஒருவர் தேற்றுவதுமாக இருந்திருப்பார்களே! இவனை யார் இடையிலே புகுந்து, இன்னும் ஏதோ ஒரு வழி இருப்பது போல ஒரு மாயையை உருவாக்கச் சொன்னது?

இப்போது காலை எடுத்து வைப்பதே, இவ்வளவு கஷ்டமாக இருக்கிறதே!

சோர்வுடன், மெல்ல மெல்லக் கால்களை எடுத்து வைத்து ஒரு பத்தடி தூரம் நடந்திருப்பார்கள், அவர்கள் மேலேயே மோதி விடுவது போல ஓர் ஆட்டோ ரிக்ஷா, வேகமாக அவர்களைத் தாண்டிச் சென்று, அவர்கள் முன்னேயே 'பிரேக்' போட்டு நின்றது.

அதிலிருந்து குதித்து இறங்கி, முன்னேயே எடுத்து வைத்திருந்தவன் போலப் பணத்தைக் கொடுத்துவிட்டு, அவர்களிடம் ஓடி வந்து நின்றவன் சுதாங்கனே.!

அவர்கள் சமாளித்துக்கொண்டு பேசுமுன். "நல்லவேளை! நேற்று நீங்கள் இந்த வாயிலை நோக்கிப் போனது நினைவிருக்கவே, பூங்காவைச் சுற்றி ஆட்டோவை இங்கே வந்து நிறுத்தச் சொன்னேன். இல்லாவிட்டால் உங்களைப் பார்க்க முடியாமலே போயிருக்குமே!" என்று. என்னமோ ஆட்டோவில் வராமல், அவனே ஓடி வந்தவன் போலப் பெரிய பெரிய மூச்சுகளுக்கிடையே கூறினான் அவன்.

"பரவாயில்லை. ரொம்பக் கெட்டிக்காரத்தனமான செயல்தான். ஆனால், சொன்ன நேரத்துக்கு வந்திருந்தால், இந்தப் பிரச்சினைக்கே இடமின்றிப் போயிருக்குமே!" என்றான் பாலன், குற்றம் சாட்டும் குரலில்.

"வரத்தான் எவ்வளவோ பாடு பட்டேன்...."

"அதுதான் வந்துவிட்டீர்களே! அப்புறம், அது பற்றி என்ன பேச்சு? இப்போதைய ஐடியா என்ன? நேற்றையத் திட்டத்தைத் தொடருகிறோமா, இல்லையா? தொடர்வது என்றால், உள்ளே போய்,



அது பற்றிப் பேசலாமே!" என்றாள் மதிவதனி.

"கட்டாயம்! உள்ளே வாருங்கள்" என்று மற்றவர்களை உள்ளே அழைத்தான் சுதாங்கன்.

இன்றும், அமர்ந்து பேச ஒரு மரத்தடியைத்தான் தேர்ந்தெடுத்தார்கள்.

மரத்தை பாலன் ஒரு தரம் சுற்றி வருவதைப் பார்த்து, சுதாங்கன் லேசாக முறுவலிக்கவும், "பட்டறிவு!" என்றாள் மதிவதனியும் புன்னகை செய்து.

பெயருக்கேற்ற முகம் என்று எண்ணிய சுதாங்கன் முகம் மாறி, "அனைத்துக்கும் மேலான அறிவு என்பார்கள்" என்று ஒப்புதலாகக் கூறினான்.

ஓர் அழகான தோற்றத்தின் உள்ளே இருந்த அழுக்கை அறிந்த பிறகும், இன்னொருத்தியின் அழகை ரசிப்பதா? பட்டும், அவனுக்குப் புத்தி வரவில்லையே!

சுற்றி வந்து அமர்ந்த தம்பியிடம் பார்வையைப் பதித்து, "நேற்று நான் சொன்ன திட்டத்தை இரவெல்லாம். இருவரும் யோசித்திருப்பீர்கள். உங்களுக்குத் தனிப்பட்ட யோசனை ஏதும் இருக்கிறதா?" என்று கேட்டான்.

பாலன் தமக்கையைப் பார்க்க, அவள் சொன்னாள், "எங்கள் தேவை என்ன என்று, உங்களுக்குத் தெரியும். பணம் கிடைத்துவிட்டால், பாலன் இன்னும் ஒரு மாதத்தில் யுஎஸ் கிளம்பும் படியாக இருக்கும். உங்கள் விஷயம் மொத்தமாகத் தெரியுமே தவிர, உள் நுணுக்கங்கள் எங்களுக்குத் தெரியாது" என்றாள்.

"சொல்கிறேன். முதலில் பாலனுக்குப் பாஸ்போர்ட் தயாராக இருக்கிறதா?" என்று சுதாங்கன் கேட்டான்.

"இருக்கிறது, சார். கல்லூரியில், கடைசி ஆண்டு அதற்கு ஏற்பாடு செய்தார்கள். இந்தப் படிப்புக்காகவே, எனக்குப் பாஸ்போர்ட் எடுத்தோம்" என்றான் பாலன், பரபரப்புடன்.

"ரைட். உனக்கு?" என்று மதிவதனியின் பக்கம் பார்த்து, சுதாங்கன் கேட்டான்.

"எனக்கு எதற்கு?"

"எதற்கா? பின்னே பாலனுக்கு அங்கே வேலை கிடைத்ததும்,

உன்னை அழைத்துக் கொள்வது எப்படி? உன்னை, அவன் அழைத்துக் கொள்வதும், ஒரு நிபந்தனைதானே?"

"சாரி. அதை நினைக்கவில்லை. உடனே ஏற்பாடுகளைத் தொடங்குகிறேன். எப்படியும், அவனது படிப்பு முடியுமுன் கட்டாயம் கிடைத்துவிடும். ஆனால், உங்கள் தரப்பில்..."

"சொல்கிறேன். அப்பா மாதவன், அம்மா பவானி. வயது நாற்பதுகளின் பின் பகுதி. அம்மாவுக்கு அந்தப் பெண் ரேவதியின் அழகில் ஒரு மயக்கம். அவள் குணம் அறிந்ததும், கொஞ்சம் மிரண்டு போயிருக்கிறார்கள். அப்பா தொழிலில் இருந்தாலும், சொல் சுத்தம், நேர்மை, விசுவாசம் எல்லாம் மதிப்பவர். அதனாலேயே, பூ வைத்து, உறுதி செய்த திருமணத்தை உடைக்கச் சம்மதித்திருக்கிறார்..."

"புரியவில்லையே! சொல் சுத்தம் உடையவர் உறுதி செய்த திருமணத்தை எப்படி உடைப்பார்?" என்று குழம்பினான் பாலன்.

"அதாவது, அந்தப் பெண்ணிடம் இந்த நல்லவை எதுவுமே இல்லை. அதிலும் உண்மை சிறிதும் இல்லை என்று தெரிந்து போனதால், அப்பா என் விருப்பத்துக்குச் சம்மதித்திருக்கிறார், ஆனால், தன் மகளிடம் குற்றம் இருப்பதாக, அந்தப் பெண்ணுடைய தந்தை ஒப்ப மாட்டார் என்பதால், பாலன் சொன்னது போலக் கொக்கு தலையில் வெண்ணையாக, உன்னைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. ஆனால், அந்தப் பெண் வீட்டில் மட்டுமின்றி, என் பெற்றோரிடமுமே, உன்னை என் காதலி என்று சொல்லப் போகிறேன்" என்றான் சுதாங்கன்.

"பெற்றோரிடமுமா? ஏன்?"

"ஆமாம். அம்மாவுக்கு இன்னும் லேசான சபலம் இருக்கிறது. அத்தோடு, இதை விட்டால், மறுபடி எப்போது திருமணத்துக்குச் சம்மதிப்பேனோ என்பது வேறு"

"ஆனால் நம்புவார்களா? வேறு காரணத்தால் அந்தப் பெண்ணை மறுக்கிறீர்கள் என்று அவர்களுக்குத் தெரியுமே!"

"எல்லாம் சொல்கிற மாதிரியில் இருக்கிறது. அவர்களிடம், நாம் முன்பே சந்தித்தவர்கள் என்று சொல்லப் போகிறேன்!" என்று தான் திட்டமிட்டு வைத்ததை, அவர்களிடம் எடுத்துச் சொன்னான்.

மதிவதனி, இரண்டு ஆண்டுகள் முன்பே சுதாங்கன் சந்தித்தவள். அப்போதே, அவனுக்குக் கொஞ்சம் ஆசைதான்... ஆனால், தம்பி



படிப்புக்காக, ஆண்டுக் கணக்கில் சொந்த வாழ்வு பற்றி நினைக்கவே போவதில்லை என்று வதனி பிடிவாதமாகக் கூறிவிட்டதால், அவன் விலகிவிட்டான்.

ஆழமாக வலுப் பெற்றிராத காதல் என்பதால், பிரிவு பெரும் பிரச்சினையாகவும் இருக்கவில்லை. ஆனால், அது உண்மைக் காதலாக இருந்ததால், அவனை வேறு விதமாகத் தாக்கியிருக்கிறது.

உண்மையில் ரேவதி அழகாக இருந்தபோதும், உள்ளூர அவன் மனதில் முதல் காதலியோடு எப்போதும் ஒப்பிட்டுப் பார்த்ததிலேயே, அவனுக்கு, அவளைப் பிடிக்காமல் போயிருந்திருக்கிறது.

இப்போது தற்செயலாகக் காதலியை மீண்டும் சந்திக்கவும், அவன் மனதில் பழைய உணர்ச்சிகள் சற்றும் குறையவில்லை என்று புரிந்து போயிற்று.

முன்பு தடையாக இருந்த தம்பியும், விரைவிலேயே வெளிநாடு போய் விடுவான் என்று தெரிய வந்ததும் பழைய ஆசைகள் தளிர்க்கத் தொடங்கிவிட்டன. அத்தோடு, சர்வ நிச்சயமாக மற்றவளை மணக்க முடியாது என்றும் தெரிந்துவிட்டது.

மனதில் ஒருத்தியை வைத்துக்கொண்டு, இன்னொருத்திக்கு எப்படி மாலையிடுவது?

"அது, ரேவதிக்கு நியாயம் செய்வது ஆகாது என்று அவளுடைய பெற்றோரிடம் சொல்லப் போகிறேன். அப்படிச் சொல்லும்போது, அப்பா அம்மாவுமே, அதே நம்பிக்கையில் இருப்பது, நல்லது அல்லவா?"

சுதாங்கன் சொல்லி முடித்ததும், அவனை வியப்புடன் நோக்கி, "ஆக, அவர்கள் மகளுக்கு நல்லது செய்யும் நோக்கத்தில்தான், இந்தக் கல்யாணத்தை நிறுத்துகிறீர்கள்! பிரமாதம் சார்!" என்று பாலன் பாராட்டினான்.

"ஆனால், ஒரே ஒரு பிரச்சினைதான், எழக் கூடும். இவ்வளவு நல்ல மாப்பிள்ளையை விடுவதா? திருமணமானால் எல்லாம் சரியாகிப் போய்விடும் என்று அந்தப் பெண்ணைப் பெற்ற பெரிய மனிதருக்குத் தோன்றிவிட்டால்?" என்று. உள்ளார்ந்த சிரிப்பில் கண்கள் பளிச்சிட மதிவதனி தன் கருத்தைத் தெரிவித்தாள்.

"ஐயையோ, என்னைப் பயமுறுத்த வேண்டாம், மதிவதனி" என்று

அஞ்சி மிரண்டவன் போல சுதாங்கன் விழிக்க, முதல் முறையாக மூவரும் சேர்ந்து நகைத்தனர்.

மிகவும் தேவைப்பட்ட சிரிப்பு!

சூழ்நிலையின் இறுக்கம் சற்றே தளர, மூவருமாகத் தொடர்ந்து திட்டமிட்டனர்.

தான் கணக்கு வைத்திருக்கும் பாங்க்கில், பாலனின் படிப்புக்காகப் பணம் டெப்பாசிட் செய்யப் போவது எப்படி என்பது போன்ற விவரங்களை சுதாங்கன் எடுத்துச் சொன்னான். விவரங்கள் தெளிவாக இருக்கவே, பாலனுக்கு ஒரே சந்தோஷம்.

அடுத்து, சுதாங்கனுடைய பெற்றோரிடம், எல்லோரும் எப்படி ஒரே மாதிரிச் சொல்ல வேண்டும் என்று பேசினார்கள்.

"அப்புறம், நீ இந்த வேலையை விட்டுவிட வேண்டும், மதிவதனி" என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டான் சுதாங்கன்.

அப்படித்தான், மதிவதனிக்குத் தோன்றியது. தன் வருமானம் இல்லாமல், செலவுக்கு அடுத்தவர் கையை எதிர்பார்த்து நிற்பதா? அவளால் எப்படி முடியும்?

"ஏனோ?" என்றாள் மறுப்பைக் குரலில் காட்டி.

"யோசித்துப் பார். இந்த அளவுக்கு வந்துவிட்டதால், என் திருமணத்தை விரைவிலேயே நடத்திவிட வேண்டும் என்று, என் பெற்றோர் விரும்புவார்கள்தானே? நீ இதே ஊரில் வேலை செய்தால், என்ன காரணம் சொல்லித் திருமணத்தைத் தள்ளிப் போடுவது? முடியாதுதானே?"

"இருக்கலாம். ஆனால், என் உழைப்பில்தான் நான் சாப்பிடுவேன். தம்பிக்கு நீங்கள் செய்வதே அதிகம். அதற்கு மேல், உங்களிடம் எதைப் பெறவும், எனக்குப் பிடிக்காது. பெற முடியாது!" என்றாள் மதிவதனி, மிகவும் உறுதியான குரலில்.

தன்னையறியாமல் சுதாங்கனுக்கு ரேவதியின் நினைவு வந்தது. என்ன மாதிரிக் கொஞ்சிக் குழைந்து, சிரித்துச் சீண்டி அவனைச் செலவழிக்க வைத்தாள். இவளானால்., என்று எண்ணம் ஓடும்போதே, அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

இதையேதானே, திருமணத்தை நிறுத்துவதற்கான காரணமாக, அவன் சொல்வதாக இருந்தான்! அதுவே நடக்கிறதே!



ரேவதியால், இன்றையப் பெண்களிடம் அவனுக்கு ஏற்பட்டிருந்த கருத்து மாற்றம் காரணமாக, மதிவதனியையும் அவனால் முழுதாக நம்ப முடியவில்லை.

ரேவதியோடான திருமணத்தை நிறுத்துவதற்கான காரணமாக அவன் சொன்னதை வைத்து, அதற்கு நேர் மாறாகக் காட்டுவதற்காக, இந்தப் பெண் இப்படி நடிக்கிறாளோ?

உடனேயே அவனுக்குச் சட்டென நினைவு வந்தது. முன்னாள் காதலியோடு ஒப்பிட்டுப் பார்த்ததில் பிடிக்காமல் போனதாகச் சொன்னானே தவிரப் பணம் விஷயமாக, அவன் பேசவே இல்லையே!

தோற்றம், குரல், பேசிப் பழகும் முறை... எத்தனை இல்லை ஒப்பிடுவதற்கு!

சட்டெனக் கலக்கம் மறைந்துவிட "அது போலக் கவலையே வேண்டாம், மதிவதனி. இந்த வேலை காரணமாக, இதே ஊரிலேயே இருப்பதுதான் பிரச்சினை ஆகுமே தவிர, நீ வேலை பார்ப்பது பிரச்சினை ஆகாது..." என்று அவன் விளக்கும்போதே, வழக்கம் போலப் பாலன் குறுக்கிட்டுப் பேசினான்.

"என்ன சுதாங்கன் சார், குழப்புகிறீர்களே! இந்த ஊரில் இந்த வேலை பார்க்கக் கூடாது என்றால், வேறு எந்த ஊருக்குப் பறந்து போய்., அங்கே மரத்தில் காய்த்துத் தொங்கும் வேலைகளில் ஒன்றைப் பறித்துக் கொள்ளச் சொல்லுகிறீர்கள்?" என்று சிறு எரிச்சலுடன் கேட்டான்.

அவனது படிப்பு விஷயம் தெளிவாகிவிட்டபோதும், தமக்கையின் நிலைமையும் பிரச்சினையற்றுத் தெளிவாகும் வரை, அவனால் வெளிநாட்டுப் பக்கம் காலடி எடுத்து வைக்க முடியாதே! சும்மாவே, காதலியாக நடிக்க நேர்வதே, அவனுக்குக் கொஞ்சம் கலக்கம்தான். இதில், பழகிவிட்ட இடத்தில், தன்மானத்துக்குப் பங்கம் இல்லாமல், தேவையான ஊதியத்தையும் தந்துகொண்டிருந்த வேலையையும் விடு என்றால், அவனுக்குச் சஞ்சலமாக இருந்தது. அதைவிடவும், இங்கேயே ஒரு சின்ன வேலையைப் பார்த்துக்கொண்டு, அக்காவுக்குத் துணையாக இங்கேயே இருந்துவிடலாமே என்ற எண்ணமும், அவ்வப்போது தலை தூக்கிக்கொண்டே இருந்தது.

ஆனால், கிடைக்க இருப்பது பெரிய வரம்! அவனுக்கு

4

மட்டுமல்ல, பிற்பாடு அவனுடைய அன்புத் தமக்கைக்குமே! வேண்டாம் என்று மறுப்பதும் மடத்தனமே!

சிறு சலிப்புடன் சின்னவனைப் பார்த்தான் சுதாங்கன், "பார் பாலன், உன் பேச்சு கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், நான் சொல்வதை முழுதும் கேளாமல், இடையிலே குறுக்கிட்டு, அர்த்தமற்றுப் பேசும்போது, கொஞ்சமும் சகிக்கவில்லை. இங்கே வேலை பார்க்க வேண்டாம் என்று மதிவதனியிடம் சொல்லும்போது, அதைத் தொடர்ந்து, இதற்கு இணையாக வேலைக்கு, வேறு ஊரில் ஏற்பாடு செய்வதாகவும்தான் சொல்ல இருந்தேன். அதாவது, நீ இடையிலே குறுக்கிடும் முன்பாக" என்றான் மனதை மறையாத குரலில்.

லேசாக முகம் சிவக்க "இது பழகிய இடம். இதை விட்டு வெளியே போ என்றால் எப்படி?" என்று முணுமுணுத்தான் பாலன்.

"ஏன்? நீங்கள் ஊரிலிருந்து ஓடி வந்து வேலை தேடியபோது, இது பழகிய இடமாகவா இருந்தது? பழகிக் கொள்ளவில்லையா? அதையே மறுபடியும் செய்வதில் என்ன பிரச்சினை? அத்தோடு, ஒரு மோசமான எதிர்காலத்தில் இருந்து மீள எனக்கு உதவி செய்கிறவள். அவள் எக்கேடோ கெடட்டும் என்று நான் விட்டுவிடுகிற ஆள் நான் அல்ல" என்று, தெளிவாகச் சற்று அழுத்தமான குரலில் சொன்னான் மற்றவன்.

உரக்கத் திட்டுவதற்கும் இதற்கும் பெரிய வேறுபாடு கிடையாது.

பாலன் தரையைப் பார்த்து "சாரி" என்று முனக, சுதாங்கனை ஆழப் பார்த்து மதிவதனி பேசினாள்.

"இந்த வயதிற்கு நாங்கள் அனுபவித்திருப்பது அதிகம், சுதாங்கன் சார். நம்பி ஏமாறுவதைக் காட்டிலும், எதையும் சந்தேகப்படுவது மேல் என்று தம்பியும் நானும் அனுபவத்தில் அறிந்திருக்கிறோம். ஆனால், என்னைப் பொறுத்தவரையில், பலவற்றைச் சமாளிக்கவும் பயின்றிருப்பதால்... சொல்லுங்கள். எந்த ஊரில் எனக்கு வேலை கிடைக்கக் கூடும் என்கிறீர்கள்? வேலைக்கு ஏற்பாடு செய்வதற்கு என் பயோடேட்டா, படிப்பு சர்டிஃபிகேட் எதுவும் தேவைப்படுமா? அவைகளை எப்போது தரட்டும்?" என்று வினவினாள்.

ஒரு கணம் தயங்கிவிட்டு பாலனை நோக்கி. "சாரி பாலன். இப்போதைய பிரச்சினை தீருவதற்காக நிறைய மூளை வேலை செய்ய



வேண்டியிருக்கிறது. அந்த ரேவதி, அவளுடைய குடும்பம் தவிர, என் பெற்றோரையுமே சமாளித்தாக வேண்டும். அதில் இணைந்து செயல்படாமல், நீயே எதிர்மறையாகவே பேசினால் எப்படி? அந்த எரிச்சலில் நான் ஏதேனும் நோகக் கூறியிருந்தால் பெரிதாக எடுத்துக் கொள்ளாதே" என்று சமாதானமாகப் பேசினான் சுதாங்கன்.

"ஐயோ, அப்படியெல்லாம் இல்லை சார். எனக்கு... அக்காவைத் தனியே விட்டுவிட்டுப் போவது, என் மனதைப் பாதித்திருக்கிறது என்று தோன்றுகிறது. நீங்கள் உங்கள் திட்டத்தைச் சொல்லுங்கள், அதன்படி செய்வோம்" என்றான் சின்னவன், பணிவாக.

அவனிடம் லேசாக முறுவலித்துவிட்டு, மதிவதனியிடம், சுதாங்கன் மேலே தன் திட்டத்தை விவரித்தான்.

"பெங்களூருவில், எங்கள் நிறுவனத்தோடு தொழில் தொடர்புடைய ஒரு நிறுவனம் இருக்கிறது. அதை, இப்போது விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். அங்கே வேலை கிடைப்பது எளிது. ஊரும் பெரிது. வேலை பார்க்கும் பெண்கள் பாதுகாப்பாகத் தங்குமிடங்களும் நிறைய உண்டு. அதனால், அங்கே மதிவதனிக்கு ஒரு வேலை ஏற்பாடு செய்யலாம் என்று ஒரு யோசனை. இப்போதைக்கு, உன் பட்டப்படிப்பு, வேலையில் அநுபவம் பற்றிச் சொன்னால் போதும். அதற்கேற்ற வேலைக்கு ஏற்பாடு பண்ணுகிறேன். வேலையில் சேரும் போது, உரிய நிருபணங்களை நீ காட்டினால் போதும்" என்றான்.

தொழில் தொடர்புதான். ஆனால், தொழில் விஷயமாக அடிக்கடி சந்தித்ததிலேயே, ராம்குமார், சுதாங்கனுக்கு நெருங்கிய நண்பன் ஆகி விட்டவன். ஒன்றில் இருந்து இன்னொன்றாய், அவனிடம் பல தொழில்களும் இருந்தன. அவனை நம்பித்தான், பெங்களூருவில் வேலைக்கு ஏற்பாடு செய்வதாக, மதிவதனியிடம் அவன் கூறியது.

ஆனால் "என்ன சுதா, திடீரென்று கேட்டால் எப்படி? வேலை ஏதாவது காலியாக இருக்க வேண்டாமா?" என்று நண்பன் கேட்கவும், சுதாங்கன் சற்றுத் திகைத்துப் போனான்.

இங்கே இல்லை என்று மதிவதனியிடம் சொல்வது மகாக் கடினமாகப் பட்டது!

அத்தோடு, இனி ஓர் இடத்தில் வேலை தேடுவதும் சிக்கலே.

நாட்கள் பல ஆகக் கூடும்.

ரேவதி விஷயமாகச் செயல்படாமல் கழியும் ஒவ்வொரு நாளும், ஆபத்தை அதிகரிப்பதாகும்!

ரேவதியின் நினைவு உந்த, நண்பனிடம் கெஞ்சிக் கேட்டான். "ராம் ப்ளீஸ், எனக்காகடா. பயிற்சி மாதிரியாவது போட்டுக் கொடு. அவளது சம்பளத்தை வேண்டுமானால், நானே தந்துவிடுகிறேன். ப்ளீஸ்யா. உடனடியாக ஏற்பாடு பண்ண வேண்டும்" என்றான்,

"ம்ம்ம், இது நல்ல ஐடியாவாக இருக்கிறதே! அவளிடம் சக்கையாகப் பிழிந்து வேலையை வாங்கிக்கொண்டு. சம்பளத்தை உன்னைக் கொடுக்க வைப்பது! பிரமாதம்!" என்று சிரித்தான் அந்த நண்பன்.

வேடிக்கை புரிந்து. "தாங்க்ஸ்ப்பா!" என்று சுதாங்கனும் கூடச் சேர்ந்து நகைத்தான். சிரித்து முடித்ததும் "ஆனால், ஓசியில் வேலை வாங்கும் பாவம் எனக்கு வேண்டாம்பா! அதனால் வழக்கம் போலவே, இந்தக் கல்விக்கு உரிய வேலையே கொடுத்து விடுகிறேன். அப்புறம், உன் திருமண வேலைகள் எந்த அளவில் இருக்கின்றன? ரேவதி ஜபம் ஒரு நாளைக்கு எத்தனை முறை நடக்கிறது?" என்று, கேலியாகக் கேட்டான் ராம்குமார்.

ஒரு கண நேர அமைதியின் பின் "ராம், அவளோடு திருமணத்தை நிறுத்தப் போகிறேன். அந்த விவரம், பிறகு நேரில் பார்க்கும்போது சொல்கிறேன். மதிவதனியைப் பற்றிய விவரங்களை ஈமெயிலில் அனுப்பி இருக்கிறேன். பார்த்துக் கொள். வைத்து விடுகிறேன்" என்று, பேச்சைத் துண்டித்தான் சுதாங்கன்.

ஆச்சரியமாய்க் கையில் இருந்த கருவியை வெறித்தான் ராம்குமார்.

நிச்சயமான கல்யாணத்தை நிறுத்துவதும், யாரோ ஒரு பெண்ணை அவசரமாக ஊரை விட்டு விலக்கி அனுப்புவதும்... ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்த கதையாக இருக்குமா?

அப்படி இருந்தால், வேலை எதற்காக? அதுவும், ஊதியத்தை அவனே கொடுக்கவும் தயாராக... அப்படியாவது வெளியூருக்கு அனுப்ப வேண்டும் என்று என்ன அவசரம்?

இந்தப் பெண் பார்வைக்கு எப்படி இருப்பாள்? யோசித்தபடியே, அடுத்த ஃபைலை எடுத்தான் ராம்குமார்.





# சுந்தரி நீயும... 6

மதிவதனியின் வேலை முடிவானதும், அன்றிரவே பெற்றோரிடம். சுதாங்கன் தன் விவரம் தெரிவித்தான்.

தந்தை அவனைக் கண்களில் கூர்மையுடன் நோக்க, "காதலா' நேற்று வேறு காரணம் சொல்லி, அந்தக் கல்யாணத்தை நிறுத்து என்றாய், இன்றைக்கு இன்னொருத்தியுடன் காதலா? திடீர் இடியாப்பம், திடீர் சாம்பார் மாதிரித் திடீர்க் காதலா? நீ என்ன சொன்னாலும் நம்புவதற்கு, நாங்கள் என்ன, முட்டாள்களா?" என்று பொரிந்தாள் அன்னை!

"அம்மா, என்னம்மா இப்படிச் சொல்லுகிறீர்கள்? அப்பா, பாருங்கப்பா, இந்த அம்மாவை"

"பார்த்து? அதற்கு முன், அம்மா கேட்டதற்குப் பதில் சொல்லு. அதென்ன திடீர்க் காதலி?" என்று, மகனைக் கூர்ந்து பார்த்துக் கேட்டார் மாதவன்.

பெருமளவு இதை எதிர்பார்த்திருந்ததால், சுதாங்கனால் ஏற்ற முக பாவனையுடன் பதில் சொல்ல முடிந்தது.

மதிவதனியிடம் சொன்னதுதான்.

தம்பியும் அவளும் மட்டும்தான் என்றதுமே பவானி முகத்தைச் சுளித்தாள். "என்னடா சொல்கிறாய்? அப்பா அம்மா இல்லாத அனாதைகளா? அப்படியானால், கடைசி வரை, அந்தத் தம்பியின் பொறுப்பு அவளதாகவே இருக்குமே! அவளைத் திருமணம் செய்தால், அது உன் தலையில் அல்லவா விழும்? நல்ல விஷயங்களுக்குத் தாங்கிச் செய்யக் கூட நாதி இராதே!" என்று படபடத்தாள்.

"ஷ்... அவன் முதலில் சொல்லி முடிக்கட்டும்" என்றார் மாதவன்.

"அம்மா சொல்லட்டும், அப்பா. ஏனென்றால், மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக, அம்மா சொல்லும் இதே காரணத்துக்காகத்தான், நானே மதிவதனியிடம் இருந்து ஒதுங்கிக் கொண்டேன்!"

"அப்போதேவா? ரொம்பவும் நாள்பட்ட, மிக ஆழமான காதல்தான் போல!" என்றார் மாதவன் ஒரு மாதிரிக் குரலில்.

"என்னைச் சொல்லிவிட்டு, நீங்கள் குறுக்கே பேசுகிறீர்களே! ஆனால், முதலில் நல்லவிதமாகத்தானே யோசித்திருக்கிறான்? அப்புறம் என்ன?" என்றாள் பெற்றவள்.

இருவரும் பேசி முடித்த பின்னும், சுதாங்கன் பேசாமல், அமைதியாகவே இருந்தான்.

சில வினாடிகள் பொறுத்துப் பார்த்துவிட்டு "என்னடா, என்னமோ சொல்ல வேண்டும் என்றுவிட்டுச் சும்மா உட்கார்ந்திருந்தால் எப்படி? சொல்ல வந்ததைச் சொல்லி முடி" என்று தூண்டினாள் அன்னை.

"ஏய், நாம் குறுக்கே பேசிவிட்டோமாம். அதைத்தான் சொல்லாமல் சொல்லிக் காட்டுகிறார் துரை! சரிப்பா. உன் திடீர் இடியாப்பம்... இல்லையில்லை, உன் திடீர்க் காதலி பற்றி நீ சொல்லி முடிக்கும் வரை, இனி நாங்கள் வாயே திறப்பதில்லை சரிதானா? ஆனால், என் பேச்சில் ஒரே ஒரு திருத்தம் மட்டும் சொல்லி விடுகிறேன். இது திடீர்க் காதல் அல்ல, மூன்று ஆண்டு பழைய காதல். சரிதானா? இனித் தொடங்கு" என்றார் மாதவன்.

தந்தை தன்னை முழுதாக... கிட்டத்தட்ட நம்பவில்லை என்று சுதாங்கனுக்குப் புரிந்தது. ஆனால் அவர் நம்பினால்தான், ரேவதியின் வீட்டில் அடித்துப் பேச முடியும். அவரது பேச்சைத்தான் ரகுபதியும் ஒத்துக் கொள்வார்.

எனவே, இயன்றவரை நம்பும் விதமாக இந்தப் பழைய காதல் பற்றி எடுத்துச் சொன்னான்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக மதிவதனியைப் பார்த்தபோதே, அவனுக்குள் ஓர் ஈர்ப்பை அவன் உணர்ந்தான். பொதுவில் பேசிப் பழகிய அளவில், அவளது குணமும் பிடித்தது. ஆனால், அதற்கு மேல் மன நெருக்கம் ஏற்படு முன்பாகவே, அவளுடைய தம்பியின் படிப்புதான் அவளது முதல் குறிக்கோள். அவனது படிப்பு முடியும்வரை, அவள் தன் சொந்த வாழ்வு பற்றி நினைத்துக் கூடப் பார்க்கப் போவதில்லை என்று மதிவதனி சொல்வதை, சுதாங்கன் கேட்க நேர்ந்தது. எதற்கும் இருக்கட்டும் என்று பேச்சு வாக்கில் கேட்பது போல, அவளிடமே அது பற்றி விசாரித்தான். வினாடி கூடத் தயங்காமல், ஆமாம், அப்படித்தான் என்று உறுதியாக அறிவித்தாள் அவள்.



அதற்கு மேலும், தம்பியின் வெளி நாட்டுப் படிப்பு பற்றி வேறு, கண்கள் பளபளக்கப் பேசினாள்.

அவள் வாழ்வில், தம்பிக்கு அடுத்த இடம்தான் மற்ற யாருக்கும் என்று சுதாங்கனுக்குப் புரிந்தது. அதுவும் பல ஆண்டுகள் காலக் கணக்கு!

இது தனக்கோ, தன் குடும்பத்துக்கோ ஒத்து வராது என்று புரிய, அவன் ஓசையின்றி அவளைப் பிரிந்துவிட்டான். பெரிதாகக் காதல், நேசம் என்று எதுவும் பேசியிராததால், பிரிவது எளிதாகவும் இருந்தது. உள்ளூரச் சிறு உறுத்தல் தவிர!

"அதெல்லாம் சரியா..." என்று ஏதோ சொல்லத் தொடங்கிய பவானி, கணவரின் தலையசைப்பில் வாயை மூடிக் கொண்டாள்.

கவனியாதவன் போன்று, சுதாங்கன் தொடர்ந்தான்,

கண்ணுக்கு மறைந்தது, கருத்தை விட்டும் மறைந்து போய்விட்டதாகத்தான் சுதாங்கன் நினைத்தான். அப்படி நம்பித்தான், பெற்றோரின் பேச்சை ஏற்று, ரேவதியை மணக்கவும் சம்மதித்தான்.

ஆனால், அவனது ஆழ்மனம் வேறு நினைத்திருக்கிறது! எதிலும், ரேவதியை, மதியோடு ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டே இருந்திருக்கிறது. அதனால்தான் மனதில் திருப்தியும் இல்லாமல் போயிருக்கிறது.

அதிலும், ஒரு டீ குடித்தால்கூடத் தன் பங்கு என்று, பணத்தைக் கணக்காக எடுத்து வைத்து விடுகிறவள் மதிவதனி. ரேவதியோ, இவனிடம் எவ்வளவு பிடுங்கலாம் என்று திட்டம் போட்டு வாங்கினாள். அதுதான் மிகப் பெரிய வேறுபாடாக, அவன் மனதைப் பாதித்திருக்கிறது.

கடைசியாக, அந்த 'இளிச்சவாய்' வசனம் வேறு.

உண்மையாக அவளிடம் அன்பு ஏற்பட்டிருந்தால், இவை எல்லாவற்றையுமே, அலட்சியப்படுத்தத் தோன்றியிருக்கலாம்.

ஆனால், உண்மையாகவே அந்த அன்புக்கு உரியவளை மறுபடியும் சந்திக்கவும் நேரவே, ரேவதி விஷயம் முடியாத காரியம் என்று தெளிவாகத் தெரிந்து போயிற்று...

"ஆனால், அந்த மதியோ சோதியோ, அவளுக்குத்தான் தம்பிக்காரன் சுமை எப்போதும் இருக்கிறதே!" என்ற தாயைத் தலை

சரித்து நோக்கினான் மகன்.

"எ...என்னடா?"

"பின்ன என்னம்மா? நீங்கள் இப்படிக் குறுக்கே குறுக்கே பேசினால், நான் மனப்பாடம் செய்து வைத்தது எல்லாம் மறந்து போகாதா?"

"எ..என்னது? மமனப்பாடமா...? சுதா, நீ என்ன சொல்லுகிறாய்?" என்று திகைத்தாள் தாயார்.

"ஆமாம், அப்படி நினைத்துத்தானே, என்னைக் குழப்ப எண்ணி இப்படி ஏதாவது கேட்டுக்கொண்டே இருக்கிறீர்கள்?" என்று கேட்டுவிட்டு, அவனே தொடர்ந்தான். "மதிவதனியுடைய தம்பியின் படிப்பு, இங்கே முடிந்துவிட்டது. முழு அளவு உபகாரச் சம்பளத்தோடு, அவன் வெளிநாடு போகிறான். படிப்பு முடிந்ததும், வேலைக்கு உத்திரவாதமும் இருக்கிறது. நல்ல சம்பளம். லட்சக் கணக்கில் வரும். இத்தனை ஆண்டு காலம், அக்கா அவனைப் படிக்க வைத்ததற்காக, அவளை ஓஹோ என்று பாலன் வாழ வைக்கப் போகிறானாம்! எனவே, நான் தடையாக நினைத்த எல்லாமே, முழுதாகத் தவிடுபொடி ஆகிவிட்டது. எனவே, இப்போது நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்ற கேள்வியோடு முடித்தான்.

"ஏன்? நாங்கள் என்ன சொன்னாலும், அதன்படியே நடக்கப் போகிறாயாக்கும்? யாரோ ஊர் பேர் தெரியாதவளைப் போய்...! நம் அந்தஸ்துக்கும், அவளுக்கும் ஏணி வைத்தாலும் எட்டுமாடா?" என்று ஆத்திரப் பட்டாள் பவானி.

உள்ளூர சுதாங்கனின் மனம் துள்ளியது. இந்தக் காதல் கதையை அம்மா நம்பிவிட்டாள். அல்லது, இது போன்ற குறைபாடுகள் கண்ணில் படாது! கூடவே, ரேவதி மீது உள்ள மயக்கமும் மறையலாம்.

மகிழ்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல் "என்னம்மா பெரிய அந்தஸ்து! உங்கள் அந்தஸ்தான பெண், இந்த ஒரு மாதத்தில் எவ்வளவு பிடுங்கியிருக்கிறாள் பாருங்கள்! இந்தாருங்கள். கிட்டத்தட்ட எல்லா பில்களும் இருக்கின்றன. கூட்டிப் பார்த்தால், பதினோரு லட்சத்துச் சில்லறை வருகிறது! முழுக்க அன்னியன். தாலி கூடக் கட்டவில்லை. எந்த உரிமையும் இல்லாதபோதும், சீண்டியும் சிரித்தும் என்னிடம் எவ்வளவு பிடுங்கி இருக்கிறாள் பாருங்கள்! இதில், ஹோட்டல் செலவு, விலை உயர்ந்த சாக்கலேட் டப்பாக்கள், துணிமணிகள் எதையும் நான் சேர்க்கவில்லை. இவ்வளவு கொடுக்கிறோமே என்று நான் அத்து மீறியிருந்தால், அதற்கும் ஒத்துப் போயிருப்பாள். நல்லவேளை! நீங்கள் என்னை வளர்த்த விதம், அப்படி எதிலும் நான் மாட்டிக் கொள்ளவில்லை!" என்று தாயின் உச்சியைக் குளிர வைக்கும் ஒரு பாராட்டோடு பேச்சை முடித்தான் பிள்ளை!

அவன் விரும்பிய வண்ணமே. "ஒரு மாதத்துக்குள் பதினோரு லட்சமா? அதுவும் கல்யாணம் ஆகு முன்னாலேயே. அப்படி என்ன பறப்பு?" என்றாள் அன்னையும்.

"ஆமாம்மா! நீங்கள் வேறு, அவளுக்கு ஏதோ நகை போட்டீர்கள். அது... உங்கள் இஷ்டம். ஆனால், அவள் என்னிடம் கேட்டு வாங்கியதை எல்லாம் திரும்ப வாங்கி விட வேண்டும், அம்மா" என்றான் சுதாங்கன்.

இன்னமும், மதிவதனியை ஒப்பி, பவானி எதுவும் சொல்லவில்லை. ஆனால், அவனுக்குமே ரேவதியிடமிருந்து மீள்வதுதான் முக்கியமாக இருந்ததால். தாயின் கவனத்தை வேறு எதிலும் திருப்ப விரும்பவில்லை.

தந்தையின் பார்வை அவன் புறம் இருப்பது புரிந்தாலும், அதைக் கவனியாதது போல அவரை நேராகப் பார்ப்பதைத் தவிர்த்தான். சில சமயம், அவரது கண்கள் வேண்டாததை எல்லாம் கண்டு பிடித்துவிடும். தொழில் நடத்தும்போது தேவையான திறமையே என்றாலும், இப்போது அவர் எதையும் கண்டுகொள்ள வேண்டாம் என்று. சுதாங்கன் கருதினான்.

மனைவி முன்னிலையில். மகனை விசாரணை செய்ய, மாதவனுக்கும் அவ்வளவாக விருப்பம் இல்லை. அத்தோடு, மகன் சொன்ன பணக்கணக்கு, அவருக்குமே சற்று பிடிக்காமல்தான் இருந்தது. அதென்ன, திருமணம் ஆகுமுன்பே, ஒருவனை இப்படி உரிவது? அவனாக ஆசையில் கொடுப்பது வேறு விதம். இது சற்றும் சரியில்லை!

"எங்கே, அந்தக் கணக்கைக் கொடு!" என்று மனைவியிடம் இருந்து, அவளிடம் மகன் கொடுத்த பில்களை வாங்கிப் பார்த்தார்.

"நாலே வாரங்களில் பதினோரு லட்சங்களா? எட்டே சந்திப்புகளில்

இவ்வளவு போயிருக்கிறது! நம் வருமானம், தாங்கும் என்றாலும், அவ்வளவையும் அவள் கேட்டு வாங்கியது, மனதுக்கு ஒத்து வரவில்லை. சரி, திருமண விஷயமாகப் பெரிய சிக்கல். அது பற்றிப் பேச வருகிறோம் என்று, நாளைக்குச் சொல்லிவிடுகிறேன். மிஸ்டர் ரகுபதி சொல்லும் நேரம் போகலாம். கடைசியாக ஒரு தரம் சொல்லி விடப்பா. இந்த உன் முடிவு உறுதிதானே? இன்னொரு தரம் மாறிவிட மாட்டாயே?" என்று மகனைக் கேட்டார்.

"நிச்சயமான முடிவுப்பா. அதில் மாற்றத்துக்கே வழியில்லை," என்றான் மைந்தன்.

"ஒரு தடவை மாறியதால், தெளிவாகக் கேட்க வேண்டியிருக்கிறது" என்றார் மாதவன் ஒரு மாதிரிக் குரலில்.

"இன்னொரு தரம் மாறாதிருக்க ஒரு முக்கியமான காரணம் இருக்கிறதுப்பா மதியின் அன்பான பார்வையோடு, ரேவதியின் தந்திரப் பார்வையை, ஒரு தரம் ஒப்பிட்டுப் பார்த்தாலே போதும். மனிதனுக்கு எல்லாம் தெளிவாகிவிடும்!"

"உனக்கு என்று சொல்லு"

"தன்னைப் போலப் பிறரையும் நினைக்கிற நல்ல மனம் அப்பா, எனக்கு!" என்று சொல்லாடலில் தந்தையைச் சமாளிக்க முயன்றான் பிள்ளை.

ஆனால் "அதே போல, அந்த ரேவதியையும் நல்லவளாக நினைக்க வேண்டியதுதானே?" என்று மடக்கினார் அவர்.

"காதுக்கு இனிமையாக நல்லதைப் பேசும்போது, நாராசம் பாய்வது போல, இது என்னப்பா வேண்டாத பேச்சு? அப்புறம் காதை வேறு கழுவ வேண்டும்!"

"அடடா! பிள்ளை பிரமாதமாகப் பேசுகிறானே! நாராசம் என்றால் என்னப்பா?. ஏன் பவி, உனக்குத் தெரியுமா?"

"சாராயம் மாதிரியாப்பா? காதில் ஊற்றினால் ரொம்ப எரியுமோ?" என்று கேட்டாள் மனைவி.

"சரியாகச் சொன்னீர்கள், அம்மா!" என்று, சந்தடி சாக்கில் தாயாருக்கு இன்னும் குல்லாப் போட்டான் பிள்ளை.

"நன்றாகச் சொன்னாள் உன் அம்மா. ஒன்றுமே தெரியாமல். நீயும் ஒத்து ஊதுகிறாய்! நாராசம் என்றால் எந்த விதமான திரவமும் அல்ல.



இரும்பால் செய்யப் பட்ட கூர்மையான சிறு அம்பு, காதுக்குள் செலுத்துகிற அளவில் இருக்கும். அது பாய்ந்த பிறகு காதைக் கழுவுவதா? ஆள் உயிரோடு இருந்தால் அல்லவா, அது முடியும்?"

"ஐயோப்பா, இதில் இவ்வளவு இருக்கிறதா? சாரிப்பா. கல்லூரிப் படிப்பு, வெளிநாட்டுப் படிப்பு எல்லாம் ஆங்கிலத்திலேயே முடிந்து விட்டதால், இது போன்ற வார்த்தைகள் தெரியாமலே போய்விட்டன" என்று உண்மையான வருத்தத்துடனே கூறினான் சுதாங்கன்.

"தமிழ் இனி மெல்லச் சாகும் என்று என்றைக்கோ கல்கி ஒரு தலையங்கம் எழுதியதாகச் சொல்வார்கள். அப்போதெல்லாம் அது தழைக்கத்தான் செய்தது. இந்தக் கம்ப்யூட்டர் யுகம்தான் அதை முழுதாகச் செய்துவிடும் போலத் தோன்றுகிறது. இந்த அவசர வாழ்வில், தாய் தந்தைக்கே சரியாத நேரம் ஒதுக்க முடிவதில்லை. இதில், தாய்மொழியைப் படி என்று எப்படி வற்புறுத்துவது? முடிந்தவரை, தமிழ்ப் பத்திரிகைகளையேனும் அவ்வப்போது படி, சுதா" என்றார் மாதவன்.

அவரது குரலில் இருந்த வலியை உணர்ந்து, "கட்டாயம் செய்கிறேன்" என்று உறுதி கூறினான் மகன்.

மறுநாள் முன்னிரவில்,. சுமார் ஏழு மணியளவில், அவரது வீட்டுக்கு வருமாறு ரகுபதி கூறியிருந்தார்.

பையனும் உடன் வர வேண்டுமா என்று பவானி சற்றுத் தயங்கினாள்,

வேறு பெண்ணோடு காதல் என்று சொல்லும்போது, பெண்ணைப் பெற்றவர்கள் ஆத்திரத்தில் ஏதாவது சாபமிட்டுப் பேசுவார்களோ என்று அவளுக்குக் கலக்கம். ஆனால், அவனது செயலுக்கு, அவன்தான் பொறுப்பேற்க வேண்டும் என்று விட்டார் தந்தை.

சுதாங்கனுக்குமே, தாயார் ஏதாவது வாயை விட்டுவிடாமல் கண்காணிக்கத் தானும் உடன் இருக்க வேண்டும் என்று எண்ணம் இருந்தது.

சும்மா என்றால். அதற்குத் தேவை இராது. ஆனால், ரேவதி ஏதாவது 'சீன்' போட்டால் பவானி இளகி விடக்கூடும்!

பூ வைக்கச் செல்லும்போதே. 'மாப்பிள்ளை வரவேற்பு' மாதிரி, சுதாங்கன் கையில், ரகுபதி ஒரு தடிமனான உருட்டுச் சங்கிலியைப்

போட்டிருந்தார்.

"என்னை என்ன, படிக்காத பட்டிக் காட்டுப் பண்ணையார் என்று எண்ணினாரா?" என்று ஆத்திரப்பட்டு, வீடு திரும்பியதுமே சுதாங்கன் அதைக் கழற்றிப் போட்டு விட்டிருந்தான், இன்று, அதைப் பத்திரமாகக் கையோடு கொண்டு சென்றார்கள்.

இன்னொரு தரம் அங்கே போய் நிற்கக் கூடாது என்பது, மாதவனுக்கு. சுதாங்கனுக்கும் அதே எண்ணம்தான்.

ஏதோ பணம் பவுன் கேட்கப் போகிறார்கள். கேட்பதற்கு மேலாகவே கொடுத்து விட்டால் போகிறது என்பது ரேவதியுடைய தந்தை ரகுபதியின் எண்ணம். அவருடைய செல்ல மகளுக்கு இல்லாமல் வேறு யாருக்குச் சம்பாதிக்கிறார்? தொழிலுக்கு வாரிசு மகன்தான் என்றாலும், மகளுக்காக என்ன செலவு செய்யவும், அவர் தயார்தான்.

அவருடைய படிக்காத கட்டுப்பெட்டியான மனைவிதான் பெண்ணுக்கு அதிகச் செல்லம் கொடுக்கக் கூடாது என்று புலம்பிக் கொண்டிருப்பாள். ஆனால், அவள் பேச்சை யார் காது கொடுத்துக் கேட்டார்கள்?

மாதவன் குடும்பம் வந்ததும் கொடுப்பதற்காக, மகள் விருப்பப்படி நட்சத்திர ஹோட்டல் அயிட்டங்கள் பல ஆர்டர் பண்ணி வைத்திருந்தார்,

"அப்பா, ஈசிஆர் ரோடில் என் பெயரில் ஒரு பங்களா வாங்க இருப்பதாகப் பேச்சில் சொல்லுங்கப்பா" என்றது, அவருக்கே அதிகமாகத்தான் தோன்றியது. ஆனால், கூட்டிக் கழித்துப் பார்த்தால், மகனுக்குக் கிடைக்க இருக்கும் தொழிலின் மதிப்பு, பங்களாவை விடப் பலமடங்கு அதிகம். அப்படித் தொழிலைப் பெருக்கியதே, அன்பு மகள் ரேவதியின் அதிருஷ்டம்தானே?

மகளிடம் தலையாட்டியவர், மனைவியின் கோபத்தைத் தாங்க வேண்டியிருந்தது. "இவள் உருவியது போக, மகனுக்கு ஏதாவது மிஞ்சுமா?" என்று எரிச்சல்பட்டாள் அவள்.

"ஏடி, அவள் உன் மகளும்தானடி, மறந்து பேசாதே!" என்று அவளை அடக்கினார் "என்னமோ, அவளைக் கொஞ்சம் அடக்கி வைத்தால், நன்றாயிருக்கும். ரொம்பவும் அதிகமாக ஆசைப்படுகிறாள்! சொல்வதைச் சொல்லிவிட்டேன். அப்புறம், உங்கள் இஷ்டம்!" என்று ஒதுங்கிக் கொண்டாள், மனைவி.

கணவரிடம், மகள் பற்றி என்ன சொன்னாலும், காதில் ஏறவே ஏறாது என்பது, அவள் அனுபவித்து அறிந்த உண்மை!

எப்படியோ பட்டுத் திருந்தட்டும் என்று விட்டேற்றியாக எண்ணினாலும், சுமந்து பெற்ற அவளுக்கு, உள்ளூர வேதனையாகவே இருந்தது!

சொன்னபடி. மாலை ஏழு மணியளவில், மாதவனுடைய குடும்பம் வந்து காரை விட்டு இறங்கவுமே, ரேவதி புலி போல, அவர்கள் மீது பாய்ந்தாள்.

"வாங்க அத்தை, வாங்க மாமா!" என்று இருவரையும் அவள் கட்டிப் பிடித்து வரவேற்ற விதத்தில், அவள் தாயின் முகம் கன்றிக் கறுத்துவிட்டது.

இன்னும் பையனை என்ன செய்வாள்? முத்தம் கூடக் கொடுப்பாளா? அதுவும் பிரச்சினை என்று வருகிறவர்கள்!

சுதாங்கனிடம் அவளது உத்தேசம் என்னவோ, அவன் அதற்கு இடம் கொடுக்கவில்லை. கையெட்டும் தூரத்திலேயே ரேவதியைத் தடுத்து நிறுத்தி "பெரிய சிக்கல் பற்றிப் பேச வருவதாக உன் தந்தை சொல்லவில்லையா?" என்று அவன் கேட்ட விதத்தில். அந்தத் தாய்க்குத் தரையின் உள்ளேயே போய்விட மாட்டோமா என்றிருந்தது.

ஆனால். ரேவதியின் பதில் வேறு மாதிரி இருந்தது, "உம், ஏதோ சொன்னாரே. ஆனால் இப்போது என்பதால், இங்கே வரச் சொன்னார். அடுத்த வாரம் என்றால், ஈசிஆர் ரோடில் என் பெயரில் அப்பா வாங்கப் போகும் வீட்டுக்கு வந்து பேசச் சொல்லியிருப்பார்!" என்று பெருமையாக அறிவித்தாள்.

'என்னை மணந்துகொள். அந்த வீடு உனதும் ஆகும்' என்று இதைவிடத் தெளிவாகத் தூண்டில் போட முடியாது!

ஆனால் சுதாங்கன். "நல்லவேளை! இப்போதே வந்தோம்! அவ்வளவு தூரம், யார் கார் ஓட்டுவது?" என்று அசிரத்தையாகக் கூறவும், அந்தத் தாய் ரொம்பவும் பதைத்துப் போனாள்.

உனக்கு என்ன சொத்துச் சேர்ந்தாலும், அது பற்றித் தனக்கு ஒன்றுமில்லை என்கிறானே! அவளைப் பற்றியே ஒன்றுமில்லை

என்கிறானா?

அவள் பதைப்புடன் நினைத்ததை உறுதிப் படுத்தும் விதமாக, "நல்லவேளையாக, ரகுபதி சார், இந்தப் பிள்ளைகளை நம்பி, நிச்சயதார்த்தம் என்று, ஊர் கூட்டிப் பெரிதாக எதுவும் பண்ணாமல் இருந்தோம்..." என்று மாதவன் சொல்லத் தொடங்கும்போதே, ரேவதி குறுக்கிட்டுப் பேசினாள்.

"அதற்கென்ன, நாளைக்கே வேண்டுமானாலும், ஹையாட், தாஜ், ஷெராட்டன் மாதிரி எந்தப் பெரிய ஹோட்டலில் வேண்டுமானாலும், எல்லோரையும் கூப்பிட்டு நிச்சயதார்த்தம் செய்ய என் அப்பா தயார்! எனக்கென்றால், என் அப்பா கணக்கே பார்க்க மாட்டார்! என்ன மாமா, நிஜமாகவே, நாளைக்கே பண்ணி விடலாமா? உங்களுக்கும், அப்படி எதுவும் பண்ணவில்லையே என்ற வருத்தம் தீரும்!" என்று தந்தையர் இருவரும் ஏதோ சொல்ல முயன்றதைக் கண்டுகொள்ளவே இல்லாமல், வேகமாகக் கூறி முடித்தாள்.

"குட்டி, அவர்கள் ஏதோ சொல்ல வந்திருக்கிறார்கள். சொன்ன பிறகு, மேலே பேசலாம். அதுவரை சும்மா இருடா செல்லம்" என்று, அன்பாகவே மகளை அடக்க முயன்றார் ரகுபதி.

குறுகிய காலத்தில் பெரும் பணம் ஈட்டிவிட்ட அவருக்கு, வந்தவர்கள் ஏதோ பெரிய விஷயமாக வந்திருக்கிறார்கள் என்பது புரிந்து போயிற்று. ஆனால், எதையும் பணத்தின் அடிப்படையிலேயே சிந்தித்துப் பழகியவர் என்பதால், பெரிய அளவில் பணத்துக்கு அடிப் போடவே மாப்பிள்ளை வீட்டார் வந்திருப்பதாக எண்ணினார். எனவே, முதலிலேயே வார்த்தையை விடாமல் இருந்தால், பின்னாடி பேரம் பேசி குறைப்பதற்கு வசதியாக இருக்கும் என்று கருதி, மகளை அடக்க முயன்றார்.

ஆனால், மகளின் நினைப்பு வேறு விதமாக இருந்தது. பல நாட்களாகவே, சுதாங்கன் அவளிடமிருந்து வெகுவாக ஒதுங்கிப் போனான். மெஸேஜ் கொடுத்துப் பயனில்லை. பேச முயன்றால், இணைப்பைத் துண்டித்தான். நேரில் பிடிக்க முயன்றால், அலுவலகத்திலிருந்து கூட, ஆள் காணாமல் போனான்.

அர்த்தம் தெளிவாகத் தெரிந்தபோதும், வளத்தோடு தோற்றப் பொலிவும் உள்ள சுதாங்கனை விட்டுவிட அவளுக்கு மனமில்லை.



பல கோடிகளில் பணத்தைக் கொட்டப் போவதாகக் காட்டினால், பெரிசுகள் அதில் மயங்கி, மகனை அடக்கிவிடுவார்கள். எப்படியோ, கழுத்தில் தாலி ஏறிவிட்டால், அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தாள் அவள்.

எனவே. "எதற்கப்பா சும்மா இருப்பது? நான் உண்மையைத்தானே. சொன்னேன்? அதுவும், மாமா வருத்தப்பட்டதற்கு உரிய பதில்! ஏன்ப்பா, எனக்காக நீங்கள் நிறைய்யச் செய்வீர்கள்தானே?" என்று, மறுபடியும் மாதவன் தம்பதிக்குக் கோடி காட்டினாள். சுதாங்கனுக்கும்தான்.

பணம்! அழகு! வேறென்ன வேண்டும், அவனுக்கு?

அவளோ, பேரழகி! தந்தையின் பணம், அவளுக்கு மிஞ்சியதுதான், அவளுடைய அண்ணனுக்கு! பின்னே, யாரானாலும் காலடியில் விழுந்துதானே ஆக வேண்டும்?

ஆனால், அவளது கணக்கு புரியாமல். "குட்டிம்மா, நீ கொஞ்சம் உள்ளே வாயேன். அவர்கள், பெரியவர்கள் பேசட்டும். நாம், உள்ளே போய்ச் சாப்பாட்டு மேசையில் எல்லாம் எடுத்து வைப்பதைப் பார்ப்போம்" என்று நாசூக்காக மகளை அழைத்தாள், பெற்றவள்.

கண்கள் கனல் கக்க, "பட்டிக்..." ன்று தொடங்கிய ரேவதி, சட்டெனத் தன்னை அடக்கிக்கொண்டாள்.

அதிகம் படிப்பறிவு இல்லாத பெற்றவளை அலட்சியமாக எடுத்தெறிந்து பேசுவது, அந்த வீட்டில் பழக்கமாக இருக்கலாம். ஆனால், வந்திருக்கும் கிழடுகள் வேறு மாதிரி நினைத்துவிட்டால்?

சட்டென முகம் மாறி, "டைனிங் டேபிள்தானே? ஏற்கனவே பார்த்து விட்டேன். இங்கே முக்கியமான பேச்சு நடக்கும்போது, தயவு பண்ணிக் குறுக்கிடாதேம்மா! என் செல்ல அம்மா இல்லை?" என்று கொஞ்சலாகக் கூறினாள்.

குரலும் வார்த்தைகளும் கொஞ்சினாலும், ரேவதியின் கண்கள் உறுத்து வேறு கூறுவதைக் கவனித்து, "இருக்கட்டும் ஆன்ட்டி, எல்லாம் உங்கள் மகளுக்கும் இப்போதே தெரிவதே நல்லது" என்றான் அமர்ந்த குரலில், சுதாங்கன்.

# சுந்தரி நீயும்... 7

சுதாங்கன் பெற்றோருடன் கூட வந்த காரணமே, ரேவதி ஏதாவது நாடகமாடி, அதனால் தாய்தந்தையர் தயங்கி விடக் கூடாதே என்றுதான்.

இப்போதும், அவள் பணத்தாசை காட்டுவது பற்றி, அவனுக்கு அச்சமில்லை. அப்படி மகனை விடவும் பணம் பெரிதென்று ஒருபோதும் அவர்கள் நினைக்க மாட்டார்கள்.

ஆனால், அன்று செல்லில் பேசுகையில் வாயை விட்டது தவிர, அவள் பற்றி, அவர்களுக்கு நேரடி அனுபவம் கிடையாது. இரண்டாம் கையாக, அவன் சுருக்கமாகச் சொன்னதுதான். அதில், அவர்களுக்கு முழுத் தாக்கம் ஏற்பட்டிராது.

எனவே, இப்போது ரேவதி இப்படிப் பேசக் காரணம், மகனைப் பிரிய மனம் வராததுதான் என்று எண்ணிவிட்டால் ஆபத்தாகிவிடும் என்றுதான் அவன் குறுக்கே புகுந்தான்.

சும்மாவே, உறுதி செய்த திருமணத்தை மறுப்பது பற்றி, மூத்த தலைமுறைக்கு, அதிலும் முக்கியமாகத் தாயாருக்கு உள்ள தயக்கம் வேறு.

எக்கச் சக்கமாக, அந்த இடத்தில் பெரியவர்கள் வார்த்தையை விட்டு விடுமுன், அவனே விஷயத்தைக் கையில் எடுத்துப் பேசலானான்.

ரகுபதியையே நோக்கி "பாருங்கள் சார், இது பற்றி, ரேவதி உங்களிடம் சொன்னாளோ, இல்லையோ தெரியவில்லை. ஆனால், உங்கள் பெண்ணும் நானும் பார்த்துப் பேசிப் பல நாட்கள் ஆகின்றன. இதில், பெருமளவு தப்பு என் மீதுதான். முதலிலேயே, இந்தக் கல்யாணத்துக்கு நான் சம்மதித்திருக்கக் கூடாது...?" என்று நிறுத்தினான். பெரியவர்களின் அதிர்ச்சி, தெளிவாகத் தெரிந்தது.

ரேவதியுமே, இந்த நேரடித் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. சுதாங்கன் குடும்பம் தட்டித் தடவித் தடுமாறிக் கொண்டிருக்கும் போதே, பிடியை இறுக்கிவிட வேண்டும் என்று எண்ணினால், சுதாங்கன் இப்படித் திடுமெனப் போட்டு உடைத்துவிட்டானே!



இதை எப்படிக் கையாள்வது என்று புரியாமல் அவள் தடுமாறினாள்.

சற்று ஒதுங்கி அமர்ந்திருந்தாலும், ரேவதி அண்ணனின் முகத்தில் மட்டும் எந்த மாற்றமும் இல்லை. அவன் தங்கையை அறிந்தவன். அத்தோடு, ஒரு நாள் சுதாங்கனை ரேவதி விரட்டிச் சென்றபோது, அவள் சொல்படிக் காரை ஓட்டியவன் அவன் அல்லவா?

ரகுபதி விரைவில் சமாளித்து "ஆமாம் மாப்பிள்ளை! பெரிய தப்பு நடந்திருக்கிறது. நீங்கள் 'சார்' என்றபோதே, எனக்குப் புரிந்திருக்க வேண்டும். நீங்கள் ஏதும் என் மகளைத் தப்பாக நினைத்து, இந்த முடிவு... இந்த மாதிரிப் பேசவில்லையே?" என்று கேட்டார்.

ஒரு வாய்ப்பைக் கண்டவளாக "ஆமாம். அதுதான். தப்பாகத்தான் நினைத்துவிட்டார். அன்றைக்கு அந்த மந்தாகினிக் கழுதையோடு வேடிக்கையாகப் பேசியதைத் தப்பாக எடுத்து இப்படிப் பேசுகிறார்ப்பா, சுதா, அன்றிலிருந்து, அந்த நாயுடன் நான் பேசுவதே இல்லை, தெரியுமா?" என்று படபடவென்று பேசித் தீர்த்தாள் ரேவதி.

ரகுபதி கேள்வியாக நோக்கவும், தலையசைத்து, "அது மட்டும் இல்லை, சார். இப்போது நான் சொல்லப் போவதற்காக, நீங்கள் என்னை ரொம்பவும் மன்னிக்க வேண்டும். எனக்கு ஒரு... ஒரு பெண்ணோடு பழக்கம். காதல் என்றெல்லாம் வெளிப்படையாகப் பேசுமுன், மூன்று ஆண்டுகளுக்கு முன்பாகவே பிரிந்து போக நேர்ந்தது... உங்களிடம் எதையும் நான் மறைக்க விரும்பவில்லை, ரகுபதி சார். என் அடி மனதில், அந்தப் பெண்ணைப் பற்றி ஏதோ ஒரு பொறி மறையாமல் இருந்திருக்கும் போல! எதிலும், ரேவதியை அந்தப் பெண்ணோடு ஒத்துப் பார்த்து நினைத்தே, ரேவதியை நான் வெறுக்கத் தொடங்கியிருக்கிறேன். ஏன் என்று எனக்கே புரியாத நிலை. பெற்றோர் சொல்லி, நானும் பார்த்து சம்மதித்துவிட்டு, ஏன் இப்படி வெறுக்கிறோம் என்று எனக்கே குழப்பம் இப்போது சில நாட்களுக்கு முன்பாக அந்தப் பெண்ணை மறுபடியும் பார்த்ததுமே, எனக்கு எல்லாம் தெளிவாகிவிட்டது. இதற்குமேல், நான் வேறு யாரை மணந்தாலும், அது ஏமாற்று வேலைதான். அவளோடு ஒப்பிட்டு, ஒப்பிட்டு மனம் வெறுத்துப் போய்விடும். எங்கள் வாழ்க்கையும் அப்படித்தான். ரேவதிக்கு அப்படி ஒரு மோசமான வாழ்க்கையை

நீங்கள் விரும்ப மாட்டீர்கள் என்பது என் நம்பிக்கை.

"அந்த நம்பிக்கையில் தான், செய்த தப்புக்கு உங்களிடம் நேரிலேயே சொல்லி மன்னிப்புக் கேட்டுவிட்டு, அன்று நீங்கள் அணிவித்த நகையையும் திருப்பிக் கொடுத்துவிட்டுப் போகலாம் என்று வந்தோம்" என்று அவன் சொல்ல, மாதவன் தன் பையில் வைத்திருந்த நகையை எடுத்து வெளியே வைத்தார்.

இந்த 'இன்னொரு பெண்' பேச்சு, ரேவதியைத் திகைக்க வைத்தது.

அப்படி எவள், அவளை விட மேலாக ஒருத்தியை சுதாங்கன் கண்டான்?

அவளது அழகுக்கும் பணத்துக்கும் கல்லூரியில் ஒரு விசிறிகள் கூட்டமே உண்டு. அவள் பொட்டு வைக்காமல் வந்தால், அவர்கள் அத்தனை பேரும் வைத்திருக்கும் பொட்டை எடுத்து வீசி விடுவார்கள். 'நாளை சிவப்பு நிறம்' என்று சொன்னாளானால், வாடகைக்கு எடுத்தாவது அத்தனை பேரும் சிவப்பு 'டாப்'பில் வருவார்கள். அவளும், சாக்கலேட், ஐஸ்கிரீம், பர்கர் என்று எல்லோருக்கும் அள்ளி வழங்குவாள். அவர்களும், ரேவதியின் பின்னாலேயே அலைவார்கள். அவள் தாமதமாக வந்தால்கூட, அவளுக்கு முன்பாக வகுப்பறைக்குள்ளே போகவே மாட்டார்கள்!

எல்லோரும், அவளை எப்ப...படிப் புகழ்வார்கள்! அப்படிப்பட்ட அவளைப் போய், ஏதோ ஒரு குரங்குக்காக, ஒருவன் எப்படி மறுப்பான்?

ஊகூம், எல்லாம் பொய்! அன்றையப் பேச்சுக்காக, அவளைப் பழி வாங்குகிறான்,

சும்மா பிகு! அவளைக் காலில் விழ வைக்கப் போட்ட திட்டம்!

ஆனால், இப்போது காலில் விழுந்தாலும், பிற்பாடு திருமணம் ஆனபிறகு, அவள் பதிலுக்குப் பழி வாங்காமல் விடுவாளா? அவனைக் காலாலேயே உதைப்பாளே! அப்போது என்ன செய்வான்?

சட்டென சுதாங்கனின் அருகே ஓடிச் சென்று "அன்றையப் பேச்சுக்காகத் தயவு பண்ணி என்னை மன்னித்து விடுங்கள், சுதா. அந்த மந்தாச் சனியன் ஏதோ சொல்ல, நான் பெருமை காட்ட எண்ணி உளறிவிட்டேன்! ப்ளீஸ், சுதா!" என்று, அவனது கையைப் பற்ற முனைந்தாள்.



பெரியவர்கள் முகத்தில் இளக்கத்தைக் காணவும், தன் காதலி கதைக்காகத் தன்னைத் தானே, சுதாங்கன் பாராட்டிக் கொண்டான்.

ரேவதியின் பிடிக்கு அகப்படாமல் விலகி நின்று, "சாரிம்மா, என் மேல்தான் தப்பு! அது, மதிவதனியைப் பார்த்த பிறகுதான் எனக்கே புரிந்தது, சாரி!" என்று பெரிதாக வருத்தம் தெரிவித்தான்.

"பொய்! உங்கள் மதியோ சதியோ அந்தக் கதையை நான் நம்ப மாட்டேன்" என்று கிரீச்சிட்டாள் ரேவதி, "எப்படியும், என்னை விட அவள் அழகாக இருக்கவே முடியாது. அப்படி இருக்க அவள் மேல் காதல் எப்படி வரும்? அத்தோடு, அப்பா, மாமா, இத்தனை நாட்களுக்குள் சுதா எனக்கு எவ்வளவு வாங்கித் தந்திருக்கிறார். தெரியுமா? மனதில் ஆசை இல்லாமலா வாங்கியிருப்பார்?" என்று ரேவதி வாதாட, சுதாங்கன் தந்தையைப் பார்த்தான்.

பார்வை புரிய, அவர் பைக்குள் கையை விட்டு, மகன் தந்த லிஸ்டை எடுத்தார்.

அதை ரகுபதியிடம் கொடுத்து "என் மகன் கஞ்சன் அல்ல. ரேவதி கேட்டதை எல்லாம்... என்ன கேட்டாலும் வாங்கி கொடுத்து, அவளிடம் பிரியமாக நடந்து கொள்ள ரொம்பவே முயற்சி செய்திருக்கிறான். ஆனால் பாவம், அந்த இன்னொரு பெண்ணின் காதல், அவனை வலுவாகப் பிடித்து இழுத்துவிட்டது. எப்படியும், இதுகளை எல்லாம் பார்க்கும்போது, குழந்தை மனதும் கஷ்டப்படும். அத்தோடு, நீங்களும் பிசினஸ்காரரர். உங்களுக்குப் புரியும். இவைகளைத் திருப்பித் தந்துவிட்டால்..." என்று நிறுத்த 'சரக்'கென்று அவரைத் திரும்பிப் பார்த்த ரேவதி வேகமாக உள்ளே ஓடினாள்.

எல்லாம் அரைக்காசு பெறாத சாமான்களாக இருக்கும். மொத்தம் ஒரு சில ஆயிரங்களை எட்டினால் அதிசயம். இதைப் பட்டியல் போட்டு நீட்டுகிறாரே, இவரெல்லாம் என்ன பெரிய மனிதன் என்று ஏளனமாக எண்ணியவாறு லிஸ்டை மேலோட்டமாக பார்த்த ரகுபதிக்கு, மொத்தக் கூட்டுத் தொகையைப் பார்த்ததும் முகம் மாறிவிட்டது.

திருமணம் கூட முடியவில்லை! இங்கே என்ன இல்லை என்று, அந்தப் பையனிடம் இவைகளைப் பெற்றுக் கொண்டாள் என்று எரிச்சல் படும்போதே, 'அவள் என்ன கேட்டாலும் வாங்கிக் கொடுத்து'

என்று மாதவன் கூறியது நினைவு வந்து, அவரை மேலும் குன்ற வைத்தது.

கேட்டு வேறு வாங்கிருக்கிறாளே! மகளுக்கு ஆசை கொஞ்சம் அதிகம்தான் என்றாலும், சமயத்தில் நல்ல புத்தி வந்ததே! சீக்கிரமாக எடுத்து வரட்டும் என்று எண்ணியவர், "போய்க் குட்டிக்கு உதவி பண்ணாமல், இங்கே ஏன் நிற்கிறாய்? போ" என்று மனைவியை விரட்டினார்.

அவளும் செய்வது அறியாமல், வேதனையை சகித்துக் கொண்டு நின்றவள்தானே?

மகள் எப்படி ஆடுவாளோ என்ற பயம் இருந்தாலும், முதலில் அவளை ஆறுதல் படுத்தும் தவிப்போடு வேகமாக உள்ளே சென்றாள்.

வழக்கம்போலச் சாத்தியிருந்த கதவுதான், ஆனால் திடுமென மனம் பதைக்கக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றால், பல்வேறு பொருட்களைக் கட்டிலில் பரப்பி வைத்துக்கொண்டு ரேவதி உட்கார்ந்திருந்தாள்.

மனம் உருக, "குட்டீ..." என்று அணுகிய தாயை, ரேவதி உறுத்து விழித்தாள். "என்ன சாமான்களை அள்ளிச் செல்ல வந்தாயாக்கும்! அதெல்லாம் முடியாது. இதில் ஒவ்வொன்றும், நான் ஆசைப்பட்டு வாங்கியது. இதில் எதையும் திருப்பிக் கொடுக்க மாட்டேன். எல்லாம் என்னுடையது!" என்று சீறினாள்.

சற்றுத் திகைத்துவிட்டு, "அப்பா போட்ட கைச்செயினைத் திருப்பித் தந்துவிட்டார்கள், குட்டிம்மா. அவர்களிடம் வாங்கியதை. நாமும் திருப்பிக் கொடுத்து விடுவதுதானே, நாகரீகம்? கொடுத்து விடம்மா" என்றாள் அன்னை!

"நாகரீகமா? அதைப் பற்றிப் பட்டிக்காடு, உனக்கு என்ன தெரியும்?" என்று, தாயைத் துச்சமாக மதித்துச் சீறினாள் மகள்.

ரேவதி இப்படிப் பேசுவது வழக்கமே என்பதால், பொறுமையாகவே அவளுக்கு எடுத்துச் சொன்னாள் அன்னை.

இப்படி இருவரும் வாதிடும்போதே, ரகுபதி உள்ளே வந்து சேர்ந்தார்.

"உன்னை என்ன சொல்லி அனுப்பினேன்? சொன்னதைச் செய்யாமல், என்ன உளறிக்கொண்டு இருக்கிறாய்?" என்று



மனைவியிடம் ஆத்திரம் காட்டினார்.

வீட்டில், எல்லோருக்கும் இளப்பம் அவள்தானே?

"இவள் எதையும் கொடுக்க மாட்டேன் என்கிறாளே!" என்றாள் அவள் அழுகுரலில்.

"என்னது?"

"ஆமாம்ப்பா! எதற்குக் கொடுக்க வேண்டும்? நான் ஆசையாக வாங்கியவை. அதுவும், எவ்வளவு யோசித்து, அந்த ஆளுக்குக் குல்லாப் போட்டுக் குளிர வைத்து சம்பாதித்தேன்! எல்லாம் என் பொருள்! திடீரென்று திருமணத்தை நிறுத்தியதற்காக, இவைகளுக்காக நான் உழைத்தது இல்லை என்று ஆகிவிடுமா? அதெல்லாம் ஒன்றும் திருப்பிக் கொடுக்க முடியாது. தர முடியாது என்று சொல்லுங்கள் போங்கள்!" என்று தந்தையையும் விரட்டினாள், செல்லம் கொடுத்து வளர்த்த மகள்.

திகைப்பாக இருந்தபோதும், முரட்டுத்தனமாக அவைகளைப் பிடுங்கிச் செல்ல, ரகுபதிக்கு மனமில்லை. அவரது பார்வையில், "எல்லாப் பொம்மையும் என்னதுதான். யாருக்கும் கொடுக்க மாட்டேன்" என்று சிறு குழந்தையாகவே மகள் தோன்றினாள்.

சற்று யோசித்துவிட்டு, அவரது அறைக்குள் சென்று, உரிய தொகைக்கு ஒரு செக் எழுதி, அதைக் கொண்டுபோய், மாதவனிடம் கொடுத்தார்.

"எதுவும் மறந்திருந்தாலும், நினைவு வரும்போது சொல்லுங்கள் சார், தந்து விடுகிறேன். செல்லமாக வளர்ந்தவள் பாருங்கள். பத்திரப்படுத்தத் தெரியாமல், அங்கங்கே போட்டிருப்பாள் போல, எல்லாம் தேடி எடுக்க முடியவில்லை..." என்று தடுமாறினார்.

இந்த ஒரு மாதத்தில், ரேவதி பற்றி, சுதாங்கனுக்கு ஒரு கணிப்பு இருந்தது. பலவாறு நடித்து, அவன் மூலம் பெற்ற பரிசுகளை அவள் ரகசியமாகத் தொட்டுத் தொட்டுப் பார்த்து மகிழ்வதை, அவன் கண்டிருக்கிறான். அப்படி அடைந்து மகிழ்ந்த பொருட்களை, அவள் எளிதில் விட்டுவிடுவாளா, என்ன?

"அதற்கென்ன சார், அப்படி எதுவும் இருந்தால், என் பிழைக்குத் தண்டனையாக எண்ணிக் கொள்கிறேன். நீங்கள் இந்த அளவு பொறுத்ததே பெரிது" என்றான் நயமாக.

மாதவனும் வந்த வேலை முடிந்தது என்று எழுந்தார்.

ஆனால், பவானிக்குத்தான் உள்ளூர ஒரே ஆத்திரம்.

உள்ளே ரேவதி அழுது கொண்டிருப்பதாகக் கற்பனை செய்து வருந்திய அவளது மனம், கணவரின் பின்னே சத்தமின்றி வந்து நின்ற திருமதி ரகுபதியின் கண்களில் நீரைக் கண்டதும், பாகாய் உருகி விட்டது.

விரைந்து சென்று. அவளது கையைப் பற்றி "கவலைப்படாதீர்கள் அண்... அம்மா. இந்தக் காலப் பிள்ளைகளின் போக்கு, நமக்குப் புரியவே இல்லை. ஆனால் ரேவதியின் அழகுக்கு, ரொம்பவும் சிறந்த மாப்பிள்ளை கிடைப்பான். என் ஆசி அவளுக்கு எப்போதும் உண்டு என்று அவளிடம் சொல்லுங்கள், வரட்டுமா?" என்று, மற்றவளின் கையை அழுத்தி விடை பெற்றாள்.

ரேவதியுடைய அன்னையின் கண்ணீர், பவானியை உறுத்திக் கொண்டே இருந்தது. ஒரு தாயைக் கண்ணீர் விட வைத்துவிட்டானே என்று மகன் மீது கோபம் வந்தது.

அதற்குக் காரணமானவளிடம், இன்னமும் அதிகக் கோபம் வந்தது.

சும்மா பையன் இப்படி ஆடக் கூடியவன் அல்ல. பெற்றோரின் பேச்சைக் கேட்டு, ரேவதியை மணக்க ஒத்துக் கொண்டவன்தானே? மறுப்பைக் கூட, என்ன பதவிசாகச் சொன்னான்!

இவள், இந்த மகாராணி இடையில் வந்திராவிட்டால், சீரும் சிறப்புமாக மகனின் திருமணம் நடந்து, அழகான மருமகள் வந்து, அடுத்து அழகான பேரக் குழந்தைகள் கிடைக்கும் வாய்ப்பும் கிடைத்திருக்கும்.

இப்போது, இந்தப் பெண் எப்படி இருப்பாள் என்று கூடத் தெரியாது! எப்படியும் ரேவதியின் அழகு இருக்கவே மாட்டாள்!

போக, வர, எங்கே போனாலும் எத்தனை பெண்களைப் பார்த்து சலித்துத் தேர்ந்தெடுத்த பெண், அந்த ரேவதி. அந்த அழகுப் பெண் கிடைக்கக் கொடுப்பினை இல்லை!

முன்னிருந்து காரை ஓட்டிய மகனை முதுகுப் புறத்தில் வெறித்து, "அவள் எப்படிடா இருப்பாள்?" என்று கேட்டாள்.

ஊர்ந்து செல்லுகிற அளவில் இருந்த போக்குவரத்தைச் சமாளித்து வண்டியை ஓட்டிக் கொண்டிருந்த சுதாங்கனுக்குத் தாயார், யாரைக்



கேட்கிறாள் என்பதே முதலில் புரியாமல் "யார் அம்மா?" என்று கேட்டான்.

பவானிக்குக் கோபம் வந்தது. யாரோ, மதி சொதி என்று பேர் சொல்லித் திருமணத்தையே, நிறுத்தியிருக்கிறான். இப்போது, யார் என்றே கேட்கிறானே!

பெரிய்ய காதல்தான்!

"அதுதானடா, ஏதோ மதி சொதி என்றாயே. அவளைத்தான் கேட்டேன்!" என்று அன்னை சலிப்புடன் கூறிய விதத்தில், சுதாங்கனுக்குச் சிரிப்பு வந்தது. விரும்பிய விதமாகப் பிரச்சினை தீர்ந்த நிம்மதி வேறு!

"அம்மா, நீங்கள் என்ன, இந்த 'சொதி'யை விடவே மாட்டீர்களா? அவள் பெயர் அழகானது. மதிவதனிம்மா! அதைப் போய், சொதி சொதி என்று சோதிக்கிறீர்களே! எதுகைப் பொருத்தத்துக்கு. 'ஜோதி' என்றாலும் பரவாயில்லை. என்னப்பா, இரண்டாம் எழுத்து ஒத்து வருவதைத்தானே, தமிழில் எதுகைப் பொருத்தம் என்பார்கள்?" தந்தையிடம் சந்தேகம் கேட்டான் அவன்,

அந்தச் சாக்கில். மதிவதனியின் தோற்றத்தை நினைவுக்குக் கொண்டுவர அவகாசம் எடுத்துக்கொண்டான்,

மொத்தத்தில் பார்ப்பதற்கு நன்றாகவே இருப்பதாகத் தோன்றியதே தவிர, அதற்கு மேல் பெரிதாக அவளைப் பற்றி, அவன் ஆராய்ச்சி பண்ணியதில்லை. ரேவதியோடான திருமணத்தை நிறுத்த உதவும் ஒரு கருவி என்றதற்கு மேலாக, அவளைப் பற்றி அதுவரை அவன் எண்ணிப் பாத்ததில்லை.

ஆனால், அன்னையிடம் அதைக் கூற முடியாதே!

அதுவும், இயற்கை அழகோடு, பார்லர் உபயமாக செயற்கை அலங்காரமும் சேர்ந்துகொள்ள, பளிச்சென்று கண்ணைக் கவரும் ரேவதியோடு ஒத்து நோக்கும்போது, தாயின் மனதில் மதிவதனி ரொம்ப மட்டமாகத் தோன்றிவிடக் கூடாது...

அவன் வேகமாக யோசிக்கும்போதே. "இப்போதைக்குத் தமிழ்ப் பாட்டிலக்கணம் பற்றி உன் அம்மாவுக்கு அணுவளவு கூட அக்கறையே கிடையாது, சுதா. உன் மதியழகி, இந்த ரேவதிக்குக் கொஞ்சமேனும் எட்டி வருவாளா என்ற ஒரே கவலைதான். அவள்

கேட்டதற்கு உரிய பதிலைச் சொல்லி, அம்மா கவலையைத் தீர்த்து வை!" என்றார் மாதவன்.

'பக்கத்து இலைக்குப் பாயசம் போடு' என்பது போல, அவருள்ளும் அதே ஆவல் இருப்பது நன்றாகவே தெரிந்தது. அவசரமாக யோசித்ததில், சுதாங்கனுக்கு உடனடியாக நினைவு வந்தது, ரேவதியை விட மதிவதனி ஒல்லி, உயரம் என்பதுதான். அதை அப்படியே சொல்லி மீள முடியாது.

எனவே அவன் வேகமாக யோசித்து, "வந்து... மதி நல்ல உயரம், அம்மா. கொடி மாதிரி மெமெல்லிசாக அழகாக இருப்பாள்.. பெபெரிய கண்கள், கண்களைச் சுற்றி இமை மயிர் அடர்ந்து, வளைந்து, அழகாகத் தெ...ரியும்..." என்று சமாளிக்கும்போது, பவானி குறுக்கிட்டாள்.

"சின்ன வயதில் எல்லாப் பெண்களுக்கும் இமை மயிர் அடர்ந்து வளைந்து அழகாகத்தான் இருக்கும். வயதாக ஆகத்தான், அடர்த்தி குறைந்து குச்சி குச்சியாய் நிற்கும்" என்றாள் அலட்சியமாக.

"நல்ல நீளமான கூர்மூக்கு..."

"கிளி மாதிரியா? கொட்டைகளை உடைத்துத் தின்பதற்காகக் கிளிகளுக்கும் கூர்மையான மூக்குதான். ஆனால் மனித முகத்தில் பார்க்க சகிக்காது...."

"அம்...மா!" என்றான் சுதாங்கன் குரலில் சிறு கண்டனம் தொனிக்க. "இந்த நிமிஷத்தில், உலக ரதியையே கொண்டுவந்து நிறுத்தினாலும், உங்களுக்குப் பிடிக்காது போலத் தெரிகிறது. ஆனால், படித்திருப்பீர்கள், உலக ரதி யார் என்று கேட்டதற்கு, என் மனைவி என்று ஒருவன் சொன்னதாக. இன்றைக்கு, எனக்கு மதிவதனிதான் உலக அழகி. அதுதான் முக்கியம்!" என்று ஒரே போடாகப் போட்டு முடித்தான்!

இனி, மூக்கு வாய் அது இதென்று, ஒவ்வொன்றாகச் சொல்லியாக வேண்டிய கட்டாயம் இல்லையல்லவா? மொத்தத்தில், மதிவதனி பார்வைக்கு மோசமில்லை என்பது அவனுக்கு நிச்சயம்.

அவசர அவசரமாகத் திட்டமிட்டதும், அந்தப் பொடியன் அவளுடைய தம்பியின் கேள்விகளுக்குப் பதில் சொன்னதுமாக, அவளை எங்கே கவனித்தான்?



ஒரு வழியாக, ரேவதி பிரச்சினை நல்லபடியாகத் தீர்ந்தது. இவளும் எந்த விதத்திலும் பிரச்சினையாக வழியில்லை. சென்னையில் இராமல், பெங்களூருவுக்கு விரைவிலே கிளம்பி விடப் போகிறாள். வேலையும் கிடைத்து விட்டதால், அவள் பாட்டை, அவளே பார்த்துக் கொள்ளுவாள்.

அப்படியே ஜவ்வு இழுத்து, தம்பிப் பையன் அவளை அழைத்துக் கொள்ளும்வரை சமாளிக்க வேண்டியதுதான்...

அவனது எண்ணங்கள் சந்தோஷமாக ஓடும்போது, தாயின் குரல் அதிலே குறுக்கிட்டது "என்னப்பா, இவன் மனைவி என்கிறான்? கல்யாணமே ஆகிவிட்டதா? இனிமேல் ஆகப் போகிறது என்பதில், அப்படிச் சொன்னானா?" என்று கணவரிடம் பவானி சந்தேகம் கேட்டுக் கொண்டிருந்தாள்.

இடையிட்டு, "ஐயோடா, என்னம்மா நீங்கள்? நீங்கள் இல்லாமல், எனக்குத் திருமணமா? நான் உத்தம புத்திரன் அம்மா!" என்று அறிவித்தான் பிள்ளை!

"உத்தம புத்திரனின் லட்சணத்தை, இப்போதுதானே பார்த்தோம்! நாங்கள் பார்த்து நிச்சயித்த பெண்ணை வேண்டாம் என்றுவிட்டு..."

"அம்மா, அந்தப் பேச்சு வேண்டாம். எதற்காக ரேவதியை மறுத்தேன் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும்! அவள் விஷப் பூச்சி, அம்மா. நம் குடும்பத்து சந்தோஷத்தை அடியோடு நாசமாக்கி விடுவாள்!"

உச்சுக் கொட்டி "என்னமோ சொல்கிறாய்! ஊரை வளைத்துத் தொழில் செய்கிறாய். ஒரு சின்னப் பெண்ணை சமாளிக்க... சரீ... சரீ.... அவள் பேச்சு இனிப் பேசி லாபமில்லை! இப்போது, இந்தப் பெண்ணை என் கண்ணில் காட்டப் போகிறாயா, இல்லையா?" என்று பவானி கறாராகக் கேட்டாள்.

"கட்டாயம், அம்மா! உங்களுக்கு எப்போது வசதி என்று சொல்லுங்கள், நானே அவளைக் கூட்டி வருகிறேன்!"

"ஏன்? நீ துணை வராவிட்டால், அவள் என்னைப் பார்க்க மாட்டாளா? அப்படி என்ன, நான் அவளைக் கடித்துத் தின்று விடுவேனா?"

திரும்பி மனைவியைப் பார்த்து, "பவிம்மா, நீ கோபத்தில்

பேசுகிறாய்...!" என்று இழுத்தார் மாதவன்.

"பின்னே என்னப்பா? அவளைப் பார்க்க வேண்டும் என்றால், வேலையைப் போட்டுவிட்டு, இவன் துணை வர வேண்டுமாக்கும்? இடம் சொன்னால், நான் போய்ப் பார்க்க மாட்டேனா?" என்று பவானி படபடத்தாள்.

"தாராளமாகப் பாருங்கள். மதிவதனி வேலைக்குப் போகிற பெண். அவள் வீட்டில் இருக்கிற நேரம் கேட்டுச் சொல்லுகிறேன். போய்ப் பாருங்கள்" என்று பணிந்து போனான் பிள்ளை.

இதற்கு, மதிவதனி என்ன சொல்லப் போகிறாளோ என்று அது வேறு உண்டுதான்.

ஆனால், ஒப்பந்தம் என்றால். அவளும் ஏதாவது செய்தாக வேண்டும்தானே?

யாருக்கும் சந்தேகம் ஏற்படாமல் இருந்தால் சரி,!

இந்த அளவுதான் சுதாங்கன் எதிர்பார்த்தது! ஆனால். நடந்தது, அவன் சற்றும் எதிர்பாராதது!

## சுந்தரி நீயும... 8

சுதாங்கனைப் பொறுத்த அளவில், மதிவதனி சற்று அமைதியாக இருந்து, எதையும் சமாளித்துக் கொள்ளுவாள் என்பதே.

அதிலும், தம்பி பாலகிருஷ்ணனுக்கு வெளிநாட்டுப் படிப்பும் வேலையும் கிடைப்பதற்காக, மானக் கேடு இல்லாத எதைச் செய்யவும், அவள் தயாராக இருந்தாள். அதைக் கெடுக்கும் விதமாக, லேசில் வார்த்தைகளை விட்டுவிட மாட்டாள்.

ஆனால், அவளுடைய தம்பி அப்படிப்பட்டவன் அல்ல. பேசி விட்டுத்தான் யோசிப்பான். உடனே மன்னிப்பும் கேட்டுவிடுவான் என்றாலும், சுதாங்கன் தாயார் பவானியிடம், அது பயன்படாது. அவனது பேச்சுதான், அதில் அவன் எதையாவது உளறி வைத்தால், அதுதான் மனதில் பதிந்து போகும். அந்தப் பெண் ரேவதியின் நினைவு அவள் மனதை விட்டு, அடியோடு அகலும்வரை, அல்லது அவளுக்கு வேறிடத்தில் திருமணம் முடியும்வரை, எச்சரிக்கையோடுதான் இருந்தாக வேண்டும்.



எனவே, பாலனுக்கு வாசகசாலை வேலை இருக்கும் நேரமாகத் தேர்ந்தெடுத்து, மதிவதனியிடம், தாயாரை அனுப்பி வைத்தான்.

முடிந்தவரை செலவைச் சுருக்கும் விதமாக, வசிக்கும் வாடகை வீடு. அது எப்படியும் தாயின் ஒப்புதலைப் பெறாது என்று சுதாங்கனுக்கு நிச்சயமாகத் தெரியும்.

எனவே, அவர்கள் சந்தித்த மாதிரி, பூங்கா, அல்லது காஃபி ஷாப் எதிலாவது, அவர்களது சந்திப்பை வைத்துக் கொள்ளலாமா என்று சுதாங்கன் ரொம்பவும் யோசித்தான். ஆனால், மதிவதனி அதை ஒப்பவில்லை.

இது, வெறும் உல்லாசச் சந்திப்போ, அல்லது தொழில் தொடர்பானதோ இல்லை. குடும்பம் என்கிற அமைப்பு பற்றியது. சுதாங்கன் சொன்ன இடங்களில் சந்தித்தால், தலைக்கு மேல் தங்குவதற்குக் கூரை கூட இல்லாதவள் இந்தப் பெண் என்று முதலிலேயே ஒரு கீழ்த்தரமான எண்ணம் உருவாகிவிடும் என்று மறுத்தாள்.

"எங்கள் வீடு, வெறும் ஹாலும் சமையலறை, குளியல் அறையுமான ஃப்ளாட்தான். ஆனால், சுத்தமாக இருக்கும். எங்கள் நிலை தெரிந்துதானே பார்க்க வருகிறார்கள்? ஏன் வீணே நாடகம் போட வேண்டும்? அப்படி நாடகமே போட்டாலும், அவர்களுக்கு அது புரிந்து போகும். அத்தோடு, அவர்கள் என்ன மட்டமாக எங்களை எடை போட்டாலும், அது ஒன்றும் வாழ்க்கை முழுதும் சகிக்க வேண்டிய துன்பம் இல்லையே! நாம் பிரிகிற வரை, தாற்காலிகமாகச் சகிக்க வேண்டியது அவ்வளவுதானே? பரவாயில்லை. பொறுத்துக் கொள்கிறோம்" என்று அவள் சொன்னது சரியாகவே தோன்றினாலும், அவனுக்குச் சிறு எரிச்சலும் உண்டாயிற்று.

ஒப்பந்தம் பிரிவதுதான். ஆனால், அதை ஜபித்துக் கொண்டே இருக்க வேண்டுமா என்று உள்ளூர ஓர் ஆத்திரம். இப்படியே உருப் போட்டுக் கொண்டிருந்தால், பெற்றோர் கண்டுபிடித்து விட மாட்டார்களா? அவர்கள் நம்பும்படி நடிப்பது அல்லவா, இப்போது முக்கியம்?

அது பற்றி அவளிடம் சொன்னபோது, "கவலைப்படாதீர்கள், சுதாங்கன் சார். தம்பியின் படிப்புக்கு எந்தக் குந்தகம் நேரவும் நான்

விட்டுவிட மாட்டேன். அதனால், ஒப்பந்தப்படி நான் நடப்பதில் எந்தக் குறையும் இராது!" என்று மதிவதனி உறுதி கூறியதும், அவனுக்கு ஏனோ முழுத் திருப்தியைத் தரவில்லை!

மறுபடியும் அந்த ரேவதி உள்ளே வந்துவிடாமல், எல்லாம் நல்ல விதமாக நடக்க வேண்டுமே என்ற கவலையே காரணம் என்று யோசித்துக் கண்டுபிடித்த பிறகே, அவன் மனம் ஓரளவு அமைதி அடைந்தது!

அப்போதும், மறுநாள் காலையில் இருந்தே, சுதாங்கனின் மனம் நிம்மதியற்றுப் பரபரத்தது. மதிவதனியை, அம்மா மோசமாக நினைத்து விடக் கூடாதே!

நினைத்து நினைத்து, மதிவதனியை அழைத்துப் பேசினான்.

இவனுடைய தாய்க்கு, எதெது பிடிக்கும், எதெது பிடிக்காது என்று பலமுறை தெரிவித்தான்.

நாலாவது தடவை, சுதாங்கன் அழைத்தபோது, மதிவதனி சொல்லிவிட்டாள் "கட்டிக் கொடுத்த சோறும், சொல்லிக் கொடுத்த வார்த்தையும் நிலைக்காது என்று தமிழில் ஒரு பாடலே இருக்கிறது, சுதாங்கன் சார். நான் பார்த்துக் கொள்ளுகிறேன். தயவுபண்ணி, வேலை நேரத்தில் இப்படிக் கூப்பிடாதீர்கள், சார்!" என்று பேச்சை முடித்தாள்.

பெரிய வேலை நேரம்! அவன் எத்தனை முக்கியமான விவரங்களை அவளுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறான்! எல்லாம், அவள் உருப் போட்டு, மனதில் பதித்துக் கொள்ள வேண்டிய விவரங்கள்! கவனமாகக் கேட்டு, மனதில் பதித்து வைத்துக் கொள்வதை விடுத்து, 'கூப்பிடாதீர்கள் சுதாங்கன் சாராமே'.... என்று எரிச்சலுடன் எண்ணமிட்டவன், விலுக்கென நிமிர்ந்தான்.

இந்த ஒரு வார்த்தை போதுமே, எல்லாம் நடிப்பென்று அம்மா கண்டுகொள்ள!

சட்டென்று மறுபடியும், மதிவதனியின் எண்ணை, சுதாங்கன் அழுத்தினான்!

இம்முறை, மதிவதனியின் குரலில் பொறுமையின்மை தெளிவாகத் தெரிந்தது, "மறுபடியும் என்ன சுதாங்கன் சார்?" என்று சலிப்புடனே வினவினாள்.

"இதேதான்" என்றான் அவன் முதல் வார்த்தையாக, "பேச்சில் என்னைக் குறிப்பிடும்போது. இந்த 'சாரை' விட்டுவிடு. வெறும் சுதாங்கன் போதும். 'சார்' சேர்த்தால், அம்மா கண்டுகொள்வார்கள். அவர்களுக்குக் கவனம் அதிகம்,!"

வினாடி நேர மௌனத்தின் பின், "சரி. நினைவு வைத்துக் கொள்கிறேன். இனியும் கூப்பிடாதீர்கள். என் வேலை கெடுகிறது. வேலை முடிய அதிக நேரம் பிடித்து, நான் தாமதமாக... அதாவது, உங்கள் அம்மா வந்த பிறகு, வீட்டுக்குப் போனால், நன்றாயிராது வைத்து விடுகிறேன்!"

என்ன பெரிய இது!" நான் என்ன, இவளோடு சல்லாபிக்கும் ஆசையிலா இவளைக் கூப்பிடுகிறேன்? வெறுமனே, அம்மாவுக்காக! அதுவும், அம்மாவிடம் இவள் சில விஷயங்களில் மாட்டிக் கொள்ளக் கூடாதே என்றுதான். மற்றபடி, இவள் குரலை அது என்னதான் இனிமையாக இருந்தாலும், அதைக் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும் என்று, அவனுக்கு ஒன்றும் ஆசையில்லை.

இதையும் மதியிடம் தெரிவித்து விடலாம் என்று மொபைலைக் கையில் எடுத்தவனுக்கு, அவளது எச்சரிக்கை நினைவு வரவே, அப்படியே மேஜையில் வைத்தான்.

மற்றெதையும் விட, பூட்டிய கதவின் முன் அம்மா நிற்க, மதிவதனி வீட்டுக்குப் போய்ச் சேர்வது, ரொம்பவே தப்பாகிவிடும்!

ஆனால், அப்படி நேராமலும் கூட, எல்லாமே தப்பாகித்தான் போயிற்று!

பல தீப்பெட்டிகளை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைத்தது போல, வரிசை வரிசையாகப் பல கட்டிடங்களைப் பார்க்கும்போதே, பவானிக்கு மனம் வெறுத்துப் போயிற்று.

ரகுபதியின் பந்தா வீடு மனதில் தோன்ற புசுபுசுவென்று உள்ளூர எரிச்சல் மண்டியது.

மாமனார் வீடு என்று அந்த வீட்டைக் காட்டினால், பெருமையாக இருக்கும்! இந்தப் பெரிய குடியிருப்பில், ஒரே மாதிரியான இந்தக் குட்டி வீடுகளில், எது அந்த மதிவதனி வசிக்கும் இடம் என்று கண்டு பிடிப்பதே கடினமாக இருக்கும் போலத் தெரிகிறதே!

இருந்திருந்து... அவளுடைய மகனுக்குப் புத்தி இப்படிப் போகவேண்டாம்!

ஆனால், போய்விட்டதே!

பணம் உள்ள இடத்திலேயே, அந்த ரேவதி பிடுங்குவதிலேயே குறியாக இருந்து, எல்லாவற்றையும் கெடுத்து வைத்திருக்கிறாள்,

இவளோ, கையில் பணம் காசு எதுவும் இல்லாதவள். தம்பியை வெளிநாட்டுக்கு அனுப்புவது என்றால் சும்மா, ஒரு 'சூமந்திரக்காளி' யில் நடக்குமா?

சுதாங்கன் வெளி நாட்டுக்குப் படிக்கப் போன போது, எவ்வளவு செலவாயிற்று! விலைவாசிக் கணக்கை வைத்துப் பார்த்தால், இப்போது குறைந்தது இரண்டு மடங்கேனும் ஆகியிருக்கும்! அவ்வளவுக்கு, இவள் எங்கே போவாள்?

பையனின் மயக்கத்தைப் பயன்படுத்தி எவ்வளவு கறந்தாளோ? கட்டாயம் முழுப் பணமுமே மகனிடம்தான் வாங்கியிருப்பாள் என்று மனதிற்குள் உறுதியாகத் தோன்றவும், பேசாமல் காரைத் திருப்பிக்கொண்டு போய்விடலாமா என்று எண்ணினாள் பவானி.

ஆனால், திரும்பிப்போய் மகனிடம் என்ன சொல்வது? அவளைப் பார்க்கவே இல்லாமல் திரும்பிவிட்டேன் என்றா? நன்றாயிருக்குமா? அதற்கு முன்னே, அவள் மகனிடம் ஏதாவது வத்தி வைத்துவிட்டால்?

ஒரே பிள்ளை! இந்தக் கண்ணராவிக் காதல் மயக்கத்தில், அவன் முகத்தைத் திருப்பினால், அதையும் தாங்க முடியாதே!

காரோட்டியிடம் மதிவதனியின் முகவரியைக் கொடுத்து, அவளது பொந்து வீட்டைக் கண்டுபிடித்து வருமாறு பவானி சொல்லத் தொடங்கும்போதே, துப்பட்டா எழிலாகப் பறக்க, ஓட்டமும் நடையுமாக ஒரு பெண் காரை நோக்கி விரைந்து வந்தாள்.

"ஹலோ ஆன்ட்டி. சுதாங்கனுடைய அம்மாதானே? வாருங்கள் ஆன்ட்டி. நான் மதிவதனி!" என்றாள் புன்னகை புரிந்து.

ஒரு கணம் திகைத்துவிட்டு, மெல்லக் காரை விட்டுப் பவானி இறங்கினாள்,

இப்படிச் சிரித்துதான், இவள், மகனை மயக்கினாளோ?

ரேவதியின் சிரிப்பு கூடப் பார்க்க அழகாகத்தான் இருக்கும். அச்சடித்த மாதிரி, எப்போதும், அதே சிரிப்பு! கடைசி நாளன்று மட்டும்தான், அந்தச் சிரிப்பு இல்லாமல் பார்த்ததே!

அவள் பேசியது தப்புதான் என்றாலும், கண்களில் மிரட்சியும்



பயமுமாக அவள் வீட்டினுள் ஓடியது மனதுக்குக் கஷ்டமாகவே இருந்தது. அதை விடவும், அவள் தாயாரின் கண்ணீர் இன்னமும் வேதனையாகவே இருந்தது!

மதிவதனியை ஒரு தரம் நன்றாகப் பார்த்துவிட்டு, சட்டென்று "இப்படி வெளிப்படையாகக் கேட்கிறாயே,! நான் வேறு யாரராவதாகவோ இருந்து, உன்னைக் கடத்திச் சென்றுவிட்டால்? இளம் பெண்கள் எச்சரிக்கையோடு இருக்க வேண்டாமா?" என்று, சிறு கண்டனம் தொனிக்கக் கேட்டாள் பவானி.

"அச்சத்துக்கு அவசியம் இல்லையே, ஆன்ட்டி! உங்கள் கார் நம்பர், நிறம், பெயர் எல்லாம், சுதாங்கன் சொல்லியிருக்கிறார். உங்கள் காரோட்டியின் தோற்றம் கூட விவரித்திருக்கிறாரே! உங்களைப் பற்றியும்! அதனால்தான் தைரியமாகக் கேட்டேன்" என்று மறுபடியும் முறுவலித்தாள் மதிவதனி.

இப்படிச் சிரித்தால், பையனுக்கு மூளை எப்படி வேலை செய்யும்? அதுதான், இப்படி அசட்டு வேலை செய்திருக்கிறான்! ஆனால், தன்னைப் பற்றியும் சொன்னானாமே! என்ன சொல்லியிருப்பான்?

அறிந்து கொள்வதற்குப் பவானிக்கு ஆவல்தான். ஆனால், ஆவலைக் காட்டிக் கொள்ளவும் பிடிக்கவில்லை.

மதிவதனியே சொல்வாளோ என்று ஆசையாகக் கவனித்தால், அவள் வேறு பேசினாள்.

"ஆன்ட்டி. இங்கே இரண்டாவது மாடி, 'லிஃப்ட்' கிடையாது. உங்களுக்கு ரத்த அழுத்தம் எதுவும் கிடையாது என்று, சு... உங்கள் மகன் சொன்னார். எதற்கும் கொஞ்சம் மெதுவாகவே ஏறுகிறீர்களா?" என்று கேட்டாள்.

தன்னைப் பற்றி மகன் என்ன சொல்லியிருப்பான் என்று அறிய, பவானியின் மனம் துடித்தது. ஒருவேளை, இந்த ரத்த அழுத்தம் பற்றித்தான் சொன்னானோ, என்னவோ? ஆனால், ரத்த அழுத்தத்தை வைத்து, ஒருவரை எப்படி அடையாளம் காண முடியும்?

வேறேதான் சொல்லியிருக்க வேண்டும். இவளானால், முக்கியமான அதைச் சொல்லாமல், ஏதேதையோ உளறுகிறாளே!

எரிச்சலை அடக்கிக்கொண்டு, "வேறு வழிதான் எதுவும் இல்லை போலத் தெரிகிறதே! வீட்டைக் காட்டு. ஏறலாம்." என்றாள்

சலிப்புடன் சலிப்பை மறைத்துப் பேசும் முயற்சி எடுக்கக் கூட அவளுக்கு மனம் வரவில்லை. "அதில்லை ஆன்ட்டி. படியேற இயலாதபடி உடம்பில் ஏதாவது பிரச்சினை இருந்தால், இங்கே கீழேயே ஒரு சிறு கோயில் இருக்கிறது. அங்கே போய் உட்கார்ந்து கூடப் பேசலாம். என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டாள் மதிவதனி.

"சரிதான். ஆக மொத்தம், என்னை நோயாளி ஆக்கிக் கிடத்தி விடுவாய் போல இருக்கிறதே! படி எங்கே இருக்கிறது என்று காட்டுகிறாயா.... அல்லது வீட்டில் உட்கார இடம் இருக்காதோ?" என்று, குரலில் சிறு எள்ளலுடன் கேட்டாள் பவானி.

படிகள் பக்கமாக ஓர் எட்டு எடுத்து வைத்த மதிவதனி, திரும்பி, மற்றவளை ஆழ நோக்கினாள்.

மீண்டும் லேசாக முறுவலித்து, "மாடி ஏற முடியும் என்று தெரிகிறது, வாருங்கள் ஆன்ட்டி" என்று வழிகாட்டி, முன்னே சென்றாள்,

பழங்கள் நிறைந்த பையோடு, காரோட்டி, அவர்களைப் பின் தொடர்ந்தார்,

"இந்தப் பக்கம், ஆன்ட்டி?" என்று வழி சொல்லத் திரும்பியவள் கண்ணில் அவர் பட, வயதான அவனை ஒரு தரம் பார்த்துவிட்டு, "என்னிடம் கொடுங்கள். டிரைவர், நீங்களும் சேர்ந்து அனாவசியமாகப் படியேற வேண்டாம்" என்றாள் பரிவான குரலில்,

"பரவாயில்லைம்மா, நானே..." என்று லேசாக மறுத்தவர், அவள் மறுபடி வற்புறுத்தவும், "ரொம்பத் தாங்க்ஸ்மா" என்று பைகளை அந்தப் பெண்ணிடம் கொடுத்துவிட்டுக் காருக்குத் திரும்பிச் சென்றார்.

சற்று நிதானமாகவே ஏறியபோதும், ஏறி முடிக்கையில் பவானிக்கு மூச்சு வாங்கியது.

சற்று மூச்சு வாங்கிக்கொண்டு "இப்போது ஃப்ளாட் கட்டும் குடியிருப்புகளில் உடற்பயிற்சிக்கு என்று ஜிம் ஒன்று அமைக்கிறார்கள். ஆனால், இங்கே ஜிம்முக்குத் தனியாகச் செலவு பண்ணவே வேண்டாம். படியேறுவதே போதும்" என்றாள் பெரியவள்.

மதிவதனியை மட்டம் தட்டத்தான் அவள் சொன்னது.

ஆனால், அவளது பேச்சை இயல்பாக ஏற்று "நீங்கள் சொல்வது சரிதான் ஆன்ட்டி. இங்கே ஐநூறு அப்பார்ட்மெண்டுகள் இருக்கின்றன, தொழில் நன்றாக நடக்கும் என்று அவ்வப்போது யாராவது மருத்துவர்கள் வந்து போர்டு போடுவார்கள். வருமானமே இல்லை என்று சீக்கிரமே இழுத்து மூடிக்கொண்டு போய்விடுவார்கள்!" என்று விட்டடித்தாள் மற்றவள்.

அது மட்டுமல்ல, அவளது அழகான பல் வரிசையைக் காட்டிச் சிரிக்க வேறு செய்தாள்!

தன் பேச்சுக்குப் பதில் பேச்சுப் பேசித் தன்னையே மட்டம் தட்டுகிறாளா என்று, பவானியின் நெஞ்சு கொதித்தது!

இவளது தகுதிக்கு, பவானி முன்னே கைகட்டி நின்று பேச வேண்டும்.

பல் வரிசை அழகாகத்தான் இருந்தது. அதிலேயே பையன் ஒரேயடியாக மயங்கியும் இருக்கலாம். ஆனால், யாரிடம் அதைக் காட்டுவது என்று தெரிய வேண்டாம்? தெரிய வைப்பது கடினமும் இல்லை!

சுற்றிலும் பார்த்து "இவ்வளவுதான் வீடா?" என்று, புருவம் உயர்த்திக் கேட்டாள் பவானி.

இதற்கும், மதிவதனி இயல்பாகவே பதில் சொன்னாள். "ஆமாம் ஆன்ட்டி. ஹால், கிச்சன், குளியல் அறை மட்டும்தான். பாலன் படிப்புக்கு நிறையப் பணம் தேவைப்பட்டதால், மற்ற செலவுகளை முடிந்தவரை சுருக்கிக் கொண்டோம். வயிற்றுக்கு வஞ்சனை செய்தால், வைத்தியருக்குக் கொடுக்க வேண்டி வரும். அதனால், சத்தாக உண்பதில் சிக்கனம் பார்ப்பதில்லை. மற்றபடி, இருப்பிடம், துணிமணி எல்லாம் சிக்கனக் கணக்குதான். அதனால்தானே, படிப்பின் மூலமாகவே, பாலா இவ்வளவு சாதிக்க முடிந்தது!" என்றதிலும், குன்றல் குறுகல் எதுவும் இல்லாத எதார்த்தம் மட்டுமே!

எதார்த்தமா? அல்லது, நான்தான் புளியங்கொம்பைப் பிடித்து விட்டேனே! இனி நீ என்னை என்ன செய்ய முடியும் என்கிற அலட்சியமாயிருக்குமோ?

அதேதான்! திமிர்தான்! இவளுக்கு ஓங்கி ஒன்று வைத்துதான் ஆக வேண்டும்!

"ஹாலில்தான் படுத்துத் தூங்குவதும் போல? வேறே இடத்தைக்

காணோமே!"

"ஆமாம் ஆன்ட்டி. நீங்கள் உட்கார்ந்திருக்கிறீர்களே, அந்த நாடாக் கட்டிலில் பாலன் படுத்துக் கொள்வான். எழுந்ததும் சமையலறைக்குச் செல்ல வசதியாக, நான் இந்தக் கதவின் பக்கம் படுப்பேன். கொஞ்சம் காஃபி குடிக்கிறீர்களா, ஆன்ட்டி?. என் காஃபி பரவாயில்லாமல், நன்றாகத்தான் இருக்கும்! அல்லது பழங்கள் ஏதாவது? மாதுளம்பழம் உதிர்த்து வைத்தேன். கொண்டு வரட்டுமா?" என்று, விருந்தோம்பலைத் தொடங்கினாள் மதிவதனி.

ஆனால், அதுதான் பவானியின் ஆத்திரத்தை அதிகம் தூண்டி விட்டுவிட்டது.

இத்துனூண்டு குடிசை வீட்டுக்காரி, சுற்றித் தோட்டம் வைத்து, மூன்று மனையளவு நிலத்தில் கட்டிய மாளிகைவாசியாக வாழ ஆசைப்படலாம். அது மகா நியாயம்! ஆனால், இந்த வீடு ரொம்பச் சின்னது என்று உண்மையைச் சொன்னால், அது இந்தம்மாவுக்குத் தாங்கவில்லையாம்,

ரொம்பவும் நாகரீகமாகப் பேச்சை மாற்றுகிறாளாம்!

அப்படியானால், இந்தப் பவானிக்கு, அருமை பெருமையாக ஒரு பிள்ளையைப் பெற்று, இந்த நாகரீகவாதியே மயங்கும் அளவு வளர்த்து வைத்திருக்கிறாளே, அவளுக்கு நாகரீகம் தெரியாதாமா? என்ன திமிர்!

அவளது காலடி படத் தகுமா இந்த வீடு?

எங்கே எங்கே என்று கட்டு மீறத் துடித்த சீற்றம் தன்னை மீற, "என்னடீ கொழுப்பா?" என்று பவானி எழுந்துவிட்டாள்.

"ஆன்ட்டீ?" என்று வியப்பும் கேள்வியுமாக மதிவதனி நோக்க, இன்னமும் மிஞ்சிய சினத்துடன் "ஏன்? இது ரொம்பவும் சிறியதான வீடு இல்லையா? இதைப் பற்றிப் பேசவே கூடாதாக்கும்? அவ்வளவு பெரிய மாளிகைக்கு மகாராணி ஆக முயற்சிக்கிறாயே, அதற்கு வேண்டிய தகுதி உனக்கு இருக்கிறதா என்று யோசிக்க வேண்டாம்? ஒரு நல்ல குடிப்பிறப்பு, உயர்ந்த வாழ்க்கை நிலை, ஏதாவது ஒன்றேனும் வேண்டாமா?" என்று படபவென்று பேசினாள் பெரியவள்.

"ஆன்ட்டி!"என்று வியப்புடன் விழி விரித்து, ஏதோ சொல்ல



முற்பட்ட மதிவதனி, எதையும் சொல்லாமலே மௌனமானாள்.

மதிவதனியின் அழைப்புக் கூடக் காதில் விழாதது போலப் பவானி தொடர்ந்து படபடத்தாள்.

"காற்றடித்தால், குப்பையும் சருகும் கூடப் பறந்து போய்க் கோபுரக் கலசத்தில் ஒட்டிக் கொள்ளலாம். ஆனால், அது நிலைக்குமா? அடுத்த காற்றில் பறந்து, கீழே விழுந்துவிடாதா? தகுதிக்கு மீறி ஆசைப் படுகிறவர்களின் கதியும் அதுதான். தெரிந்துகொள், கீழே விழும்போது, வலியும் அவமானமும் ரொம்ப அதிகமாக இருக்கும்! அது வேண்டாம் என்றுதான், எல்லோரும் அவரவர் தகுதிக்கு ஏற்றபடி வாழ்க்கையை அமைத்துக் கொள்வது.

"என் பிள்ளைக்குக் கிட்டத்தட்ட அப்படி அமைந்திருந்த நேரத்தில், கரடி மாதிரி வந்து, எல்லாவற்றையும் கெடுத்துவிட்டாயே...."

கரடி? நானா? லேசாகக் குனிந்து தன்னையே பார்த்துக் கொண்டவளுக்கு, உள்ளூரச் சிரிப்பு வர, வாயை இறுக மூடி, அதை அடக்கிக் கொண்டாள்.

இப்போது மட்டும் மதிவதனி சிரித்து வைத்தால், அதற்கு வேறு, சுதாங்கன் தாயிடம் எவ்வளவு வாங்கிக் கட்ட நேருமோ?

அந்தத் தாயின் பேச்சில் கடுகளவும் உண்மை இல்லாத காரணத்தால், மதிவதனிக்கு வலியோ வருத்தமோ ஏற்படவில்லை.

மாறாக, மகனின் நாடகத்தை உண்மை என்று எண்ணி, இந்தப் பாடு படுகிறாளே, இந்தத் தாயார் என்று பரிதாபமாகத்தான், அவள் உணர்ந்தாள். அவளது வேலையே கெடும்படியாகத் தன்னிடம் அவ்வளவு பேசியவன், தாயிடமும் ஏதாவது சொல்லியிருக்கலாமே! கொஞ்சமேனும் அவளையும் தயார்ப்படுத்தி இருந்தால், இந்த அன்னை இவ்வளவு அதிர்ந்து போகத் தேவையிராதே என்றே அவளது எண்ணங்கள் ஓடின.

ஆனால், முதலிலேயே மதிவதனியின் கண்களில் பளிச்சிடலைக் கண்டுவிட்ட பவானி கொதிநிலையை அடைந்திருந்தாள்.

"ஏய், நான் இவ்வளவு எடுத்துச் சொல்லுகிறேன், சரிதான் என்று கேளாமல், சிரிக்கிறாயா? என் மகனைக் கைக்குள் போட்டுவிட்ட தைரியமா? ஆனால் என்னை ஒரு நாளும் ஏமாற்ற முடியாது! உன்னை... உன்னை...." என்றவள் நெஞ்சை அழுத்திக்கொண்டு

அப்படியே உட்கார்ந்துவிட்டாள்.

"ஆன்ட்டீ..." என்று அவசரமாக அருகில் ஓடி வந்து, "என்ன செய்கிறது, ஆன்ட்டி?" பெரியவளின் கையைப் பற்றிக் கேட்டாள் மதிவதனி.

சின்னவளின் கையை அழுந்தப் பற்றி, "என்னவோ என்னவோ, நெஞ்சு வெடிக்கிற மாதிரி அ...அடிக்கிறது" என்று முனகிய வண்ணமே, கட்டிலில் உணர்வற்றுச் சாய்ந்தாள் பவானி!

## சுந்தரி நீயும்... 9

செய்வது அறியாமல் மதிவதனி திகைத்து நின்றது ஒரே ஒரு கணமே!

உடனேயே உள்ளே ஓடிப்போய், பாத்திரத்தில் நீரை எடுத்து வந்து, லேசாக முகத்தில் தெளித்தாள், எதிலோ படித்தது நினைவு வர, பவானியின் உச்சந் தலையில் கையால் மெதுவாக அழுத்தி விட்டாள்.

சற்றே அசைந்து கொடுத்த பவானி, லேசாகத் திரும்பிப் படுத்து, மறுபடியும் கண்களை மூடிக் கொண்டாள்.

நெஞ்சுப் படபடப்பு! சுதாங்கன் தாயாருக்கு, ரத்த அழுத்தம் ஏதேனும் உண்டா இல்லையா என்று, ஒன்றும் தெரியாதே!

சாலை தாண்டி, எதிரே இன்னொரு குடியிருப்பில், ஒரு டாக்டர் கிளினிக் வைத்திருந்தார். எதற்கும் இருக்கட்டும் என்று அவரது எண்ணை, மதிவதனி குறித்து வைத்திருந்தாள்.

அவருக்கு ஃபோன் செய்து கேட்டதில், ஸ்ட்ரெச்சரோடு வேன் அனுப்புவதாகச் சொன்னார். இதயப் பலஹீனம் இருந்தால், நோயாளியை நடக்க விடுவது நல்லதல்ல என்று அபிப்பிராயப்பட்டார் அவர்.

இத்தனைக்கும், பவானி எழவே இல்லை. அரைக் கண்ணாக அவள் பார்வை இருந்தது. மதிவதனியையும் அச்சுறுத்தியது. ஆனால், மூச்சு வேகம் சரியாக இருக்கவே, சற்றே அமைதியுற்று, சுதாங்கனைக் கூப்பிட்டாள்.

பதறிய அவனிடம் டாக்டர் தெரிவித்ததைச் சொல்லி ஓரளவு அமைதிப்படுத்தி, அவனுடைய தாயை அழைத்துச் செல்லும் இடம்



தெரிவித்தாள். தந்தையிடமும் சொல்லுமாறு கூறிவிட்டு, பேச்சை முடித்தாள்.

அதற்குள் டாக்டர் தன் ஆட்களை அனுப்பியிருந்தார்.

சும்மா என்றால் செய்வாரோ, என்னவோ? ஒரு தரம் வருஷப்பிறப்பு விழாவுக்கு இந்தக் குடியிருப்புக்கு வந்த டாக்டரிடம், அவளைப் பற்றி, செகரட்டரி பயங்கரமாகப் புகழ்ந்து தள்ளிவிட்டார். அப்போதுதான், அவரது எண் மதிவதனிக்குக் கிடைத்ததும்.

எப்போது மருத்துவ உதவி தேவை என்றாலும் கேட்கச் சொல்லி, அவரே அவளிடம் கொடுத்தது. அடுத்த ஆண்டு விழா நெருங்கும் இப்போது கூட, அதற்கு இவ்வளவு மதிப்பு இருக்கக் கூடும் என்று மதிவதனியே எதிர்பார்க்கவில்லை!

டாக்டர், ஒரு நர்சையும் கூட அனுப்பியிருந்தார்.

சோதித்துப் பார்த்துவிட்டு, "பால்பிடேஷன் இருக்கிறது. ஆனால், பயப்பட ஒன்றுமில்லை. எதற்கும், டாக்டர் சாரும் பார்த்து விடட்டும்" என்றாள்.

ஸ்ட்ரெச்சரைப் பார்த்ததும், பவானியின் படபடப்பு இன்னமும் அதிகம் ஆயிற்று.

கட்டிலில் அசையாமல் அழுந்த இருந்தவள், கையை நீட்டி, மதிவதனியை மட்டும் இறுகப் பற்றிக் கொண்டாள்.

இப்படிப் படுத்துப் போவது தேவை என்றால், தனக்கு என்னமோ ஆகிவிட்டது போலிருக்கிறதே என்று பவானி பயந்துவிட்டாள் என்று, சின்னவளுக்குப் புரிந்தது.

நர்சிடம் அவள் பேசினாள், "அதுதான் ஒன்றுமில்லை என்கிறீர்களே. நர்ஸ், இந்த ஸ்ட்ரெச்சர் எதற்கு? டாக்டரிடம் பார்க்கும் வரை ஆன்ட்டி நடக்க வேண்டாம் என்றால், 'ஃபையர்மேன் லிஃப்ட்' என்பார்களே, அது போல ஆன்ட்டியைக் கூட்டிப் போய்விடலாமே. ஒரு பக்கம் நான் தூக்குகிறேன்!" என்று உதவ முன்வந்தாள்,

கண்களை நேராகப் பார்த்து அவள் சொன்ன சேதி புரிந்து, "அது சரிதாம்மா. நன்றாக இருக்கிறவர்களுக்குச் சீக்காளி மாதிரி. இது போலத் தூக்குப் படுக்கை எதற்கு? ஆனால், டாக்டர் சார் பரிசோதிக்கும் வரைக்கும், உடம்பை சிரமப்படுத்திக் கொள்ளவும் வேண்டாம். நீ சொல்கிற மாதிரியே கூட்டிப் போகலாம்! என்று,

அது போலவே, பவானியைக் கீழே கூட்டிப் போனார்கள்.

என்ன என்று பார்க்க வந்த பக்கத்து ஃப்ளாட் பெண்மணியிடம் வீட்டைப் பூட்டுமாறு கோரிச் சாவியைக் கொடுத்துவிட்டு, பவானிக்குச் சிரமமோ பயமோ இல்லாதபடி, அவளைக் கீழே இறக்கிக் கூட்டிப் போவதில், மதிவதனி முனைந்தாள்.

ஓடி வந்த காரோட்டியையும் கூட்டிக்கொண்டு, மருத்துவமனைக்குச் சென்றார்கள்.

உடனடியாக ஒரு நோயாளிக்கு சிகிச்சை அளித்துக் கொண்டிருந்த மருத்துவர் வருவதற்குச் சற்றுத் தாமதம் ஆயிற்று.

அவ்வளவு நேரமும் பவானியின் நெஞ்சுக்குள் ரயில் ஓடிக் கொண்டேதான் இருந்தது. தனக்கு என்னவோ என்ற பயம் அவளுக்குத் தீரவே இல்லை.

உணர்ச்சி வசப்பட்டுக் கத்திப் பேசுவதும், உடனே நெஞ்சை அழுத்திக்கொண்டு விழுந்து சாவதுமாக, எத்தனை தொலைக்காட்சித் தொடர்கள், திரைப்படங்களில் பார்த்திருக்கிறாள்!

அவ்வளவு நேரம் பொரிந்து கொட்டினாளே! திரும்பவும் உருப்படியாக வீட்டுக்குப் போவாளா? அல்லது இங்கேயே... என்று மனது ஓடும்போதே, அவளுக்குக் கைகால்கள் சில்லிடத் தொடங்கின.

ஒரே பிள்ளை! அவனுக்கு ஒரு நல்லது பண்ணிப் பார்க்காமலே, அவனை விட்டுவிட்டுப் போய்விடப் போகிறாளா? இன்னும் இந்த டாக்டரைக் காணோமே!

சுற்று முற்றும் பார்க்கையில், அருகில் நின்று அவளையே பார்த்துக் கொண்டிருந்த மதிவதனிதான் தெரிந்த முகமாக இருந்தது. அக்கறை காட்டுவதாகவும்.

பவானி பார்ப்பதைக் கண்டு "என்ன ஆன்ட்டி, ஏதாவது வேண்டுமா? டாக்டர் இதோ வந்துவிடுவார். ஒரு சின்னப் பெண்ணுக்கு அடிபட்டு ஏதோ பிரச்சினை என்று பார்த்துக் கொண்டிருக்கிறாராம். சிகிச்சை முடிகிற நேரம்தான். எதற்கும் நான் போய்ப் பார்த்துவிட்டு வரட்டுமா?" என்று கேட்டாள்.

ஐயோ, இவளும் தூரப் போய்விட்டால், அந்த நேரத்தில் தனக்கு மோசமான வலி ஏதும் வந்துவிட்டால்?

சட்டெனச் சின்னவளின் கையைப் பற்றி "ஒன்றும் வேண்டாம், நீ



என் பக்கத்திலேயே இரு!" என்றாள் தீனக்குரலில்.

பற்றிய கையை லேசாக அழுத்தி "கட்டாயம் ஆன்ட்டி. உங்களை விட்டு நான் எங்கேயும் போக மாட்டேன். கவலைப்படாமல், உடம்பு, மனதை இயன்றவரை தளரவிட்டு, இலகுவாக இருங்கள். நான் இங்கேயே இருக்கிறேன்" என்றாள் மதிவதனி.

அப்போதும் சின்னவளின் கையை விடாமலே, சக்கர நாற்காலியில் நன்கு சாய்ந்து, கண்களை மூடிக்கொண்டாள் பவானி.

மதிவதனி தந்த தகவலில், விழுந்தடித்துக்கொண்டு வந்த தந்தையும் மகனும் பார்த்த காட்சி இதுதான்.

ஒரு கணம் தயங்கி நின்ற மாதவனின் மனதை இந்தக் காட்சி பலமாகத் தாக்கிப் பதிந்தது.

மாடியும் கீழேயுமாக, அவர்களது பெரிய வீட்டில் ஓடியாடி, வேலையாட்களை விரட்டிப் பராமரிக்கிற பவானி, இப்படிச் செயலிழந்து சக்கர நாற்காலியில் கண் மூடிச் சாய்ந்திருப்பது அவரைப் பெரிதும் பாதித்தது என்றால், கூடவே மனைவியின் கை, அந்தப் பெண் மதிவதனி... அவளாகத்தான் இருக்க வேண்டும், ஆதாரம் போல அவளது கையைப் பவானி பற்றியிருந்தது, இன்னும்அழுத்தமாகப் பதிந்தது.

அதே போலப் பவானியைப் பரிவுடன் பார்த்திருந்த சின்னப் பெண்ணின் முகமும். சுதாங்கனுக்கும் ஓரளவு அப்படித்தான் என்றாலும்; இன்னொரு விதமாக உள்ளூர ஓர் ஒத்துப் பார்த்தலும், தானாக ஓடியது.

அந்த ரேவதி, இது போலக் கனிவாக அவனுடைய தாயின் கையைப் பிடித்துக்கொண்டு ஒரு மருத்துவமனையில் என்றேனும் நிற்கக் கூடுமா?

வாய்ப்பே கிடையாது! நோயாளிகளை, அதற்காகவே படித்த நர்சுகளிடம் விட்டுவிட்டுத் தூரப் போய்விட வேண்டும். கூடக் கூட வைத்துக்கொண்டால், நமக்கு மூடே கெட்டுவிடும், என்பாளே! அவள், இப்படி அம்மாவின் பக்கத்தில், அந்த சக்கர நாற்காலிக்குச் சரியாக உடம்பை வளைத்துக்கொண்டு நிற்பாளா?

அப்படி நிற்பது ஒன்றும் இலகுவான போஸ் அல்ல.

கல்லூரியில் 'ராகிங்'கில் அவன் மாட்டியபோது, இந்தப் போசில்

அவனை அரை மணி நேரம் நிறுத்தி வைத்துவிட்டார்கள். எத்தனை நாட்கள் வலித்தது என்று அவனுக்கு அல்லவா, தெரியும்.

முதலில் அவனை இந்தப் போசில் இருந்து விடுவிப்பது முக்கியம்!

தாய் அமர்ந்திருந்த நிலை அவனையும் பாதித்தது என்றாலும், ஆபத்து இல்லை என்று மதிவதனி சொன்னதில் அவனுக்கு நம்பிக்கை இருந்தது. மனதார உணராத எதையும் அவள் சொல்வதில்லை என்று இந்தச் சில நாட்களில் அறிந்திருந்தான்.

அத்தோடு, மெய்யாகவே ஆபத்தான நிலை என்றால், இப்படி வெளியே காத்திருக்க வைத்திருக்க மாட்டார்கள். படுக்கையில் கிடத்தி, உரிய சிகிச்சைகளைக் கொடுத்துக் கொண்டிருப்பார்கள்.

சற்றே ஆறுதல் அடைந்து, தயங்கி நின்ற தந்தையின் தோளைத் தொட்டு "வாங்கப்பா, அம்மாவிடம் போவோம்" என்று அழைத்துச் சென்றான்.

தந்தையின் கை சில்லிட்டு இருப்பதை உணர்ந்து "அப்பா, பயப்பட வேண்டாம். அம்மாவுக்குப் பெரிதாக ஒன்றுமில்லை என்று மதிவதனி சொன்னாள். நர்சிடம் கேட்டுத்தான் சொன்னாள். பயப்படாமல் வாருங்கள்" என்று தைரியம் சொன்னான்.

இருவரும் அருகில் நெருங்கவும் அவர்களைப் பார்த்துவிட்டு, "ஆன்ட்டி, உங்கள் மகன் வருகிறார் பாருங்கள். கூட உங்கள் கணவரும்" என்று காதருகில் குனிந்து மெல்லக் கூறினாள்.

அந்த வினாடியே, மதிவதனியின் கைப் பலம் பவானிக்கு மறந்து போயிற்று. "சுதாப்பா..." என்று நாத் தழுதழுக்க அவள் அழைக்க, மாதவனும் ஒரே எட்டில் மனைவியை நெருங்கி அவளது கையைப் பிடித்துக் கொண்டு, "என்னம்மா, என்ன செய்கிறது?" என்று உருகினார்.

மதிவதனி மெல்ல நகர்ந்து ஒதுங்கி நின்றாள்.

அதற்குள் டாக்டர் வந்துவிட்டதால் பவானியைப் பரிசோதனை அறைக்கு அழைத்துச் செல்ல வந்து சேர்ந்த நர்ஸ், மாதவனுக்குப் பதில் சொன்னாள்.

"பெரிதாக ஒன்றுமில்லை, சார். கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டிருப்பார்கள் போலத் தெரிகிறது, அது... இரண்டாவது மாடியில்லை? படியேறியதாலும் இருக்கலாம். இதயம் சற்று வேகமாகத் துடித்திருக்கிறது. உடனே பயந்து, இன்னும்



அதிகமாகியிருக்கிறது. இது, என் அபிப்பிராயம். எதற்கும் டாக்டர் ஒரு தரம் பார்த்துவிடட்டும். உங்கள் எல்லோருக்குமே திருப்தியாக இருக்கும். விலகிக் கொள்கிறீர்களா?" என்றுவிட்டு, கூட வந்த ஆளிடம், 'வீல் சேரை'த் தள்ளிச் செல்லுமாறு பணித்தாள்.

அந்த வராந்தாவின் கோடியில் இருந்த அறை வரை, மாதவன் மனைவியோடு கூடச் சென்றார்.

அவர்கள் செல்வதைப் பார்த்துவிட்டுத் திரும்பிய சுதாங்கன், மதிவதனியின் குற்றம் சாட்டும் பார்வையைக் கண்டு திகைத்தான்.

"ஹேய், என்ன விஷயம்? இதில் நான் என்ன செய்தேன்? அம்மாவின் படபடப்பு எனக்கும் எதிர்பாராத அதிர்ச்சிதான்" என்றான் அவன்.

"எதிர்பார்த்திருக்க வேண்டும்" என்றாள் அவள், அழுத்தத்துடன்

"ஏன்?"

"பின்னே? எனக்கு எத்தனை தடவை ஃபோன் செய்து, உங்கள் அம்மாவுக்காக எத்தனை சொல்லி என்னைத் தயார்ப்படுத்தினீர்கள்? எங்கள் வீடு எப்படி இருக்கும், எங்கள் நிலைமை என்ன என்று அவர்களிடமும் தெளிவுபடுத்தி இருக்க வேண்டாமா?

"ஹால், கிச்சன், குளியலறை மட்டுமாக, அந்தக் குட்டி வீட்டைப் பார்த்ததே, அவர்களுக்கு அதிர்ச்சியாகி இருக்கிறது. பிடிவாதமாகப் படியேறியது வேறு. அந்த... அவள்தான், உங்கள் ரேவதியின் வீட்டை மனதுள் ஒத்துப் பார்த்திருப்பார்கள் போல! அது பற்றி ஏதோ சொல்லப் போக... நான் பேச்சை மாற்ற முயற்சிக்க, ச்சு. போங்கள்! நீங்கள் கொஞ்சமேனும். அவர்களிடம் விவரம் சொல்லியிருக்க வேண்டும்"

"ஒரு திருத்தம். ரேவதியை, 'உங்கள் ரேவதி' என்று அடைமொழி கொடுத்துச் சொல்ல வேண்டாம். அவள் ஒருபோதும் அப்படி ஆகப் போவது இல்லை. அடுத்ததாக இன்னும் ஒன்று. அம்மாவிடம் விவரம் சொல்வதற்கு, உன் வீடு எப்படி இருக்கும் என்று எனக்கே தெரியாதே!"

அவன் சொன்ன காரணம், அவளுக்கு ஆத்திரமூட்ட "கேட்டிருக்க வேண்டியதுதானே?" என்றாள் சுள்ளென.

அவன் திகைக்கவும் "பாருங்கள் சார், அவரவர் பெற்றோர் எல்லா வலிமைகளும் உள்ளவர்களாகத்தான், பிள்ளைகளுக்குத் தோன்றும். ஆனால், ஒவ்வொருவருக்கும் ஒரு பலஹீனம் இருக்கத்தான் செய்யும்.

அதை யோசித்துக் கண்டுபிடித்து, அதற்கு ஏற்றபடி நடந்து கொள்ள வேண்டியது, நாம்தான்!" என்று, மனித இயல்பு பற்றிப் பாடம் நடத்தினாள் மதிவதனி.

எனக்கு, இவள் புத்தி சொல்கிறாளா என்று புகைந்தவனுக்குச் சட்டென நினைவு வர "இந்த 'சாரை' விட்டுவிடச் சொன்னதை, நீயும் மறந்தே போனாய் போல?" என்று தன் பங்குக்கு, எடுத்துச் சொல்லி ஒரு குட்டு வைத்தான்.

எவ்வளவு முக்கியமான விஷயத்தைச் சொன்னாள். அதுவும், அவனுடைய தாயாருக்காக! விஷயத்தைப் புரிந்துகொண்டு, வருத்தப்பட்டு, அவளிடம் சாரி கூடச் சொல்ல வேண்டாம். இனிமேல் கவனித்து நடப்பதாகச் சொன்னால் கூடப் போதுமே!

அதை விட்டு, உப்புப் பெறாத விஷயத்தைச் சொல்லி, அவனையே மட்டம்தட்ட முனைகிறான் என்று மதிவதனிக்கு, மறுபடியும் ஆத்திரம் வந்தது.

சூழல் மறந்து, அவனைக் கோபமாக முறைத்தாள்.

ஆனால், "உனக்கு மிகவும் அன்பான பார்வை என்றான் நீயானால்... ரொம்பச் சொல்லக் கூடாது, அடிக்க வருகிற மாதிரிப் பார்க்கிறாயே!" என்று மாதவனின் குரல் கேட்கவும், இருவருமே துள்ளிக் குதிக்காத குறைதான்.

அவ்வளவு அதிர்ச்சி!

இவர், எதெதைக் கேட்டிருப்பார்?

ஆனால், அவர் வந்துகொண்டுதான் இருந்தார். மதிவதனியின் கோபப் பார்வையைக் கண்டவருக்குச் சற்று முன் அவர்கள் பேசிய வார்த்தைகள் காதில் விழுந்திருக்க வாய்ப்பில்லை.

ஏற்கனவே பக்கம் பார்த்துப் பேசாததால் வந்த நிலைமைதான் இதுவே! இன்னமும் அது மனதில் உறைக்கவில்லையே!

அத்தோடு, இன்றையத் தப்பும் அவளதே. அவனை முறைத்திருக்கக் கூடாது, அதனால், இதைச் சமாளிப்பதும் அவளது பொறுப்பே!

மாதவனின் பேச்சில் ஒரு கணம் திகைத்தவள் வேகமாக யோசித்து "பின்னே என்ன சார்? இத்தனை காலமாக, நான் இவர் நினைவாகவே இருந்தேன். இன்று வரையும், யாரையும் நான் அது போல நினைத்தது கூடக் கிடையாது! உங்கள் பிள்ளையானால், என்னை அடியோடு



மறந்து, இன்னொரு பெண்ணை மணக்கவே துணிந்துவிட்டாரே! அவள் மட்டும் கொஞ்சம் நல்லவளாக இருந்திருந்தால், சந்தோஷமாகத் தாலி கூடக் கட்டியிருப்பார்தானே? நினைக்கும்போது, எனக்குக் கோபம் வராதா?" என்று கோபக் குரலிலேயே பேசி, நிலைமையை சமாளித்தாள்.

அவனும் அதே நூலைப் பிடித்து "அதுதானப்பா. அவ்வப்போது மதியைப் பற்றி, அவளது பொருளாதார நிலைமை பற்றி அம்மாவிடம் பேசியிருந்தால், இன்று அவளது சின்ன ஃப்ளாட்டைப் பார்த்து அம்மாவுக்கு அதிர்ச்சியாக இருந்திராது அல்லவா? அதைத்தான் கோபத்தோடு சொல்லிக் கொண்டிருந்தாள். அம்மா மயக்கம் போலச் சரியவும் ஒரு நிமிஷம் ரொம்பவும் பயந்து போனாளாம்... அ அந்த நிலைமை நேர்ந்ததுதான் இவளுக்குக் கோபம்" என்று விளக்கம் கொடுத்தான்.

"நியாயமான கோபம்தான். ஆனால், இனி அதைப் பொது இடத்தில் காட்டாமல் அடக்கிக் கொள்ளம்மா. அல்லது, குடும்ப விஷயங்கள் வெளியே நாறும்படி ஆகிவிடும்" என்று, தன் பங்குக்குப் புத்தி சொன்னார் மாதவன்.

வேறு வழியின்றி, ஒத்துக்கொண்டு, தலையாட்டி வைத்தாள் மதிவதனி.

ஈசிஜி எடுத்துப் பார்த்துவிட்டு, பவானியின் இதயத்தில் ஒரு பிரச்சினையும் இல்லை என்று மருத்துவர் கூறினார்.

மனதைச் சற்று அமைதியாக வைத்துக் கொள்ளும்படி அறிவுரை கூறியதோடு, இறுக்கம் குறைப்பதற்கான சில மருந்துகளும் கொடுத்து, பவானியை வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

ஈசிஜியில் ஒன்றுமில்லை என்றதுமே, பவானியும் தெம்பாகி விட்டாள்.

"ஐயோ, இரண்டு பேரும் எனக்காகவா வேலையைப் போட்டு விட்டு ஓடி வந்தீர்கள்? நீயா வரச்சொன்னாய்? நீயேதான் வைத்திய வசதிக்கு ஏற்பாடு பண்ணிவிட்டாயே. அப்புறம். இவர்களையும் போட்டு அலைப்பானேன்?" என்று மதிவதனியைத் தட்டிக் கொடுத்தாலும், லேசாகக் குறைப்படவும் செய்தாள்.

"உங்களுக்கு இதயத்தில் ஏதாவது பிரச்சினை ஏற்கனவே

இருக்கிறதோ என்று சந்தேகமாக இருந்தது, ஆன்ட்டி. அதனால்தான் உங்கள் மகனுக்கு ஃபோன் செய்தேன். அவருக்கும் அது பற்றி நிச்சயமாகத் தெரியாததால், சாரி... அங்கிளிடமும் தெரிவிக்கும்படிக் கூற நேர்ந்தது" என்று மதிவதனி விளக்கம் கூற, சுதாங்கனும் அதை ஆதரித்துப் பேசினான்.

"என்னம்மா நீங்கள்? சின்னதோ பெரிதோ. உங்களுக்கு உடம்புக்கு ஒன்று என்றால், நானும் அப்பாவும் பக்கத்தில் இருக்க வேண்டாமா? அதைவிட வேலையா முக்கியம்?

"பேசிக் கொண்டிருந்தவர்கள் திடீரென்று கண்கள் சொருகச் சாய்ந்தால், என்னவென்று எண்ணுவது? இதுவே பெரிதாக இருந்து, மதி எங்களைக் கூப்பிடாமல் விட்டிருந்தால்... என்ன கதி ஆகியிருக்கும்? மருத்துவ வசதிக்கு ஏற்பாடு செய்ததோடு அவள் எங்களுக்குத் தெரிவித்ததும் சரிதான், அம்மா!" என்றான் சுதாங்கன்.

மகன் தனக்காகத் துடித்தது மகிழ்ச்சியாகவே இருந்தபோதும், மதிவதனியை லேசாகக் குறை கூறுமுன் வரிந்து கட்டிக்கொண்டு வருகிறானோ என்றும் பவானிக்குத் தோன்றியது.

எனவே அந்தப் பேச்சை விடுத்து "என்னவோ, தொண்டை காய்ந்த மாதிரி இருக்கிறது, சுதா. உங்கள் இரு... வந்து, யாருக்கும் அவசரம் இல்லை என்றால், ஏதாவது நல்ல ஹோட்டலுக்குப் போய், காஃபி, டீ ஏதாவது குடிக்கலாமா?" என்று கேட்டாள். "இட்டிலி, தோசை போல எளிதாகச் செரிக்கக் கூடிய டிஃபனோடு? எனக்குக் கொஞ்சம் பசிக்கிற மாதிரியும் இருக்கிறது!"

யோசனையோடு சுதாங்கனைப் பார்த்தாள் மதிவதனி.

புன்னகை செய்து "அம்மா இப்போது செய்வது உல்டா, பக்கத்து இலைக்குப் பாயசம் போடு என்பார்களாமே! அதைத் திருப்பிப் போடுகிறார்களாம். எங்களுக்காக என்று சொன்னால், பரவாயில்லை. வீட்டுக்குப் போய்விடலாம் என்று அவர்களை வீட்டுக்குக் கூட்டிப் போவதில் முனைப்பாக இருப்போம் அல்லவா? அதுதான் தனக்குப் பசி என்கிறார்கள்!" என்று விளக்கினான்.

பவானியின் முகத்தில் அசடு கலந்த பெருமிதம் வழிய, மதிவதனி, சுதாங்கனோடு இணைந்து நகைத்தாள்.

பிறகு, அந்தப் பக்கத்தில் உள்ள ஒரு பெரிய ஹோட்டலின்



பெயரைச் சொன்னாள். "எங்கள் குடியிருப்பில் வருஷப் பிறப்பை மட்டும் பெரிதாகக் கொண்டாடுவோம். அப்போது அங்கிருந்துதான் உணவு வரும்" என்றாள்.

நாலு பேருமாக ஹோட்டலுக்குப் போனார்கள்.

விசாலமான ஏசி ஹால் இருந்தது.

ஆர்டர் பண்ணிவிட்டு, உணவுக்காகக் காத்திருந்தபோது, பவானியின் கண்கள் அங்கே பதித்திருந்த பெரிய பெரிய சலவைக்கல் சதுரங்களையும், ஏற்றவாறு அமைக்கப் பட்டிருந்த உணவு மேஜை நாற்காலிகளையும், விளக்கு மற்றும் ஜோடனைகளையும் ரசனையோடு ஆராய்ந்தன.

ஆனால், உடனேயே வேறு எதையோ எண்ணினாற்போல, அவளது புருவங்கள் நெறிவதையும் கண்டுவிட்டு, சுதாங்கன் பேசினான். "அம்மா, மதிவதனியின் வீடு சின்னதாக இருந்தது, உங்களை அதிகம் பாதித்ததாகச் சொன்னாள்..."

அதற்குள் வத்தி வைத்துவிட்டாளா என்று உள்ளூரப் பொருமினாள் பவானி.

தன்னை நியாயப்படுத்திவிடும் வேகத்தோடு, மகன் பேச்சில் குறுக்கிட்டு, "பின்னே என்னப்பா? இதுதான் பெண் வீடு என்று, நம் உறவினரில் யாரை அழைத்துப் போய், அந்த வீட்டைக் காட்ட முடியும். அத்தை? சித்திமார்? மாமாக்கள்? எங்கள் அண்ணி, உன் தாய்மாமா மனைவி எப்படிப் பார்ப்பார்கள்? அதை நினைத்தால், இப்போது கூட, வயிற்றில் என்னமோ பண்ணுகிறது" என்றாள் முகத்தில் வாட்டத்தோடு.

"அதற்கு அவசியமே இல்லையம்மா! அந்தக் குட்டியான வீட்டைப் பற்றி, இனி நீங்கள் கவலைப்படத் தேவையே இராது" என்றான் பிள்ளை பெருமையோடு.

ஒரே வினாடியில், இந்த உலக முழுமையும் சுற்றி வந்துவிடக் கூடிய வல்லமை உடையதாயிற்றே, மனித மனம்!

அம்மா உடம்பை இப்படிப் பாதிக்கிறதே! அதனால் அம்மாவின் மன நிம்மதிக்காக, இவளோடு திருமணம் வேண்டாம் என்று முடிவு செய்துவிட்டானா?

இப்படி நினைத்து "நீ என்னம்மா சொல்லுகிறாய்? எனக்குப்

புரியவில்லையே!" என்று பவானி மிகுந்த ஆவலோடு மகனைக் கேட்டாள்.

## சுந்தரி நீயும... 10

திகைப்புடன் எல்லோரும், சுதாங்கனைப் பார்த்தார்கள்.

மதிவதனியும் சேர்ந்துதான். அவளுக்கு உள்ளூரக் கோபம் கூட.

மூன்று ஆண்டுகளுக்குக் கொஞ்சம் முன்னே, வில்லன் மாமனுக்குப் பயந்து, கையில் இருந்ததை எடுத்துக்கொண்டு ஓடி வந்தபோது, தற்செயலாக இந்தக் குடியிருப்பின் செயலாளரைச் சந்திக்க நேர்ந்தது.

முன்பின் தெரியாத அவர்களை நம்பி, குறைந்த வாடகைக்கு அந்த ஃப்ளாட் கிடைக்க அவர் ஏற்பாடு செய்தார். "வயதுப் பெண், தலைக்கு மேல் கூரை வேண்டும், அம்மா. இல்லாவிட்டால் நல்லதில்லை!" என்று அப்போது அவர் சொன்னது. இப்போது போல அவளுக்கு நினைவு வந்தது.

தனித்தனி அறைகளில், வசதியோடு வாழ்ந்த அவர்கள் இருவருக்கும் முதலில் எவ்வளவோ கஷ்டமாக இருந்தபோதும், முகவரி என்று ஒன்று இருந்தது, மதிப்பாகத்தான் இருந்தது. கூடவே, அதை விடப் பெரியதாக வரவிருந்த துன்பத்தில் இருந்து தப்பிப் பிழைத்ததைக் குறித்து, பாலனும் அவளும் ஆறுதலும் அடைந்தார்கள்.

உடனேயே அவளுக்கு வேலை கிடைத்து, பாலன் நன்றாகப் படித்து, பாராட்டுகள் பெற்று... அவர்களது இன்ப துன்பங்களோடு பின்னிப் பிணைந்த வீடு அது.

அதைப் பற்றி, இவன் என்ன முடிவெடுத்துப் பேசுவது?

பரிசாரகன் உணவைக் கொண்டு வந்து, அவரவர் முன்னே வைத்துவிட்டுப் போகும் வரை பொறுத்திருந்த மதிவதனி விளக்கம் கேட்குமுன், சுதாங்கனின் தந்தையே முந்திக்கொண்டு மகனைக் கேட்டார் "எனக்கும்தான் புரியவில்லை. என்னடாப்பா மகனே, ஒரே நாளில், வீட்டை மாற்றி விட்டாயா? மாற்றி விடப் போகிறாயாம்மா?" என்று, மதிவதனியிடம் மாதவன் வினவினார்.

"இல்லையே..." என்று சுதாங்கனைப் பார்த்தாள் அவள்.

ஓரக் கண்ணில் சிரிப்புடன் அவன் உண்பதில் முனையவும்,



அவளுக்கு ஓரளவு விஷயம் புரிந்தது.

ஏற்றாற்போல, வாயில் இருந்ததை விழுங்கிவிட்டுத் தலை நிமிர்ந்து, சுதாங்கன் பேசினான், "என்ன இல்லையே? நான் சொல்லச் சொல்லக் கேளாமல், பங்களூருவில் வேலை மாற்றத்தை ஏற்றுக் கொண்டாய்தானே? அப்புறம்? இங்கேயும் வாடகை கொடுத்து, அங்கேயும் வீடெடுத்து, இரட்டைச் செலவு செய்வாயா? கௌரவம் பார்த்துக்கொண்டு, என்னிடமும் காசு வாங்க மாட்டேன் என்கிறாய்! இதற்கும் மேலாக, உன் தம்பியும் இங்கிருக்கப் போவதில்லை. வெளிநாடு போய்விடுவான்! அப்புறம் இந்த வீடு எதற்கு?" என்று ஒரு வார்த்தை கூட அவளால் மறுக்க முடியாதபடி, பெரியவர்களுக்குச் சொல்லித் தெரிய வைக்க வேண்டிய விஷயங்களை மட்டும், தெளிவாகப் புரியும்படிச் சொன்னான் அவன்.

அவளுக்காக முடிவெடுத்து சுதாங்கன் சொன்ன விதம் மதிவதனிக்குப் பிடிக்காதபோதும், அன்றிருந்த நிலைமை காரணமாக, அவள் பேசாமல் பொறுத்திருக்க வேண்டியதாயிற்று.

இப்போது, மதிவதனியும் பேசியாக வேண்டிய சமயம். தன் பங்களூரு பயணத்தைப் பெரியவர்களுக்கு விவரித்துக் கூறும் பொறுப்பு அவளது ஆயிற்று.

வேலையைச் சாக்கிட்டு அவள் ஊரைவிட்டுப் போவதை அவள் நியாயப்படுத்த வேண்டும்! ஒப்பந்தத்தில் அவளது பங்கும் இருக்கிறதே. அதனால் மறுக்கவும் முடியாது.

சுதாங்கன் செய்தது போல. உண்ணுவதில் கவனம் காட்டி, யோசிப்பதற்குச் சிறு அவகாசம் எடுத்துக் கொண்டாள். அதற்குள், "என்னம்மா, இவன் ஏதேதோ சொல்லுகிறானே?" என்று மாதவன் விளக்கம் கேட்டார்.

ஒருவாறு சமாளித்து. "ஆமாம். அங்கிள். இது எனக்குப் பதவி உயர்வு. அதை மறுக்க எனக்கு மனமில்லை...!" என்று. சஞ்சலம் போல இழுத்தாள்.

"ஆனால், உங்கள் திருமணம்? உங்கள் பல்லாண்டு காலக் காதலைக் காரணம் காட்டி, நிச்சயித்திருந்த திருமணத்தையே உடைத்துவிட்டு வந்திருக்கிறான். இப்போது போய்ப் பதவி உயர்வுக்காக, அவனைப் பிரிந்து, ஊரை விட்டே போகிறேன் என்கிறாயே! என்னம்மா காதல்,

இது? மெகா சீரியல் போல, ஆண்டுக் கணக்கில் ஓடும் போல? ஆழ அகலம், ரொம்ப அதிகமான காதலாகத் தெரிகிறதே!" என்று கிண்டலடிப்பது போலத் தன் எரிச்சலைக் காட்டினார் மாதவன்.

சுதாங்கனைப் பழி வாங்கக் கிடைத்த வாய்ப்பை விட மனமில்லாமல், "சாரி அங்கிள். என்னால், உங்கள் மகனை ஒரேயடியாக நம்ப முடியவில்லை. எப்படி முடியும்? நீங்களே எண்ணிப் பாருங்கள், முன்பும், நன்றாகப் பழகிக் கொண்டிருந்தபோது திடீரென்று அந்தர்த்தானம் ஆகிவிட்டார். ஒரு காரணம் சொல்லவில்லை. இப்போதும், ஒரு திருமணத்தை இந்த அளவுக்கு வந்த பிறகு நிறுத்துகிறவர், அடுத்து அப்படிச் செய்ய மாட்டார் என்று என்ன நிச்சயம்? அதனால்தான், இவரை நம்பிக் கையில் இருக்கும் வேலையை விட, நான் தயாரில்லை. எனவே. பங்களூருவுக்குச் செல்லத்தான் வேண்டும், அங்கிள்" என்று. சுதாங்கன் சொன்னது போலவே, தெளிவாக, அமைதியாகச் சொல்லி முடித்தாள் மதிவதனி.

மாதவனை விளித்துக் கூறியபோதும், சொன்ன விஷயம் எல்லாருக்கும்தான்.

மறுத்துப் பேச மாட்டாமல் ஆண்கள் இருவரும் உணவில் கவனம் செலுத்த, பவானியின் மனம் வேகமாக வேலை செய்து குழம்பியது.

என்ன இவள்? இவ்வளவு தூரம் வந்தாயிற்று.

கிடைத்தது வாய்ப்பு என்று எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக சுதா கையால் தாலியை வாங்கி உரிமையை நிலை நாட்டிக் கொள்ளாமல், வெளியூருக்குப் போவதாகச் சொல்லி, இவளே தள்ளிப் போடுகிறாளே!

இவள் செய்வதைப் பார்த்தால், மகனை வளைத்துப் போட முயற்சிப்பவளாகத் தெரியவில்லையே. ஆனால், ஏன் எப்படி... என்று யோசித்து, யோசித்து, விடை காணாமல் அவளது மூளை குழம்பியது.

ஆனாலும், அத்தனை சிறப்புகள் பொருந்திய தன் மகனை விட, ஏதோ சில ஆயிரங்கள் ஊதியமாகக் கிடைக்கும் வேலையைப் பெரிதாக எண்ணி ஒருத்தி ஊரை விட்டுப் போவதை அந்தத் தாயால் நம்பவும் முடியவில்லை.

ஒரு வேளை, கிடைக்காத அரும் பொருளாகத் தன்னைக் காட்டி, சுதாவைச் சீண்டிவிட்டுப் பிடிக்கும் தந்திரமாக இருக்கலாமோ என்று



யோசனை ஓட, அப்படித்தான் இருக்கும் என்று முடிவும் செய்தாள்.

ஆனால், கண்ணில் படாதது கருத்தை விட்டு மறைந்து போகும் என்றும் சொல்வார்கள். அப்படியே ஆகட்டும் கடவுளே என்று வேண்டிக்கொண்டு, இந்த மதிவதனியைத் தடுக்காமல் சும்மா இருப்பதுதான் சரியோ?

என்னதான் பார்க்க மோசமாக இல்லாமல், ஓரளவு நன்றாகவே இருந்தாலும், செல்வம், செல்வாக்கு, நல்ல பரம்பரை... இப்படிப்பட்ட சிறப்புகள் எதுவுமே இல்லாத ஒருத்தி மருமகளாக வருவது, அவளுக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவே இல்லை!

கணவரைப் போல, 'மகனுக்குப் பிடித்தால் சரி' என்றிருக்க அவளால் முடியாது! எவ்வளவு தேடி, ரேவதியைக் கண்டுபிடித்தாள்? அவளையே, பாரம்பரியம் இல்லையே, புதுப் பணக்காரர்கள்தானே என்று அவ்வப்போது நினைத்திருக்கிறாள். எதுவுமே இல்லாத இவளை... ஊகூம்!

அடுத்த சில வாரங்கள் இறக்கை கட்டிக்கொண்டு பறந்தன. ஜெட் வேகத்தில் என்றால் கூடப் பொருந்தும். அந்த மாதிரிக் கண் சிமிட்டும் நேரத்தில் ஓடிப் போயின.

பணப் பிரச்சினை இல்லாது போகவும், பாலகிருஷ்ணன் வெகு விரைவிலேயே வெளிநாட்டுக்குக் கிளம்பிப் போனான்.

நல்லபடியாகப் போய்ச் சேர்ந்ததாக, உடனே தெரிவித்தான்.

அதிகப்படியாக, இன்னொரு தகவலும் கிடைத்தது.

தமிழ்நாட்டுப் பையன் நன்றாகப் படித்து உபகாரச் சம்பளத்தில் மேல் படிப்புக்காக வந்திருப்பதை அறிந்து, ஏதாவது உதவி தேவையா என்று கேட்க ஒருவர் வந்தாராம். பிறகு பார்த்தால், அவர், பாலன், மதிவதனியின் சொந்த ஊர்க்காரராம். ரொம்ப முன்னாலேயே அங்கே போய் 'செட்டில்' ஆகிவிட்டாராம்.

"நம் அப்பா அம்மாவைத் தெரிகிறது, அக்கா. நம்மைப் பற்றிச் சொன்னதும், உங்களுக்கா இந்த நிலைமை என்று வருத்தப்பட்டார். என்னென்ன வழியில் முடியுமோ, அத்தனை வசதிகளையும் எனக்குச் செய்து தருவதாகச் சொல்லியிருக்கிறார். நீ அங்கே தனியாக இருக்கிறாயே என்பது தவிர, எல்லாம் நல்லதாகவே தெரிகிறது, அக்கா. நானும் கடுமையாக உழைத்துப் படிப்பதோடு, உன்னை

இங்கே அழைத்துக் கொள்வது பற்றி வழியையும் தேடிக் கொண்டிருக்கிறேன், அக்கா. அக்கா, கார்டில் பணம் தீரப் போகிறது, பைக்கா" என்று அவன் கூறியதோடு, தொலைத் தொடர்பு முடிந்து போயிற்று.

ஆனால், அந்த நாட்டில் தனித்து நிற்க நேராமல், ஊர்க்காரர் ஒருவரின் துணை தம்பிக்குக் கிடைத்தது, மதிவதனிக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. அதுவும், அவர்களுடைய பெற்றோரை அறிந்தவர்!

தம்பியைப் பற்றிய கவலை அகன்று, நிம்மதியோடு தன் வேலைகளை கவனித்தாள் அவள்.

மதிவதனிக்கும் பங்களூருவில் தங்குமிடம் ஏற்பாடு செய்து, இங்கே ஃப்ளாட்டைக் காலி செய்து, தேவையற்ற, கொண்டு செல்ல முடியாத பொருட்களைச் சிலதை விற்று, சிலதை ஏதாவது 'இல்ல'ங்களுக்குத் தானமாகக் கொடுத்து... இப்படி வேலை நிறைய இருந்தது.

எல்லாம் செய்து முடித்து, கூடவே இருந்து உதவி செய்த செகரட்டரி சாருக்கு நன்றி சொல்லி, சென்னையை விட்டுக் கிளம்பிய ரயிலில் ஏறி அமர்ந்தது வரை, ஏதோ ஃபாஸ்ட் ட்ராக்கில் ஓடிய திரைப்படம் போலவே அவளுக்குத் தோன்றியது.

இன்னும் ஓர் ஆண்டும் இதே போல ஓடி, தம்பிக்கு வேலையும் கிடைத்துவிட்டால், அப்பாடா என்று நிம்மதியாக மூச்சு விடலாம் என்று மதிவதனி எண்ணினாள்.

அதை விடவும், பாலனை நேரில் பார்க்கலாம். அவன் கிளம்பி ஒரு வாரமே கடந்திருந்தது என்றாலும், ஒரே உறவு என்றிருந்த தம்பியைப் பாராமல், அவளுக்குக் கஷ்டமாகவே இருந்தது. தம்பி முன்னேற்றத்துக்காகப் போயிருக்கிறான் என்ற ஒரே காரணம்தான், அவளைத் தாக்குப் பிடிக்க வைத்தது எனலாம்.

சுதாங்கன், செய்வன திருந்தச் செய்கிறவனாக இருந்தான்.

மதிவதனி பெங்களூருவை அடைந்தால், அவளை அழைத்துச் செல்ல, அலுவலகத்திலிருந்து ஆள், ஒரு பெண் வந்திருந்தாள்.

வேலை பார்க்கும் பெண்கள் தங்கும் விடுதி ஒன்றில் கூட்டிப்போய் விட்டாள். அவளது அறைச் சாவியைக் கொடுத்து, ஒன்பது மணிக்கு அலுவலகம் செல்லக் கூட்டிப் போவதாகக் கூறிச் சென்றாள்.

அவள் கூறிய நேரத்துக்கு முன்னதாகவே தயாராகிவிட்ட மதிவதனி,



நடந்து போய்ச் சுற்றுப் புறங்களைச் சற்று தூரம் ஆராய்ந்து விட்டு வந்தாள்.

அலுவலகத்திலும், சென்னையில் அவள் செய்த வேலை மாதிரியே இருக்கவும், மிகவும் இயல்பாகப் பொருந்திக் கொள்ள முடிந்தது. முனைந்து செய்ததால், பாராட்டுகளும் கிடைத்தன.

வேலையில் சேர்ந்த வார ஞாயிறன்று எல்லாம் எப்படிப் போகிறது என்று நேரில் பார்த்து விசாரிப்பதற்காக, சுதாங்கன் பெங்களூருக்கு வருகை தந்தான்.

எதிர்பாராமல் தெரிந்த முகத்தைப் பார்த்ததில், மதிவதனிக்கும் சந்தோஷமாக இருந்தது.

"இந்த ஊரில் என்னென்னவோ நடந்ததாகப் பத்திரிகைகள் சொல்கின்றன. எதற்கும், ஊர் பழகும்வரை, தனியாக ஷாப்பிங் பண்ணப் போக வேண்டாம். ஏதேனும் தேவை என்றால் சொல்லு, இருவருமாகப் போய் வாங்கி வருவோம்" என்று அழைத்தான்.

ஆனால், புன்னகையோடு மறுத்தாள் மதிவதனி "ஆபத்து எல்லா ஊர்களிலும் இருக்கின்றன. சுதாங்கன். எப்போதுமே, நாம் எச்சரிக்கையோடு இருப்பதுதான் முக்கியம். கவலைப்படாதீர்கள். எனக்கு வேண்டியதைத் தேவையான சமயத்தில் நானே வாங்கிக் கொள்வேன்" என்றாள் மதிவதனி.

சிறு தயக்கத்தின் பின் "அதில்லை... ஒரு கெட்ட தலையில், ஒரு மோசமான எதிர்காலத்தில் இருந்து மீள, எனக்குப் பேருதவி செய்தாய். என் அம்மாவுக்கும் உதவினாய். என் நன்றியைக் காட்ட, உனக்கு ஒரு சிறு பரிசு வாங்கித் தரலாம் என்று விரும்பினேன்... முக்கியமாக அதற்காகத்தான் கூப்பிட்டேன், வருகிறாயா?" என்று மீண்டும் அழைத்தான் அவன்.

"அதற்கு ஈடாகத்தான் என் தம்பியை வெளிநாட்டுக்கு அனுப்பி இருக்கிறீர்களே, சுதாங்கன் சார்? அதிலேயே, நாம் ஒருவருக்கொருவர் செய்தது சமமாகிப் போய்விட்டது.

இதற்கு மேல், உங்களிடம் பரிசு எதையும் வாங்கினேன் என்றால், பிறது அதற்கு ஈடாக நான் எதையேனும் தர... எதையேனும் வாங்கித் தர வேண்டும். திருமண மொய் போலக் கௌரவக் கடனாக, இப்படியே, இது நீண்டுகொண்டே போகும். தேவையற்று ஏன் இந்தக்

கடன்பட வேண்டும்? அதனால், ப்ளீஸ். வேண்டாம் சார்!" என்றாள் அவள் கெஞ்சலாக,

"ஓ, அதற்குப் பயப்படுகிறாயா? தேவையே இல்லை, நான் எதையும் எதிர்பார்த்து, உனக்குப் பரிசளிக்க எண்ணவில்லை. என் மகிழ்ச்சியை வெளிக்காட்டத்தான், இந்தப் பரிசு கொடுக்கும் ஐடியாவே. போகலாமா?" என்று மறுபடியும் கூப்பிட்டான் சுதாங்கன்,

உறுதியோடு, மறுப்பாகத் தலையசைத்தாள் மதிவதனி.

"வேண்டாம், சார். உங்கள் திருமணம் நின்று, என் தம்பி வெளிநாடு சென்றதோடு, நம் ஒப்பந்த விதிகள் முடிந்து போயின. இன்னும், நானும், பாலா இருக்குமிடம் போய்ச் சேர்வதுதான் பாக்கி. அதற்குள், வேறு சிக்கல்கள் இல்லாமல் அமைதியாக, சுமுகமாக நாட்கள் போகட்டும் என்று காத்திருப்போம்." என்று முடித்தாள் மதிவதனி.

கஷ்டப்பட்டு முகம் மாறாமல் காத்து, "உன்னிஷ்டம்" என்று முணுமுணுத்தான் சுதாங்கன்.

தன் பிரச்சினை எளிதாகத் தீர்ந்தது. அதற்கு முழு உதவி செய்தாள் என்பது ஒன்று. அத்தோடு, தாயார் மோசமாகப் பேசியபோதும், ஓர் இக்கட்டில் அவளைக் கைவிட்டுவிடாமல், வேண்டியது செய்து துணை நின்றாள்! அன்னையின் கையைப் பிடித்துக்கொண்டு, சற்று அசௌகரியமான நிலையில் அவள் உடல் சரித்து நின்ற காட்சி, இன்னமும் அவன் மனதில் அப்படியே நின்றது.

தன்னைக் கஷ்டப்படுத்திக் கொண்டாவது, அவன் தாய்க்கு உதவ வேண்டும் என்பது ஒப்பந்தத்தில் இல்லையே.

அதற்குப் பரிசாக... பரிசு என்பது கூடச் சரியில்லை, கைமாறாக ஏதாவது செய்யலாம் என்றால் விட மாட்டேன் என்கிறாளே என்று எரிச்சலபட்டான் அவன்.

சரியாகச் சொல்வதானால், அவனது பணம் கூட, டெப்பாசிட்டாக அவனிடமேதானே இருக்கிறது? பாலாவுக்குக் கல்விக் கட்டணமாக, அவன் கையிலேயே அள்ளிக் கொடுத்து விடவில்லையே! அப்படிப் பார்த்தால், இப்போது, அவன்தானே கடன் பட்டவன் ஆகிப்போனான்?

இதையெல்லாம் எடுத்துச் சொன்னாலும், சரிதான் என்று கேட்டுக் கொள்கிற ரகம், இவள் இல்லை! நீங்கள் அந்த டெப்பாசிட்டைக்



காட்டாவிட்டால், பாலன் வெளிநாட்டுக்குச் சென்றிருக்கவே முடியாதே என்பாள். அம்மாவுக்குச் செய்ததைச் சொன்னால், நாய் வேஷம் போட்டால் குரைக்காமல் முடியுமா? காதலி என்றதால் செய்ததாகக் கூடக் கூறலாம்....

அவனது முகத்தைப் பார்த்தவளுக்கு, மனதில் ஒரு சிறு வலி ஏற்பட்டது. பாலனின் வெளிநாட்டுப் பயணம், கிட்டத்தட்டப் பகல் கனவு என்கிற நிலைக்குப் போயிருந்தது. அதை நனவாக்கித் தந்தவனை வருத்திவிட்டாளே! ஆனால் அதற்காக, ஒருவழிப் பாதையாக அவனிடம் வாங்கிக்கொண்டே இருப்பதும், அவளால் ஒப்ப முடியாதது.

ஒரு வினாடி யோசித்துவிட்டு, மதிவதனி, சுதாங்கன் வாங்கித் தந்திருக்கும் வேலை பற்றிப் புகழ்ந்து பேசினாள்.

"சென்னையில் என் வேலை பற்றி நீங்கள் விசாரித்தபோது, அதை நான் பெரிதாக நினைக்கவில்லை சுதாங்கன் சார். ஆனால், இங்கே அலுவலகத்துக்குப் போய்ப் பார்த்தால், வேறு வேலையில் சேர்ந்திருக்கிறோம் என்பதே இல்லாமல், பழைய வேலையையே தொடர்வது போல இருந்தது. அதுவும், இன்னும் கொஞ்சம் சுயமாகச் செயல்படும் சுதந்திரத்தோடு. மெய்யாகச் சொல்வதானால், இதற்காக நான்தான் உங்களுக்கு 'ட்ரீட்' கொடுக்க வேண்டும்!" என்று புன்னகையோடு மனதாரச் சொன்னாள்.

அவளது மலர்ந்த முகத்தைப் பார்த்தபடி "செய்யேன், நான் ஒன்றும் உன்னைப் போல. 'ட்ரீட்' வாங்கிக்கொள்ள மாட்டேன், அப்புறம் அந்தக் கடன் சுமை தாங்காமல் தள்ளாடித் தவித்துப் போவேன் என்று கண்ட காரணம் கூறி மறுக்க மாட்டேன். எங்கே கூட்டிப் போகப் போகிறாய்? சொல்லு" என்று, சுமை தாங்காமல் தள்ளாடுவது போன்ற பாவனையோடு சுதாங்கன் இலகுவாகப் பேசியே அவளுக்கு மெல்லிசாக ஒரு குட்டு வைத்தபோதும், மதிவதனிக்குச் சிரிப்புதான் வந்தது.

சிரிக்கும்போதே, மனதில் இருந்த வலி மறைந்து மனம் லேசாவதை உணர்ந்தவளுக்கு, உள்ளூர ஆச்சரியமாக இருந்தது.

இவனது வருத்தம், அவளை இவ்வளவு பாதித்திருக்கிறதே! ஆனால், இவ்வளவு பெரிய உதவி செய்தவனின் வருத்தம் அவளைப்

பாதிக்காமல் இருந்தால், அதுதான் அதிசயம்! அதிசயமென்ன? அப்பட்டமான சுயநலம்! அவள் சுயநலக்காரி அல்ல!

கிடைத்த நேரங்களில் சுற்றுப்புறத்தை ஆராய்ந்தபோது, அடுத்த தெருவில் ஓர் ஐஸ்கிரீம் பார்லர் இருப்பதை, மதிவதனி கண்டிருந்தாள். அருகிலேயே பீட்சா ஹட் மாதிரி ஓர் இடமும்.

தன்னந் தனியாக அங்கெல்லாம் போக இப்போதைக்குத் தைரியம் வந்திருக்குமோ, என்னவோ? இன்னோர் இளைஞனோடு என்பதும் சந்தேகம்தான்.

வீட்டை விட்டு வந்ததில் இருந்து, தனக்குத்தானே பல வேலிகள் இட்டு வாழ்ந்தவள் அவள்! ஆனால், அப்போதைய மனநிலை, அந்த வேலிகளை நினைப்பதாகக் கூட இல்லை.

அத்தோடு. சுதாங்கனும் அவளுக்கு அன்னியன் அல்லவே!

அவனுடைய பெற்றோரின் கருத்தில், அவனுடைய காதலி! எண்ணிப் பார்க்கவே வேடிக்கையாக இருந்தது, அவளுக்கு!

என்னவென்று கேட்டவனிடம் விவரம் சொல்ல, அவனும் முறுவலித்தான்.

இருவருமாகப் போய், ரோல் மாதிரி ஒன்றைத் தின்றுவிட்டு, ஐஸ்கிரீம் சாப்பிடப் போனார்கள்.

இது போன்ற இடங்களுக்குப் போய் ரொம்பப் பழக்கம் இல்லாததால், ஆர்டர் பண்ணும் பொறுப்பை, சுதாங்கனிடமே மதிவதனி விட்டுவிட்டாள்.

ஐஸ்கிரீம் முடிந்தும் இருவருமாகப் பேசிக் கொண்டே சற்று நேரம் நடந்துவிட்டு, அவளது விடுதிக்குத் திரும்பிப் போனார்கள்.

வழியில் ஒரு கடையில் பூக்களால் அழகழகாக பொக்கே செய்து வைத்திருந்தார்கள்.

அவள் ரசனையோடு பார்க்கவும், சுதாங்கன் அந்தக் கடைப் பக்கம் செல்லலானான்.

"வேண்டாம், சுதாங்கன்! அறையில் மூன்று பேர் இருக்கிறோம். எங்கேயும், இதற்கொரு பூஜாடி பார்த்து வைப்பது கடினம்" என்று தடுத்தாள் மதிவதனி. அவளைக் குறும்பாகப் பார்த்துச் சிரித்து, அவளை வாயடைக்க வைத்துவிட்டு, கடைக்குப் போய் எதையோ வாங்கி வந்தான் அவன்.

கை நீட்டி, சுதாங்கன் அதைக் காட்டவும், மதிவதனி மீண்டும் திகைத்தாள்.

பளீரென்ற நிறங்களில். இரண்டே இரண்டு ஆர்க்கிட் பூக்கள்! பொருத்தமான லேடீஸ் லேஸ் பின்னணியில், இரு மலர்களையும் எழிலுறக் கட்டியிருந்தார்கள். கைக்கு அடக்கமாகச் சின்னதாக, ஆனால் மிகவும் அழகாக இருந்தது.

அவள் வாயடைத்து நிற்கவும், ஆங்கிலேயர் பாணியில் குனிந்து, அவளிடம் அந்தப் பூச்செண்டை சுதாங்கன் நீட்டவும், மதிவதனிக்குச் சிரிப்பு வந்தது.

நிமிர்ந்து, "என்ன பரிசு, பளு தாங்க முடிகிறதா?" என்று அவன் குறு நகையோடு கேட்கவும், சிரித்துக்கொண்டே பூச்செண்டை வாங்கி, அவளும் இடை வரை குனிந்து நன்றி கூற, இருவரும் பொங்கிப் பொங்கி நகைக்கலாயினர்.

தினமும் இரவில் படுத்து உறங்குமுன். மதிவதனிக்குத் தம்பி பாலனின் முகத்தைப் பார்த்துவிட்டு, அவன் நினைவுடனேயே தூங்குவது. மதிவதனியின் பழக்கமாகி இருந்தது.

மூடிய இமைகளுக்குப் பின்னே முதல் முறையாகத் தம்பியின் தோற்றம் மறைந்து, அங்கே, சுதாங்கன் சிரித்துகொண்டு நின்றான்,

அடுத்த வார இறுதியில் சுதாங்கன் வருவானோ என்று ஆவலும் கவலையுமாக, மதிவதனி எதிர்பார்த்தாள்.

அவனுடன் பழகுவது, கண்ணுக்கும் காதுக்கும் இனிமையாக இருந்தது.

பார்வைக்கு அழகன்! அதே சமயம் பேச்சிலும் வல்லவனாக இருந்தான்.

எப்படியோ, அவனது பரிசை அவள் ஏற்கும்படிச் செய்து விட்டானே! மேலும். கையடக்கமான பரிசு போலத் தோன்றினாலும், அந்த வகை ஆர்க்கிட் பூக்களின் விலை அதிகமே.

ஆனாலும், அவன் அதைக் கொடுத்த முறையும், அவள் வாங்கிக்கொண்ட தினுசும் நினைக்க நினைக்க, அவளுக்குக் கிளுகிளுவென்று சிரிப்புதான் வந்தது.

ஒரு தரம் சற்று உரக்கவே கிளுக்கியிருப்பாள் போலும், அடுத்து இருந்து வேலை பார்த்தவள் விசித்திரமாக நோக்கவும் அவசரமாக

யோசித்து, தொண்டையில் ஏதோ கமற, அதைச் செருமி சமாளித்தது போல நடிக்கும்படி ஆயிற்று.

அதிலிருந்து சற்று அதிகக் கவனத்துடன் இருந்தாலும், அந்த நிகழ்ச்சியுமே அவள் கிளுக்கிப்பின் சமாளித்ததுமே ரசனைக்குரியதாகவே அவளுக்குத் தோன்றியது.

ஆனால், அவள் ஆழ யோசிப்பவளும் கூட. தன்னைப் பற்றியும் கூட, விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்து முடிவெடுக்கிறவள்.

அப்படி முடிவெடுத்துச் செயல்பட்டதாலேயே, எந்த விதமான அறிமுகமும் இல்லாமல் வந்து சேர்ந்தபோதும், சூழ இருந்த அத்தனை பேரும் பாராட்டும் விதமாகவே, மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகச் சென்னையில் நல்லபடியாக, அவளால் கழிக்க முடிந்தது.

கண் குத்திப் பாம்பாகக் கவனிக்கிறவர்கள் கூட, பெரியவர்கள் இல்லாமல் தம்பியும் தானுமாக வாழ்ந்த அந்தச் சின்னப் பெண்ணிடம் ஒரு சிறு குறை கூடக் காண முடிந்ததில்லை.

அதன் முக்கியமான காரணம், அந்த வாழ்வில் சுதாங்கனை ஒத்த வயதினன் யாருக்குமே இடம் இருந்ததே கிடையாது! அலுவல், மற்றும் பொதுப் பேச்சுக்கு மேல், அவள் இடம் கொடுத்ததும் கிடையாது.

ஆனால் இப்போது?

சிந்தனையோட்டம் தடைப்பட, மதிவதனி திகைத்தாள்!



## சுந்தரி நீயும... 11

எண்ணிப் பார்க்கும்போது கூட என்னதான் சுகமாக இருந்தாலும், இந்த சுதாங்கனோடு பழகுவது பற்றி யோசிக்க வேண்டும் என்று மதிவதனிக்குத் தோன்றியது.

யோசித்து, இந்த மகிழ்ச்சியைக் கெடுத்துக் கொள்ள வேண்டாமே என்று மனம் விரும்பியபோதும். அதை அடக்கி. மூளை தன் வேலையைச் செய்யலாயிற்று,

முதலில். இந்த சுதாங்கன் யார்? அவன் எப்படிப்பட்டவன்?

அதே அறையில் தங்கிய மற்ற இரண்டு பேரும் உறங்கிக் கொண்டிருக்க, தன் படுக்கையில் எழுந்து அமர்ந்து, மதிவதனி



தீவிரமாக யோசிக்கலானாள்.

பொதுவாக, அவள் எதையும் மறக்கிறவள் அல்ல. சுதாங்கன் பற்றியோ, அத்தனையும் மிகத் தெளிவாக நினைவிருந்தன.

சுதாங்கனைச் சந்தித்ததில் இருந்து, அன்றுவரை நடந்த அனைத்துமே!

அவைகளை வைத்து யோசிக்கும்போது, சுதாங்கன் திட்டம் போடுவதில் வல்லவன் என்று தெளிவாகத் தெரிந்தது.

ரேவதியுடைய தந்தையிடம், மகளைப் பற்றிக் குற்றம் சொன்னால் நம்ப மாட்டார் என்பதால், வேறு ஒருத்தியிடம் காதல் என்று காரணம் காட்டித் திருமணத்தை நிறுத்தினானே!

பெற்றோரும் அதை நம்பினால் ஒழிய வேலை நடக்காது என்று புரிந்து, உயிருள்ள ஒரு காதலியையே கண்ணில் காட்டிவிட்டான்.

கிடைத்த வாய்ப்பைச் சட்டெனப் பற்றித் தனக்கு சாதகமாகப் பயன் படுத்திக் கொள்கிறவனும் கூட. தற்செயலாகக் காதில் விழுந்த பேச்சைப் பயன்படுத்தித்தானே, இந்தத் திட்டத்தையே அவன் உருவாக்கியது?

அதில் மதிவதனியின் முழு ஒத்துழைப்புக்காக, அக்கா, தம்பி இருவரின் கனவை நிறைவேற்றியும் இருக்கிறான்,

அந்த வகையில், ஏமாற்றிக் காரியம் சாதித்தான் என்று சொல்லவே முடியாது!

அதே சமயம், தான் ஏமாந்து மாட்டிக் கொண்டு விடக் கூடாது என்று, தம்பியின் படிப்பு முடியும் அந்த ஓர் ஆண்டில் விலகிப் போய்விட வேண்டும் என்று, முத்திரைத்தாளில் எழுதிக் கையெழுத்து வாங்கியும் வைத்திருக்கிறான்!

முன்பின் அறியாதவர்களிடம் எச்சரிக்கை உணர்வு, 'கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய' கதை மாதிரி ஆகி விடக் கூடாதில்லையா? அதைப் பாராட்ட வேண்டுமே தவிர, குறைப்படக் கூடாது.

எங்கேயும் ஓட்டை விழாத திட்டம்.

தாயின் மனம், இன்னமும் கொஞ்சம் அந்தப் பெண் மீது இருப்பதாலேயே, நாடகத்தைத் தொடர்ந்து நடத்துகிறானோ என்னவோ?

அப்படித்தான் இருக்க வேண்டும் என்று, மதிவதனிக்கு இப்போது தோன்றியது. பெங்களூருவுக்கு 'ஞாயிறன்று ஓடி வந்ததே. காதல் கதையைத் தாய் மனதில் உறுதி செய்வதற்காகவே இருக்கலாம்!

எதற்காக என்றாலும், தம்பியைப் பிரிந்தபின், தனக்கு யாருமே இல்லை என்ற மதிவதனியின் தனிமைத் துன்பத்தை, சுதாங்கனின் வருகை பெருமளவு நீக்கியதும் உண்மையே.

ஆனால், இதை, இந்த அளவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

ஒத்துக்கொண்ட நாடகத்தை அவளும் ஒழுங்காக நடத்துவது கடமையே என்றாலும், நடிக்கிற அளவிலேயே அதை நிறுத்திக் கொள்ள வேண்டும். அதாவது, நெருப்பில் குளிர் காய்கிற மாதிரி, சற்றுத் தூரவே நின்றுகொள்ள வேண்டும். சூடு படுகிற அளவு நெருங்கி விடக் கூடாது!

ரொம்பவும் மனதை விட்டு விடலாகாது!

தெளிவாக யோசித்து, ஒரு முடிவுக்கும் வந்துவிட்டதால், ஒருவாறு மதிவதனியால் நன்கு தூங்க முடிந்தது.

அடுத்த ஞாயிறன்று சுதாங்கன் வந்தபோது. இயல்பாக நடந்து கொள்ளவும் முடிந்தது.

மரியாதை நிமித்தம், பாலன் அவனுக்கும் மெஸேஜ் அனுப்பியிருந்தான். அதில் சொந்த ஊர்க்காரரைச் சந்தித்ததையும் கூறியிருந்தான்.

இதை மதிவதனியிடம் அவன் தெரிவித்தபோது, அவர்களது சொந்த ஊர் பற்றிய பேச்சும் வந்தது. அந்தப் பொல்லாத மாமா பற்றியும், வெறுப்புடன் அவள் தெரிவித்தாள்.

"ஆனால், சென்னைக்கு வந்த பிறகு, அவர்களைப் பற்றி நாங்கள் பேசுவதே இல்லை, சுதாங்கன் சார். பேசினால், பண்ணை வீட்டில் நாங்கள் அம்மா, அப்பாவோடு வாழ்ந்தது, விளையாடினது எல்லாம் நினைவு வரும். நினைத்து நினைத்து வேதனையாகவும் இருக்கும். எனவே, காந்திஜீயின் மூன்று குரங்குகளில் இரண்டைப் பின்பற்றி விடுவோம்"

"ஒன்று புரிகிறது. கண்ணை மூடிக் கொள்வது. அப்புறம், அப்படி ஒன்று இல்லாத மாதிரியே தோன்றிவிடும். இப்போது நீ 'சார்' போட்டுப் பேசுவதாலேயே, நம்மைப் பற்றிய எல்லாம் மறைந்து, நாம் இருவரும் யார் யாரோ என்று ஆகி விடவில்லையா? அடுத்தது என்ன?" என்று, புரியாத பாவனையில் கேட்டான் சுதாங்கன்,

எதிர்பாராத சமயம் பார்த்து, இப்படி மண்டையில் குட்ட, இவனால்தான் முடியும். ஏதேனும் சொல்லி சமாளிக்க முயற்சிக்காமல்,



இவனிடம் மன்னிப்புக் கேட்டு விடுவது மேல்!

ஆனால், அதையும் அவன் ஏற்க மறுத்தான்.

"மன்னிப்புக் கேட்பதற்கு இதில் என்ன இருக்கிறது? மனதில் இருப்பது வாயில் வருகிறது. அவ்வளவுதானே? அதற்கு மேல் எதிர்பார்ப்பதுதான் தப்பு" என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

இதை எப்படி எடுத்துக் கொள்வது?

அவனுக்கு சந்தோஷம் இல்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. ஆனால், அவள் மேல் குற்றம் இல்லை என்றும் சொல்கிறானே?

மேற்கொண்டு ஆராயவும் பிடிக்காமல், மற்ற இரண்டு குரங்குகளைப் பின்பற்றுவது பற்றிச் சொல்லலானாள். "ஊர் பற்றி முடிந்தவரை பேச்செடுப்பது இல்லை அது, வாயைப் பொத்தியிருக்கும் குரங்கு போல. அடுத்து தன்னையறியாமல் யார் வாயிலாவது ஊர்ப் பேச்சு வந்துவிட்டால், குரங்கு மாதிரி வாயை 'உப்'பென்று வைத்தபடி. கைகளால் காதைப் பொத்திக்கொண்டு தள்ளிப் போய்விடுவோம்" என்றாள் அவள், முயன்று வரவழைத்த முறுவலோடு.

சட்டென அவன் முகம் இளகியது, "பரவாயில்லை, துன்பங்களை மறப்பதற்கு, ரொம்பவுமே முயன்றிருக்கிறீர்கள். போச்சே போச்சே என்று வருந்தி உள்ளதையும் கெடுக்காமல் உற்சாகமாக இருப்பதற்கு, இது நல்ல உத்தி!" என்று அவன் புன்னகையோடு பாராட்டவும், அவள் முகம் பளிச்சென மலர்ந்தது.

"நாங்கள் இரண்டு பேருமே யோசித்து, இது போல ஏதாவது கண்டுபிடித்துச் செய்வோம். பாலன் கடுமையாக உழைத்துப் படிப்பான். இங்கேயுமே, எல்லாம் உபகாரச் சம்பளம்தான். படிப்புச் செலவை மிச்சம் பிடிப்பதாகச் சொல்லுவான். ஆனால், உபகாரச் சம்பளம் என்று வாங்கும்போது, ஒரு மாதிரியாகிவிடும். நம் அப்பா எத்தனை பேருக்குப் பணம் கட்டி உதவினார்? இப்போது நான் அப்படி வாங்கும்போது, "என்னவோ பிச்சை வாங்குகிற மாதிரி வேதனையாக இருக்கிறதுக்கா' என்பான். இது பிச்சையில்லை, உன் கெட்டிக்காரத்தனத்துக்குக் கிடைத்த பரிசு என்று தேற்றுவேன். ஆனால் கடைசியில்...." என்று சொல்லிக்கொண்டே வந்தவள். சட்டென சுதாங்கனை நேராகப் பார்த்து. "உங்கள் உதவிக்கு நன்றி சொல்வதானால், அதற்கு உரிய வார்த்தைகள் எந்த மொழியிலுமே

கிடையாது, தெரியுமா? அவ்வளவு பெரிய உதவி அது!" என்றாள் உணர்ச்சி மிகுந்த குரலில்.

அவளது விழிகளில் நீர் திரையிடுவதைக் கண்ட சுதாங்கனின் கை, லேசாக உயர்ந்து, உடனேயே கீழிறங்கியது.

அவனது பாக்கெட்டினுள் கையை விட்டு, ஒரு கைக்குட்டையை எடுத்து அவளிடம் கொடுத்துக் கண்களைத் துடைக்கும்படி சைகை செய்தான்.

துடைத்துவிட்டு, ஒரு வெட்கச் சிரிப்புடன் கைக்குட்டையைத் திருப்பிக் கொடுத்தாள் மதிவதனி. "சா...ரிப்பா"

"என்னமோ, நீளமாகப் பேசினாய்? ஒப்பந்தப்படி இந்த உதவிக்கு அந்த உதவி சரியாகிப் போய் விட்டதாக அன்றைக்குக் கறாராகச் சொன்னது, நீதானா ... அல்லது வேறே யாருமா...." என்று அவன் சந்தேகமாக இழுக்க, அவள் சிரித்தாள்.

"போங்கள் சா... இல்லை... வந்து, சுதாங்கன், அது அப்படியில்லை. ஓர் உதவியின் பரிமாணம், வாங்குகிறவரின் தேவையைப் பொறுத்தது. தாகத்தால் தவிப்பவருக்குக் கொடுக்கும் ஒரு தம்ளர் தண்ணீருக்கும், சும்மா வீட்டுக்கு வந்தவருக்கு ஒரு தண்ணீர் பாட்டிலையே கொடுப்பதற்கும் வேறுபாடு இல்லையா?" என்றவளைக் குறுக்கிட்டு "அதே போலத்தான், என் வாழ்க்கை முழுவதும் நாசமாவதைத் தடுக்க நீ உதவியது, எனக்கும் ரொம்பப் பெரிதாகத் தோன்றியது" என்று முடித்தான் சுதாங்கன்,

"ஓஹோ...!" என்றாள் விழிகள் விரிய அவள்.

புன்சிரிப்புடன் "ஒரு வழியாய் மண்டை ஓட்டைத் தாண்டி, உள்ளே விஷயம் எட்டி விட்டது போல!" என்று அவன் கேலி போலக் கூற, அவளுக்கு இன்னமும் சிரிப்பு வந்தது.

சும்மா என்றால், ஒரு சாதாரண விஷயம் புரிய இவ்வளவு நேரமா என்று மட்டம் தட்டுவதாக ஆத்திரப்பட்டிருப்பாள்.

ஆனால், இப்போது நண்பர்களிடையே ஆன சாதாரணக் கேலி, கிண்டலாகத் தோன்றிச் சிரிப்புதான் வந்தது.

இரவின் தனிமையில் இதையெல்லாம் மீண்டும் மீண்டும் அசை போட்டு ரசிக்கையில், அந்த 'நண்பர்கள்' என்ற வார்த்தை மாறி, அன்பர்களுக்கிடையே ஆன கேலியோ என்று ஆகி அவளைச் சிலிர்க்க வைத்தது.



ஆனால் உடனேயே, இதுபோலக் கிறுக்கு எண்ணங்களுக்கு இடம் கொடுக்காதே மூளையே என்று தன் தலையில் ஒரு குட்டும் வைத்துக் கொண்டாள்.

பெங்களூருக்குச் சென்றபின், தனக்குத்தானே மதிவதனி எத்தனையோ அறிவுரைகள் சொல்லிக் கொண்ட போதும், சுதாங்கனின் வரவை மேலும் மேலும் அதிக ஆவலோடுதான் எதிர்பார்த்தாள் எனலாம்.

அந்த ஆவலும், கேலியும் சிரிப்புமாக அவனது பேச்சுமாக, அவளது தோற்றமே பொலிவு பெற்றது உண்மை!

ஆனால், சுயபுத்தி அவளுக்கு அடியோடு அற்றுப் போகவும் இல்லை. அவ்வப்போது கஷ்டப்பட்டேனும் பிடிவாதமாக, அவளும் தம்பியும் சேர்ந்து கையெழுத்திட்டுக் கொடுத்திருக்கும் பத்திரத்தின் வாசகங்களை நினைவுபடுத்திக் கொள்ளுவாள்.

இப்படி ஒரு நிலைமை உருவாகக் கூடும் என்றுதானே, சுதாங்கன் அன்றே இப்படி ஒரு பத்திரம் எழுதி வாங்கினான்! எவ்வளவு கெட்டிக்காரன் என்று கண்ணீருடன் நினைத்தாள்.

சூடும் குளிரும் மாறி மாறித் தாக்கியதால்தான் பாறைகள் பொடிப் பொடியாக உடைந்து மணல் தோன்றியதாக அறிவியலில், மதிவதனி படித்திருக்கிறாள்.

அது போலவே, சுதாங்கன் வரும்போது மகிழ்ச்சியாகவும், அவன் சென்னைக்குச் சென்றபின் எதிர்காலத்தை எண்ணி வருத்தமாகவும் உணர்ந்து, மதிவதனி உள்ளூர மனம் நலிந்து கொண்டிருந்தாள்.

ஒரு நாள் இரவில் தூக்கம் பிடிக்காமல் திணறிய மதிவதனி, ஏதோ சத்தம் கேட்கவும் எழுந்து போய்ப் பார்த்தாள்.

விடுதிப் பணியாளர்கள் ஹாலில் டீவி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மனது மாறலாம் என்று, ஒரமாக நின்று அவளும் பார்த்தாள்.

துணிச்சல்காரக் கதாநாயகி, இடுப்பில் சொருகி வைத்திருந்த தாலியை எடுத்துக் கதாநாயகன் முன்னே நீட்டி, அதைத் தன் கழுத்தில் கட்டி விடுமாறு வற்புறுத்திக் கொண்டிருந்தாள்.

சே! கூச்ச நாச்சமே கிடையாதா என்று அருவருக்கும்போதே, 'என்ன தப்பு? மனதில் இருப்பதை நாகரீகப் போர்வை கொண்டு மறைக்காமல் வெளிப்படையாகக் கூறுகிறாள்! அவ்வளவுதானே?'

என்றும் தோன்றிவிட, மதிவதனி விதிர்விதிர்த்துப் போனாள்.

என்றேனும், அவளும் சுதாங்கனிடம் காதல் பிச்சை கேட்டு இப்படி நிற்கப் போகிறாளா? பத்திர வாசகம், உச்சந் தலையிலேயே ஓங்கி அடித்தது.

இது போல ஒரு நிகழ்வை எதிர்பார்த்துதான் அப்படி எழுதி வாங்கினானா? என்ன கேவலம்?

தன் வழக்கப்படி கேலியும் கிண்டலுமாகப் பேசிக் கொண்டிருக்கும் சுதாங்கனின் முகம், வெறுப்பும் அருவருப்புமாக மாறுவதைக் கற்பனையில் கண்ட மதிவதனி, அப்படியே கூனிக் குறுகிப் போனாள்!

இல்லை, இது சரியில்லை. அது போல மடத்தனம் எதுவும் செய்து கேவலப்படுமுன், அவள் இந்த ஊரை விட்டு போய்விட வேண்டும் என்று எண்ணினாள்!

தெய்வத்தின் அருளால், அப்படியொரு வாய்ப்பு விரைவிலேயே அவளுக்குக் கிடைத்தது!

பாலகிருஷ்ணன் படிப்பில் வெகு கெட்டிக்காரன். அத்தோடு, இள வயதிலேயே நேர்ந்த துன்பங்களாலும், அவைகளைத் தமக்கையோடு சேர்ந்து சமாளித்ததின் காரணமாகவும், அவன் வெகுவாகப் பண்பட்டிருந்தான். தமக்கை திருப்பித் திருப்பிச் சொல்லி அனுப்பியது வேறு.

இவை எல்லாமே, சூழ இருந்தோரின் அன்பையும் ஆதரவையும் பெற்றுத் தந்தன.

முக்கியமாக, அவனுடைய ஊர்க்காரரர் சதாசிவம், அவனுக்கு ஏதாவது செய்யத் துடித்துக் கொண்டிருந்தார்.

ஆனால், பாலனின் கவலை, ஏக்கமெல்லாம் தமக்கையைப் பற்றியது மட்டுமே என்று அறியவும், அவளை எப்படியாவது இங்கிலாந்துக்கு வருவிக்க முயற்சி செய்தார்.

முப்பது ஆண்டுகளாக அங்கேயே தங்கியிருந்து, அந்த நாட்டின் குடிமகனாகவே தொழில் செய்து உயர்ந்தவர். அரசு யந்திரத்திலும் அவருக்கு செல்வாக்கு இருந்தது.

முழு மூச்சுடன் முயன்று, மதிவதனி அங்கே வருவதற்கு ஏற்பாடு செய்துவிட்டார்.

பாலனுக்கும் பல்வேறு பண உதவிகள் கிடைப்பதற்கும் அவர் ஏற்பாடு செய்திருந்தார். அந்தப் பணமே, தமக்கையையும் சேர்த்துப்



பராமரிப்பதற்கு, அவனுக்குப் போதுமானதாக இருந்தது.

இதையெல்லாம் மதிவதனிக்கு மெயில் அனுப்பிய பாலகிருஷ்ணன், விரைவிலேயே அவளுக்கு விசாவும் டிக்கட்டும் எடுத்து அனுப்புவதாகத் தெரிவித்தான்.

மகிழ்ச்சியும் வேதனையுமான மன நிலை மதிவதனிக்கு.

தம்பியைப் பார்க்கப் போவது ஒரு சந்தோஷம். கூடவே, தன்னிலையிழந்து சுதாங்கனிடம் உளறிவிடுமுன், நல்லபடியாகப் பிரிந்துவிடும் வாய்ப்புக் கிடைப்பதும் பெரும் நிம்மதியே.

ஆனால், அதுவே... சுதாங்கனைப் பிரிந்து செல்வதே பெரும் வேதனையாகவும் இருந்தது.

எழுதிக் கொடுத்திருந்தபடி, எப்படியும், இந்த ஓர் ஆண்டு முடியும்போது அனுபவிக்க வேண்டிய வேதனை, பல மாதங்கள் முன்னதாகப் படப் போகிறாள். அவ்வளவுதானே என்று மனதை ஆறுதல் படுத்திக் கொண்டாள் அவள்.

அந்த ஆறுதலோடு, தம்பியின் அடுத்த தகவலுக்காகக் காத்திருந்தாள், மதிவதனி.

மதிவதனி அறியாத சில விஷயங்களும் அங்கே நேர்ந்திருந்தன.

சுதாங்கன் தொடர்ந்து மூன்று சனிக் கிழமைகள் தன் அலுவலகத்துக்கு வந்து, இரு நிறுவனங்கள் தொடர்பான சில வேலைகளைப் பேருக்குப் பார்த்துவிட்டு மறுநாள் வெளியே சுற்றுவதையும், ராம்குமார் கவனியாதது போல ஊன்றிக் கவனித்தான்.

ஞாயிற்றுக்கிழமைகள், மதிவதனியோடு சுற்றுவதில் செலவிடப் படுவது தெரிந்தது.

அடுத்த சனிக்கிழமை சுதாங்கன் அலுவலகத்துக்கு வரவும், "என்னப்பா. வாரா வாரம் பெங்களூரு 'விசிட்'டாக இருக்கிறதே! முன்னெல்லாம், கூப்பிட்டாலும் வர மாட்டாய்?" என்று விளக்கம் கேட்டான்,

"ஐயோ. வேலைப்பா! நீ வேறு, சென்னையில் இருந்து கணக்குகளைப் பார்க்க யாரும் வருவதே இல்லை என்று ஒரே புகாரா? அதுதான் பார்த்துவிட்டு வா என்று அப்பா அனுப்பினார்" என்று அப்பாவியாய் விளக்கினான் சுதாங்கன்,

"ஹே... ஹேய் அண்ணாத்தை. இதுதானே வேண்டாம் என்கிறது! நாங்களும் பழம் தின்று கொட்டை போட்டவர்கள்தான். எல்லாம்

எங்களுக்கும் புரியுமாக்கும்!" என்றான் ராம்குமார் கேலியாக.

சுதாங்கன் பேசாதிருக்கவும். "ஆனால். மதிவதனி ஒரு மாணிக்கம்ப்பா! வந்த முதல் நாளே வேலையில் பொருந்துவது எத்தனை பேரால் முடியும்? இவளால் முடிந்தது. அத்தோடு ஒரு வேலையைக் கொடுத்தால், எவ்வளவு சீக்கிரமாக, சரியாகவும் செய்து முடிக்கிறாள்! அவளை மறுபடியும் சென்னைக்குக் கூப்பிட்டால், நான் அனுப்ப மாட்டேன். இரண்டு மடங்கு ஊதியம் கொடுத்தேனும் நிறுத்தி விடுவேன்" என்றான், நண்பனை ஓரப் பார்வை பார்த்து.

அதே போல சுதாங்கனும் பார்க்க, இருவருக்கும் சிரிப்பு வந்தது.

சிரித்து முடித்தபின் "என்னிடம் மறைப்பானேன். சுதா?" என்று வினவினான் நண்பன்.

"மறைப்பது என்று இல்லை. ஆனால், மதிவதனி சற்றுக் கட்டுப்பாடான பெண். இப்படிச் சொன்னாலே அடிக்க வரக்கூடும். அதை விடவும், சொல்லாமல் கொள்ளாமல் எங்கேயாவது போய்விடுவதும் நடக்கக் கூடியதே. ரொம்பக் கவனத்துடன் அடியெடுத்து வைத்துக் கொண்டிருக்கிறேன்" என்றான் சுதாங்கன்,

"ஓர் எச்சரிக்கை! கவனம் கவனம்' என்று முன்னே காலெடுத்து வைக்காமலே இருந்து விட வேண்டாம். இந்த பெங்களூருவின் இதக் குளிருக்கு, ஆள் ஜொலிக்கிறாள். எனவே, வேறே யாராவது உன்னை முந்திக்கொண்டு விடாமல் பார்த்துக்கொள்" என்று எச்சரித்தான் ராம்குமார்.

"சற்று முன் நீ அவளைப் புகழ்ந்து தள்ளியதற்கு, உன் மேல்தான் காட்டம் வர வேண்டும்" என்றான் மற்றவன்.

"ஊகூகூம் நம்மை விட்டு விடப்பா! அண்ணிமாரிடம் எல்லாம் நான் வைத்துக் கொள்வதே கிடையாது. இவள் விஷயத்தில், எனக்கு முதலில் இருந்தே சந்தேகம்தான். அதனால் பத்தடி தள்ளியேதான் நிற்பது. இந்தக் கஷ்டம் ஒரு பக்கம் என்றால், இந்த மாதிரி அருமையான பெண்கள் நம் கண்ணில் தட்டுப் படுவதே இல்லையே என்றுதான் சோ...கமாக இருக்கிறது!" என்றுரைத்து, இல்லாத கண்ணீரை அவன் விரலால் சுண்டி எறிய, நண்பர்கள் இருவரும் நகைத்தனர்.

பாலன் அனுப்பிய செய்தியைச் சுதாங்கனிடம், மதிவதனி மறைக்கவில்லை. தள்ளிப் போட்டுத் தள்ளிப்போட்டு. அவன் விடைபெற வந்த போது தெரிவித்தாள்.

ஆனால், சொல்லும்போது சற்று அதிகப்படி சந்தோஷம் காட்டி, தம்பியின் அடுத்த நடவடிக்கைக்காக ஆவலாகவே அவள் காத்திருப்பது போலச் சொன்னாள்.

நண்பன் சொன்னது போல. ஆனால் சற்று வேறுபாடான அதிர்ச்சிதான் சுதாங்கனுக்கு.

ஆனால், சொன்னவளுக்கு உண்மையிலேயே இவ்வளவு ஆனந்தம் இருக்கிறதுதானா?

கூர்மையுடன் ஆராய்ந்தவனுக்கு, அவளது கண்கள் லேசாகச் சிவந்திருப்பது போல... குரல் சற்றுக் கனத்திருப்பது போல... என்னென்னவோ தோன்றியது, இவை அனைத்துமே, அவனது ஆசை கொண்ட மனதின் கற்பனையாகவும் இருக்கலாம்.

இப்போது என்ன செய்வது?

"உங்கள் பத்திரம், பாதியளவு நாட்களிலேயே, காலாவதி ஆகப் போகி...றது!" என்று வேடிக்கை போலச் சொல்ல முயன்று, முடியாமல் குரல் நடுங்கியதைத் தொண்டையில் செறுமலுடன் முடித்தாள் அவள்.

அந்தப் பத்திரம்! அதைக் கொணர்ந்து, அவள் முன்னிலையில் கிழ்த்துப் போட்டுவிட்டு, பத்திரம் காலாவதி ஆகாமலே கிழித்து விட்டேன். அதன் காரணம்... என்று தன் நேசத்தை எடுத்துச் சொல்லலாமா?

என்னவோ, அது சிறப்பாகத் தோன்றிவிட. "நீ ஒன்றும், நாளைக்கே டிக்கட் வந்து நாளன்றே கிளம்பிவிட மாட்டாய்தானே? அடுத்த வாரம் வரும்போது, இது பற்றிப் பேசுவோம்" என்று கிளம்பினான் சுதாங்கன்,

ஆனால், மனிதன் திட்டமிடுவது போலவே கடவுள் எல்லாவற்றையும் நடத்தி விடுவது இல்லையே!

அடுத்த வாரம், சுதாங்கன் பங்களூருவைச் சென்று அடைய முடியாமலே போயிற்று!



# சுந்தரி நீயும்... 12

மதிவதனியும், பாலகிருஷ்ணனும் முத்திரைத் தாளில் எழுதித் தந்திருந்த பத்திரத்தைக் கவனமாக எடுத்துக்கொண்டு, சுதாங்கன் பெங்களூருவுக்குக் கிளம்பினான்தான்.

ஆனால், சென்னையைத் தாண்டி சற்று தூரத்திலேயே, அவனது வண்டி ஒரு விபத்துக்குள்ளாகிவிட்டது. அவனது பிழை என்று முழுதாகச் சொல்ல முடியாது.

அவனுக்குப் பின்னே வந்த ஸ்போர்ட்ஸ் மாடல் காரில் பயணம் செய்த சில இளைஞர்களை அவன் கவனித்து ஒதுங்கி வழி விட்டிருக்கலாம்.

ஆனால், பொதுவாகப் போக்குவரத்து நெருக்கடி இல்லாத சமயங்களில் அந்தச் சாலையில் செல்லக் கூடிய வேகத்துக்கு மேல் அவன் செல்லவுமில்லை. கூட்டம் இல்லாத நேரத்தில் முடிந்த அளவு தூரத்தைக் கடந்துவிடும் எண்ணம்தான் அவனுக்கு.

ஆனால் பின்னே வந்த இளவல்களுக்கு, அவன் வேண்டும் என்றே வழி விடாதது போலத் தோன்றிவிட்டது. கார் வேறு ஸ்போர்ட்ஸ் மாடல். எனவே படு வேகம் எடுத்து, சுதாங்கனின் காரை முந்திச் சென்று, அவனது காருக்கு நேர் முன்னே போய் 'சடன் பிரேக்' போட்டுக் காரை நிறுத்தினார்கள்.

அப்படியே முந்திச் சென்றிருந்தால் கூட, எதுவும் ஆகியிராது. ஆனால், தங்கள் 'ஹாரன்' ஒலிக்குப் பணிந்து வழி விடாதவனுக்குப் பாடம் கற்பிப்பதாக எண்ணினார்கள் போலும்.

சுதாங்கன் சற்றும் எதிர்பாரா வண்ணம், அவர்கள் காரை நிறுத்தவும், என்ன முயன்றும், அவனது கார், முன்னே நின்ற கார் மீது மோதிவிட்டது.

அது மட்டுமல்ல அந்தக் காரை ஓட்டியவன் குடித்திருந்ததால், காரைச் சரியாகக் கையாளவும் அவனால் முடியாமல், கார் பக்கவாட்டில் சரிந்தும் விட்டது.

சுதாங்கனுக்கும் அடிதான், ரத்த காயம்தான்.

ஆனால், அந்தக் காரில் பயணம் செய்தவர்களுக்கு, அடி, காயம் எல்லாமே பலமாகப் பட்டிருந்தது!



எனவே, போலீசுக்குத் தகவல் சொல்லிவிட்டு, அந்தக் காரில் சிக்கிக் கொண்டிருந்தவர்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்தவன் கடைசியில் களைப்பும் ரத்த சேதமுமாக மயங்கி விழுந்தான்.

நல்லவேளையாக அவனைப் போலவே, உதவும் மனப்பான்மை உள்ள வேறு சிலரும் வந்து உதவிகள் செய்தனர்.

அதற்குள்ளாகக் காவல் நிலையத்திலிருந்தும் வந்து பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இரு கார்களிலும் பயணம் செய்தவர்களின் உரிய உறவினருக்குத் தகவல் தெரிவித்ததோடு, அருகில் இருந்த ஒரு பெரிய மருத்துவமனையில் சிகிச்சைக்கும் ஏற்பாடு செய்தனர்.

ஓடி வந்த உறவினரிடம், கார்களில் இருந்த பொருட்கள், பெற்றுக்கொண்ட கையெழுத்தோடு ஒப்படைக்கப் பட்டன.

அப்படித்தான். சுதாங்கனின் பொருட்களும், அவனுடைய பெற்றோரின் கைக்கு வந்தன.

மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு, பயமேதும் இல்லை என்று உறுதி அளிக்கப்பட்டு, மருந்துகளின் வேகத்தால் சுதாங்கன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோதுதான், அவனது பொருட்களைச் சரிபார்க்கும் எண்ணமே, அவனுடைய பெற்றோருக்கு வந்தது.

மதிவதனியும், பாலகிருஷ்ணனும் எழுதிக் கையெழுத்திட்டிருந்த பத்திரம் அவர்கள் கைக்குக் கிடைத்தது அப்படித்தான்!

மகனது 'லாப்டாப்' பையில் இருந்த அந்தக் கவரை எடுத்து, உள்ளிருந்த பத்திரத்தைப் பிரித்தபோது, அதில் இப்படி ஒரு குண்டு இருக்கப் போகிறது என்று, அவர்கள் இருவருமே சற்றும் எதிர்பார்க்கவில்லை.

அதற்கு முன்பே, காதலி என்று சொல்லியிருக்கிறான், வாராவாரம் போய்ப் பார்த்துவிட்டு வருகிறான் பிள்ளை என்பதில், ராம்குமாருடன் தொடர்பு கொண்டு, விபத்து விவரம் பற்றிச் சொல்லி, மதிவதனியிடமும் தெரிவிக்குமாறு மாதவன் கூறியிருந்தார்.

தேவைதானா என்று இப்போது தோன்றியது. எப்படியும், அவளைப் பார்க்க என்று வாரம் தோறும் பிள்ளை போகிறான் எனும்போது, சொல்ல வேண்டியது கடமை என்றே அவருக்குத் தோன்றியது.

அவரது பொறுப்பு தீர்ந்துவிட்டது. அதற்கு மேல் அந்தப் பெண் என்ன வேண்டுமோ செய்யட்டும் என்று எண்ணினார்.

ஆனால், அவருடைய மனைவி பவானி, வேறு விதமாக யோசித்தாள்.

மதிவதனி காசுக்காக வந்தவள். தம்பியின் வெளிநாட்டுப் படிப்புக்கான செலவுக்காகவே என்றாலும். அந்தப் பணத்துக்காக ஓர் ஆண்டு நடிக்க வந்தவள் அவ்வளவே.

பின்புலமற்ற அந்தப் பெண் ஒரு நாளும், தனன்னுடைய மருமகள் ஆகப் போவது இல்லை. பிரிந்து சென்றுவிடுவாள் என்பது அவளுக்குப் பெரிய ஆறுதலைத் தந்தது.

சற்று யோசித்துவிட்டு, ரேவதி அழைத்து, மகனின் விபத்து பற்றித் தெரிவித்தாள்.

இப்போதும். அங்கங்கே பார்க்கிறபோது, ஓடி வந்து பேசுகிறவள் அந்தப் பெண். சுதாங்கனின் நினைவு மறக்கவில்லை என்று ஓரிரு முறை வெளிப்படையாகவே சொன்னதுண்டு.

விபத்து பற்றிச் சொன்னதும், "ஐயையோ!" என்று அதிர்ந்து கூவிவிட்டாள்.

பிறகு, பெரிய அடியா? எங்கெங்கே அடி பட்டிருக்கிறது என்று விவரம் கேட்டுத் தெரிந்துகொண்டாள்.

"ஏதோ அத்தை, இந்த வேதனைக்கிடையே உங்களுக்காவது என் நினைவு வந்து, விஷயம் சொன்னீர்களே!" என்று விசும்பினாள். "ஒரே ஒரு தடவை, அவரைப் பார்ப்பதற்கு அனுமதி தருவீர்களா, ஆன்ட்டி?" என்று கெஞ்சிக் கேட்டாள்.

"உனக்கில்லாத உரிமையா?" என்ற பவானி, "அந்தப் பெண் போய்விடுவாள் போலத் தெரிகிறது" என்று வாயை விட்டாள்.

அவளிடமே வேறு சில விவரங்களையும் கேட்டு அறிந்துகொண்டு. "அப்படியானால், நான் நாளைக் காலையில் வருகிறேன், அத்தை. மருந்து மயக்கம் அப்போதுதானே முழுதாகத் தீரும் போலத் தெரிகிறது" என்றுரைத்துப் பேச்சைத் துண்டித்த ரேவதி மனதிற்குள் கறுவினாள்.

'என்னையா வேண்டாம் என்று மறுத்தாய்? உன்னையே மணந்து, உன்னை ஆட்டிப் படைக்கிறேன் பார்' என்று மனதிற்குள் சூளுரைத்தாள்.

அன்று பார்லரில் பல மணி நேரத்தைச் செலவிட்ட ரேவதி, பார்லரை விட்டு வெளியே வரும்போது, பளபளவென்று ஜொலித்துக் கண்ணைப் பறித்தாள்!



கிட்டத்தட்ட இதே நேரத்தில், பெங்களூருவில் வேறு நிகழ்ந்தது.

மதிவதனிக்கு, அவளுடைய அன்புத் தம்பி, லண்டனுக்குச் செல்ல ஓப்பன் டிக்கட்டும், விசாவும் அனுப்பியிருந்தான்.

அவனது படிப்பு முடிந்து. வெகுவாக முயன்று பெற வேண்டியவை. அன்பு மிகுந்த. அதே சமயம் செல்வாக்கும் உடைய சிலரால் ஆறு மாதம் முன்னதாகவே கிடைத்திருந்தன,

ஒரு காலத்தில். இதை எண்ணி எவ்வளவு மகிழ்ந்திருப்பாளோ? இன்று தொண்டையை அடைத்துக்கொண்டு கண்ணீர்தான் முட்டிக்கொண்டு நின்றது,

அடுத்த வாரம் பேசுவோம் என்றவன் ஏன் வரவே இல்லை?

அவர்கள் தனியே சந்திப்பது ஞாயிற்றுக்கிழமைதான் என்றாலும், சுதாங்கன் வந்துவிட்டது, அலுவலகத்தில் அவளுக்குத் தெரிந்துவிடுமே!

ஏன் வரவில்லை? வந்தால், ஏடாகூடமாக ஏதாவது வாக்களித்து விடக் கூடும் என்று வராமலே இருந்துவிட்டானா? மற்றபடி, வராதிருப்பானேன்?

சும்மாவே அலைபாய்ந்து கொண்டிருந்தவள், விசாவையும் டிக்கெட்டையும் பார்த்ததும் சற்று நேரம் செயலற்றுப் போனாள்.

இதை ஏற்று. இங்கிலாந்துக்குப் போய்விட்டால், அப்புறம் என்றேனும் சுதாங்கனைப் பார்ப்பாளா?

கொஞ்ச காலத்துக்கு ஒருதரம், சொந்த நாட்டுக்குத் திரும்பி வந்தே ஆக வேண்டும் என்றாலும், இப்போது போல அவனோடு சகஜமாகப் பேசி மகிழ முடியுமா? நடக்காதே!

சற்று நேரம் அயர்ந்து அமர்ந்திருந்தவளுக்கு மெதுவே, அன்றாடக் கடமைகள் நினைவு வந்தன.

முக்கியமாக, வேலை தந்திருக்கும் முதலாளியிடம் சொல்ல வேண்டுமே!

எழுந்து சென்று, அனுமதி கேட்டு ராம்குமாரைப் போய்ப் பார்த்தாள்.

விவரம் அறிந்தபோது, அவன் முகத்தில் எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

ஆனால், "சென்னைக்குப் போய், சுதாங்கனைப் பார்த்து, இது பற்றிப் பேசுவீர்கள் அல்லவா?" என்று கேட்டான். சற்று விசித்திரமான கேள்விதான்.

நான் வெளிநாடு போவதற்கும், அந்த ஆளுக்கும் என்ன சம்பந்தம் என்று, அவள் கேட்டுக் கூட இருப்பாள். கூடவே, ஏதோ தொடர்பு இருப்பது, இவனுக்குத் தெரியுமோ என்றும் தோன்றியது.

ஆனால், வேலையில் சேர்த்துவிட்டவன் அவனே என்பதால் கூட, ராம்குமார் இதைச் சொல்லியிருக்கலாம்.

ஒரு பெருமூச்சுடன் அவள் தலையாட்டியபோது, விபத்து பற்றிய விவரத்தை அவன் சொன்னான்.

முதலிலேயே இதமாகத் தொடங்கி. "பெரிய அடி ஒன்றும் இல்லை என்று அவன் தந்தை சொன்னார். ஒரு விபத்து நேர்ந்து, அதனால்தான் அவன் இங்கே வரவில்லை என்றும் சொன்னார்" என்று மெதுவே கூறியதால், அவளாலும் நெஞ்சுக்குள் ரயில் ஓடியதை மறைத்துக்கொண்டு, ஒருவாறு சாதாரணமாகப் பேசமுடிந்தது.

அவளது கோரிக்கை எதையும் ராம்குமார் மறுக்கவுமில்லை.

அங்கிருந்து கிளம்புவதற்கும், மருத்துவமனையில் சுதாங்கனைப் பார்ப்பதற்கும் தேவையான விவரங்களையும் தெரிவித்து, அவளை அனுப்பி வைத்தான்.

அதன்படி, மதிவதனியும் கிளம்பி ஞாயிறன்று காலையில் சென்னையை வந்தடைந்தாள்.

வெகு நேரம் நன்கு தூங்கி எழுந்த சுதாங்கனுக்குப் பெங்களூருக்குச் செல்ல முடியாமல் போயிற்றே என்று வருத்தமாக இருந்தது.

மொபைலில் அதிகம் பேசுவது, பொதுவாக மதிவதனிக்குப் பிடிக்காது. அத்தோடு, விபத்தைப் பற்றி அவளிடம் நேரடியாகச் சொல்லவும் மனமின்றி, நண்பனைத் தொடர்பு கொண்டான்.

வேறு வேலை இருப்பதால் அங்கே வர முடியவில்லை என்று மதிவதனியிடம் சொல்லும் படி அவனிடம் கேட்டான் ஆனால், விபத்து பற்றி அவளுக்குத் தெரியும் என்பதோடு, அவளுடைய தம்பி அனுப்பிய டிக்கட், விசா விவரத்தையும், கிளம்பப் போவதாக மதிவதனி கூறியதையும், அவன் சொல்லக் கேட்டுக் கொண்டான்.

புருவம் சுளித்து அவன் அமர்ந்திருந்த அப்போதுதான், இயற்கையான எழிலோடு, முழுப் பார்லர் அழகில் ரேவதி அங்கே வந்து சேர்ந்தாள்.

வெளியே கணவரோடு உட்கார்ந்திருந்த பவானியைப் பார்த்ததுமே, "அத்தை..." என்று கதறியவாறு அவளிடம் ஓடிப் போனாள்.

"ஐயோ, நான் அவரைப் பார்க்க வேண்டுமே! நேற்று நீங்கள் சொன்னதில் இருந்து, எனக்குச் சாப்பிட, தூங்க ஒன்றுமே முடியவில்லை. ஆன்... வந்து அத்தை!" என்று அழகாகக் கண்ணீர் விட்டாள்.

அலங்காரம் கலைந்து விடாமல் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "அவர் எங்கே இருக்கிறார், அத்தை?" என்று சோகமாகக் கேட்டாள்.

விவரம் கேட்டுக்கொண்டு அவள் செல்லவும், மாதவன் மனைவியிடம் தன் எதிர்ப்பைத் தெரிவித்தார்.

"என்ன வேலை செய்கிறாய் பவானி? அவனுக்கு இவளைச் சுத்தமாகப் பிடிக்காததால்தானே, இத்தனையும் பண்ணியிருக்கிறான்? காதலியாக இன்னொருத்தியை ஏற்பாடு செய்கிற வரை போயிருக்கிறான். மறுபடியும் இவளையே வரவழைத்து, என்ன வேலை இது?" என்று சிடுசிடுத்தார்.

ஆனால், பவானியின் பதில் வேறுமாதிரி இருந்தது. "சிறுபிள்ளைத்தனமாக ஒரு வார்த்தை சொன்னாள் என்று அதற்காக ரேவதியை வெறுத்துவிடுவதா? உங்களிடம் எத்தனை முறை நான் யோசிக்காமல் கண்டபடி பேசியிருக்கிறேன். நீங்கள் அதற்காக என்னை ஒதுக்கியாவிட்டீர்கள்? அதுபோல, இதுவும் சரியாகிப் போகும். அவள் என்ன அழகு பாருங்கள்! கண்ணைத் தட்டி விழிக்க முடியவில்லையே! அதிலேயே பையன் மயங்கிவிடுவான், பாருங்கள்!" என்று நம்பிக்கையோடு பேசினாள்.

"என்னவோ, போ. எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. நான் டாக்டரைப் பார்த்து டிஸ்சார்ஜ் எப்போது என்று கேட்டு வருகிறேன்" என்று அங்கிருந்து தூரப் போனார், அவர்.

அவரைப் பொறுத்த அளவில். மனைவியின் நம்பிக்கை அவருக்கு இல்லை. இந்தக் 'கண்ணைப் பறிக்கிற அழகிலும்' நம்பிக்கை இல்லை. எதிலும் பட்டுக்கொள்ள விரும்பாமல் தள்ளிப் போனார் அவர்.

மதிவதனியின் கெட்ட காலம், இந்த நேரத்தில் அவள் அங்கே வந்து சேர்ந்தது.

வரும் வழியெல்லாம் அவளுக்கு மனதில் ஒரே வேதனை.

சுதாங்கனுக்குப் பெரிதாக பாதிப்பில்லை என்று ராம்குமார் சொன்னதை, அவளால் முழுதாக நம்ப முடியவில்லை. அப்படியானால், வர முடியவில்லை என்று, அவளிடம் சுதாங்கனே நேராகச் சொல்லியிருக்கலாமே!

சுதாங்கனது சுகத்தை எண்ணிக் கவலையுடன் போனால், அவன்

தாயார் வேறு கூறி அவளை விரட்டினாள்.

"ஐயோ ராமா! இங்கேயும் வந்துவிட்டாயா? என் பிள்ளைக்கு என்ன ஆகப் போகிறதோ, தெரியவில்லையே! உன்னை முதல் முதலில் பார்த்தபோது, நான் மருத்துவமனைக்குப் போனேன், இப்போது நீ வருமுன்னாலேயே, என் பிள்ளை! நல்ல ராசிதான் உனக்கு! கடவுள் அருளால். அவன் நல்லபடியாக இருக்கட்டும். தயவு பண்ணித் திரும்பிப் போய்விடு!" என்றாள் வெறுத்த குரலில்.

அப்போதும், சின்னவள் தயங்கி நிற்கவும் "இதோ பார், உன் கதை எல்லாம் எனக்குத் தெரியும். உன் தம்பிக்காகப் பணத்துக்காக நடித்தவள்தானே? அந்த வேலைதான் நடந்துவிட்டதே! மறுபடி ஏன் வருகிறாய், ஒட்டிக் கொள்ளவா? அப்படி யாரும், இங்கே தேவையில்லை போ!" என்று அதட்டினாள்.

பெற்ற தாய் அவள். அவளை மீறி உள்ளே போய சுதாங்கனைப் பார்க்க மதிவதனிக்கு மனமில்லை.

எப்படியும் இந்தத் தாய் சொன்னது போல, வெறும் ஒப்பந்தம் தானே ஒழிய, அவர்களுக்கிடையே உண்மை உறவு கிடையாதே!

அந்த ரகசியம் வேறு வெளியே தெரிந்திருக்கிறது. அப்புறம் என்ன உரிமை காட்டி, சுதாங்கனைப் போய்ப் பார்க்க முடியும்?.

வேதனையோடு மெல்லத் திரும்பி நடந்து வெளியேறினாள் அவள்.

பவானி மதிவதனியை விரட்டிய நேரத்தில் உள்ளேயும் ஒரு விரட்டல்தான் நடந்தேறிக் கொண்டிருந்தது.

ரேவதியையும், அவளது அலங்காரத்தையும் பார்த்ததுமே, சுதாங்கனுக்கு ஆத்திரம்.

மேலும், அவள் ஒரு விதமாக நெளித்துக்கொண்டு போஸ் கொடுத்தபடி, "சுதா டார்லிங்" என்று நெருங்கவும் பொங்கிக் கொதித்துச் சீறினான்.

"ஏய். உனக்கு வெட்கமில்லை? ஒரு தரம் வேண்டாம் என்றால், புரியாதா? இதோ பார், எது, என்ன ஆனாலும், உன்னை நான் மணக்கப் போவதில்லை, அது சத்தியம். என் நேரத்தோடு, உன் நேரத்தையும் வீணாக்காமல், மரியாதையாக வெளியே போய்விடு. அல்லது, அட்டெண்டரைக் கூப்பிட்டு விரட்ட வேண்டியிருக்கும்!" என்று சிங்கம், புலி போல உறுமி மிரட்டவும். அவனது குரலிலும் முக பாவனையிலுமாக, சொன்னது போலச் செய்து விடுவானோ என்ற பயம், ரேவதிக்கு வந்துவிட்டது.



அத்தோடு, அழைப்புமணியில் கையையும் வைக்கவே, போஸ் கொடுப்பதை எல்லாம் மறந்து, தடதடவென்று வேகமாக வெளியேறினாள்.

"ரேவதி..." என்று ஆவலுடன் பார்த்த பவானியிடம், தன் ஆத்திரத்தைக் காட்டினாள்,

"சீச்சீ, தூத்தேறி! கஸ்மாலம்! மகனுக்கு ஆள் பிடித்து விடுகிற நீ ஒரு தாய்! உள்ளே இருக்கும் மரியாதை தெரியாத மிருகம் ஒரு மகன்! இரண்டு பேரும் சேர்ந்து நாசமாகப் போங்கள்" என்று கத்திவிட்டுத் தட் தட்டென்று கால்களை அழுந்த வைத்து வெளியே போனாள் ரேவதி.

எப்போதும் கொஞ்சிக் கொஞ்சிப் பேசுகிறவளின் இந்தக் குரலில், பவானி மிரண்டு நின்றாள்.

சுதாங்கனுடைய தாயிடம் கத்தியதோடு, ரேவதியின் சீற்றம் தணிவதாக இல்லை.

"காரை எடுடா. நாயே!" என்று காரோட்டியிடம் வள்ளென்று விழுந்தாள்.

மருத்துவமனை வளாகத்தின் நடைபாதையில், அவளது ஆத்திரத்தைக் காட்ட, இன்னோர் இலக்கும் கிடைத்தது.

கீழே விழுந்து விடுவாள் போல சோர்வுடன் தொய்ந்து நடந்த மதிவதனியைப் பார்த்ததும், அவள் மனம் மீண்டும் கொதித்துக் கொந்தளித்தது, இப்படி மெல்ல அன்னநடை நடந்தால் இவள் நல்லவள் ஆகிவிடுவாளாமா?

முன்பே, ஒருதரம் மதிவதனியை, சுதாங்கனோடு பார்த்து விட்டு, எனக்கு இவள் எந்த விதத்தில் ஈடு என்று சீறியவள் அவள். அன்று முழுவதும் வீட்டில் அத்தனை பேரும் வாங்கிக் கட்டியிருக்கிறார்கள்.

இவள் போய் விடுவாள் என்று அந்தப் பவானி சொன்னாளே! அவளும் சேர்ந்து பொய் சொல்லி, தன்னை... இந்த ரேவதியைக் கேவலப்படுத்தினாளா?

ஊகூம். இருக்காது, இவளை, அவளுக்கும் பிடிக்காது,! மற்றபடி, இவள் இங்கே எப்படி வந்தாள்? பவானியையும் மீறி, மீண்டும் போய் ஒட்டிக் கொள்ளவா?

விடக் கூடாது. பின்னங்கால் பிடறியில் அடிக்கிற மாதிரி, பதறிக்கொண்டு ஓட வைக்க வேண்டும். இனி, இந்தப் பக்கமே, இந்த உத்தமி ரத்தினம் திரும்பிப் பார்க்கவும் கூடாது.

காரை அவள் அருகே, மிகவும் ஒட்டி நிறுத்தச் சொன்னாள். மேலேயே ஏற்றச் சொல்லியிருப்பாள். ஆனால், இது ஆஸ்பத்திரி வளாகம், எங்கிருந்து, எந்த காமிரா படம்பிடித்துக் கொண்டிருக்கிறதோ?

இடித்து விடும்போலப் பக்கத்தில் ஒரு கார் வந்து நிற்கவும், திகைப்புடன் நின்றாள் மதிவதனி.

கார்க் கண்ணாடியை இறக்கி, "மதிவதனிதானே? ஐயோ பாவம்! சுதாங்கனுக்கு விபத்தில் கண் பார்வை அடியோடு போய்விட்டதாமே. படக் கூடாத இடத்திலும் அடியாம்! நல்லவேளையாகத் திருமணத்துக்கு முன்னே நடந்தது. தப்பித்தாய்! அல்லது, அவனைக் கையைப் பிடித்து அழைத்துப் போவதுதானே, உன் முழு நேர வேலையாகிப் போயிருக்கும்! ஓசைப்படாமல், யார் கண்ணிலும் படாமல் ஓடிவிடு. இல்லாவிட்டால், உன்னைப் பிடித்துப் போய்த் தாலியைக் கட்டி அவனுக்கு ஆயா வேலை பார்க்க வைத்து விடுவார்கள், வரட்டுமா?" என்று காரை எடுக்கச் சொன்னாள்.

கார் விர்ர்ரென்று முன்னே பாய, மதிவதனிக்கு மயக்கம் வராத குறை!

ஓ! மகனது இந்த அவலம் தெரியக் கூடாது என்றுதான். சுதாங்கனுடைய தாயார், அவளை விரட்டி இருக்கிறாள்... ஐயோ! அல்லது இதைப் பயன்படுத்தி மகனைப் பிடித்துக் கொள்ளக் கூடும் என்றும் எண்ணியிருக்கலாம்!

ஐயோ! இருந்திருந்து, சுதாங்கனுக்கா, இந்த நிலை?

மறுபடியும், மதிவதனி மருத்துவமனையுள் சென்றாள்.

பவானியோடு, அங்கே மாதவனும் அப்போது இருந்தார்.

அவர்களிடம் சென்று, "இதோ பாருங்கள், இங்கிலாந்து செல்வதற்கு என் டிக்கட், விசா, தம்பி எடுத்து அனுப்பியிருக்கிறான். அதனால், நான் இங்கேயே இருந்து சுதாவைப் பிடித்துக் கொள்வேனோ என்று பயம் வேண்டாம். அவரை ஒரு தரம் பார்த்துவிட்டுப் போய்விடுவேன் ஒரு தரம் பார்க்க அனுமதியுங்கள், ஆன்ட்டி. அவரைப் பார்க்க வேண்டும். ஐயோ, நான் அவரைக் கட்டாயம், அவரைப் பார்க்காமல் என்னால் போக முடியாதே! அவரைப் பார்த்து, ஒரு வார்த்தை தேறுதல் சொல்லிவிட்டுப் போய்விடுகிறேன். கண் போனால் என்ன? கண்ணான பெற்றோர் இருக்கிறார்கள். மற்ற புலன்கள் இன்னும் பலம் பெறும் என்று அவரிடம் ஓரிரு சொல், நம்பிக்கையாகப் பேசிவிட்டு,



நான் கட்டாயமாகப் போய்விடு..?" என்று அவள் கெஞ்சியபோது, மாதவன் குறுக்கிட்டுப் பேசினார்.

"நீ சுதாங்கனிடம் என்ன சொல்ல வேண்டும் என்றாய்?" என்று விவரம் கேட்டார்,

"அதுதான், சார். இப்போது அறிவியல் ரொம்ப முன்னேறி இருப்பதால், எல்லா நலன்களுமே சுதாங்கனுக்குச் சீக்கிரமே திரும்பி விடலாம் என்றுதான். கண் பார்வை கட்டாயம் திரும்பிவிடும். உடம்பில்... ,உடம்பிலும் எந்தக் குறையுமே இல்லாமல் முழுதாகச் சீராகிவிடும் என்றுதான். அவரைக் கொஞ்சம் மனம் தேற வைத்துவிட்டு, நான் கட்டாமாய்ப் போய் விடுகிறேன், ப்ராமிஸ்" என்றாள் அவள்.

சுதாங்கனுடைய பெற்றோர் இருவரும், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

புரிகிறதா என்பது போல மாதவனும், சிறு குன்றலுடன் அவர் மனைவியும்.

"சரிம்மா, எல்லாம் நீ உள்ளே போய்ச் சொல்லு" என்று சொன்னது, பவானியே.

கவலையோடு, எப்படிப் பேசுவது என்று யோசித்தபடியே அவள் உள்ளே போனால் "டிக்கட், விசா வந்துவிட்டதா?" என்று, கண்களை இறுக மூடிக்கொண்டு கேட்டான் அவன்.

மனதில் ஏதோ உறுத்த, என்னவென்று புரியாமல், "ஆஆமாம் ஆனால்.... உஉண்மையில்" என்று அவள் தடுமாற, அவன் குறுக்கிட்டுப் பேசினான்.

"உன் மெய்யும் பொய்யும் எனக்குத் தேவையில்லை. விடை பெறத்தானே வந்தாய்? கிளம்பு. வெளிநாடு அல்லவா? அதற்கு ஈடு ஏது? சந்தோஷமாகப் போ. ஆனால், தயவு செய்து உடனே வெளியே போய்விடு" என்றான் அவன் அதட்டலாக.

அவனைத் தேற்றலாம் என்றுதான் மதிவதனி மறுபடியும் வந்தது. ஆனால், அவன் இப்படி விரட்டுகிறானே! பார்வையற்ற நிலை அவனுக்கு அவ்வளவு ரோஷமாக இருக்கிறதா? அதுவும் அவளிடம்? ஆனால், இதில் அவனது பிழை ஒன்றும் இல்லையே!

"உன்னைப் போகச் சொன்னேன்!" அவனது தாழ்ந்த குரல் கட்டளை!

இவ்வளவு நாட்களில், அவனது இந்தக் குரல் புரிந்திருந்ததால்,

அதற்கு மேல் அங்கே நிற்க மாட்டாமல், மதிவதனி வருத்தத்துடன் வெளியேறினாள்.

போ என்றால் போய்விட்டாளே என்று அர்த்தமற்ற ஆத்திரம் வந்தது சுதாங்கனுக்கு.

மெய்யான ஆத்திரம் அதில் இல்லை. தம்பி கூப்பிட்டதும், எல்லாவற்றையும்... முக்கியமாக அவனை விட்டுக் கிளம்பிவிட்டாளே என்பதில்!

இவளைப் போய் அண்ணி கிண்ணி என்று அந்த ராம்குமார்... உள்ளே கனன்ற ஆத்திரம் வடிகால் தேட, ராம்குமாரை மொபைலில் பிடித்தான். சுதாங்கன்.

"பார். என்னென்னவோ நினைத்தோமே! டிக்கெட்டையும் விசாவையும் பார்த்ததுமே, சந்தோஷமாகக் கிளம்பிவிட்டாளே! வெளிநாட்டுப் பயணம் அல்லவா?" என்றான், வெறுத்த குரலில,

"சந்தோஷமாகவா? இல்லையே! தம்பி கடிதம் பார்த்ததில் இருந்து இதோ இதோ என்று கண்ணீர்தான். அதை அடக்குகிற முயற்சிதான். நீயும் வரவில்லையா? ரொம்பப் பரிதாபமாக இருந்தது. அதனால்தான், இரவே கிளம்ப வழி, மருத்துவமனை இருக்குமிடம் எல்லாம் சொல்லி அனுப்பினேன். ஹலோ...ஹலோ"

அதற்கு மேல், அவனிடம், யார் பேசினார்கள்?

"ஐயோ. அவளை... மதிவதனியைக் கூப்பிடுங்கள்" என்று கத்தியவன், ஏசி அறைக்கதவு சாத்திருப்பதைக் கவனித்து, மணியை அழுத்தி அட்டெண்டரைக் கூப்பிட்டான்.

எதிர்பார்த்ததற்கு மாறாக, மதிவதனி கண்ணீருடன் வெளியே வரவும், மாதவன் தம்பதி திகைத்தார்கள்..

இயந்திரமாயய் நடந்த மதிவதனியை தடுத்து நிறுத்தி, "இங்கே. நாங்கள் தங்குவதற்கு ஒர் அறை எடுத்திருக்கிறோம். அங்கே போய்ப் பேசலாம், வா" என்று, சின்னவளின் கையைப் பற்றிக் கூப்பிட்டாள் பவானி.

"இல்லை ஆன்ட்டி, என்னை விட்டுவிடுங்கள். அவர் போகச் சொல்லிவிட்டார். ரொம்பக் கண்டிப்பாக, என்னைப் போ என்றுவிட்டார். என்னிடம் அவ்வளவு ரோஷம்! ஆனால்... ஆனால், கண்ணும் தெரியாமல், உடம்புக்கும் முடியாமல் படக் கூடாத இடத்திலெல்லாம் அடி பட்டு, இவரை விட்டு எப்படிப் போவேன், ஆன்ட்டி? என்னால் தாங்க முடியவில்லையே!" என்று அழுதாள்



மதிவதனி.

"ஏ... என்னது? அப்படி யார் சொன்னது? எப்போது?" என்று கேட்டார் மாதவன்.

"நான்.... என்று தொடங்கியவள் சற்றுத் தடுமாறி, சமாளித்து "மருத்துவமனை முன்புறம் நடை பாதையில் வந்து கொண்டிருந்தபோது, காரில் வந்த ரேவதி, காரை நிறுத்தி என்னிடம் சொல்லிவிட்டுப் போனாள்" என்று தெரிவித்தாள்.

"அடிப்பாவி!" என்றாள் பவானி!

அதற்குள் வெளியே வந்த அட்டெண்டர், அவர்களை நெருங்கி, "சார், உங்களை. பேஷன்ட் கூப்பிடுகிறார். யாரோ வந்து போனார்களாம். அவர்களைக் கூப்பிட வேண்டுமாம். உடனே போங்கள்" என்றான்.

"இதோப்பா..." என்று அவனை அனுப்பிவிட்டு, "என்னோடு வா" என்று மதிவதனியை, சுதாங்கனின் அறைக்குள் அழைத்துப் போனாள் பவானி.

"சுதாம்மா, நான் சொல்லுமுன், நீ ஒரு வார்த்தை கூடப் பேசக் கூடாது. சரியா? இப்போது, மதி என்ன நிறத்தில் சுடி போட்டிருக்கிறாள்?" என்று மகனிடம் கேட்டாள்.

சுதாங்கன் எப்படியோ? மதிவதனி தவித்துப் போனாள்.

பார்க்க முடியாதவனிடம் போய் இப்படிக் கேட்டால் அவன் என்ன செய்வான்? சுதாங்கன் மௌனமாக இருக்க இருக்க, மதிவதனி தவிப்புடன். "வேண்டாம். ஆன்ட்டி. அவர் பதில் சொல்ல வேண்டாம். அவரால் எப்படிச் சொல்ல முடியும்? கேளாதீர்கள்!" என்று. கிட்டத்தட்டக் கதறினாள் எனலாம்.

"ஏண்டாப்பா மகனே, அம்மா கேள்வி கேட்டால் பதில் சொல்ல மாட்டாயா? சொல்லேன்?" என்று பவானி அதட்ட. "அப்படி அனுமதி கொடுத்தால்தானே சொல்லலாம்! ஒரு வார்த்தை பேசக் கூடாது என்றுவிட்டு என்ன நிறம் என்று கேட்டால் எப்படிப் பதில் சொல்வது?" என்று பதில் கேள்வி கேட்டான் பிள்ளை.

மாதவனின் புன்னகையோடு, அம்மா, மகன் பேச்சின் பாணியில் மதிவதனி திகைத்து நோக்க, "ஐயோ. உலக்கைக் கொழுந்துதான்!" என்று தலையில் அடித்துக் கொண்டாள் பெற்றவள். தொடர்ந்து, "சரி அனுமதி தந்தாயிற்று, சொல்லு" என்றாள்

"ம், ம்ம்ம, இது என்ன நிறம்? நல்ல வைலட் கலர். அதில் கறுப்பில்

மணி வேலை செய்தது. மதிக்கு ரொம்ப அழகாக இருக்கிறது. என்ன மார்க்?நூற்றுக்கு நூறுதானே?" என்று கேட்டான் சுதாங்கன்.

"எப்படித் தெரியும்?"

"இதென்ன கேள்வி? கண்ணால் பார்த்துதான்! பார்த்தால் தெரியாதா? என்ன, எல்லாம் பெரிய டிராமா மாதிரி இருக்கிறதே! என்ன விஷயம்மா?"

"எல்...லாம் அந்த ரேவதியின் வேலைப்பா" என்ற பவானி, தன் தவறையும் மகனிடம் ஒத்துக் கொண்டாள்.

"காரில் நீங்கள் எழுதிக்கொண்ட பத்திரம் கிடைத்ததா? எல்லாம் நடிப்பு என்று தெரியவும், அவளையே வரச் சொன்னேன். ஆனால் நீ விரட்டி விட்டாயா? ரொம்பக் கோபமாகப் போனவள், இவளை வழியில் பார்த்து, என்னென்னமோ சொல்லியிருக்கிறாள், ஆனால், உண்மை அன்பு பற்றித் தெரியாதவள், பாவம்! கண் தெரியாது உடம்பில் கண்ட இடத்தில் அடி என்றதும், தப்பித்தோம் என்று மதி ஓடி விடுவாள் என்று கதை கட்டி இருக்கிறாள், கழுதை!" என்றாள் தாய் ஆத்திரத்தோடு.

"போகட்டும், விடு. தன்னைப் போலப் பிறரை நினைக்கும் நல்ல குணம் என்று விட்டுவிடுவோம்" என்றார் மாதவன்.

"ஆனால். அந்த மாதிரித் துன்பத்தில் உன்னை விட்டுவிட்டு எப்படிப் போவது என்று மதி திரும்பிவிட்டாள். அப்படி வந்தவளைத்தான், ஏனோ நீயும் விரட்டியடித்திருக்கிறாய்!" என்றள் பவானி, கண்டனக் குரலில்.

"ஆனால் வெளிநாடு போக டிக்கட்டோடு வந்தவளை எப்படிம்மா, நிறுத்துவது? காலில் விழுந்தா? அது முடியாது என்பதால்தான் அதட்டி விரட்டுவது போலப் பாவனை செய்தேன்"

"ஓ! ஆனால், இவர் ஏனோ கண்ணை மூடிக்கொண்டே பேசவும், அது அவள் சொன்னது நிஜம்தான் என்று நினைத்துவிட்டேன்" என்றாள் மதிவதனி.

"என்ன செய்வது? கண்ணைத் திறந்தால், போகாதே என்று கெஞ்சத் தோன்றி விடுமோ என்று பயம். போகிறேன் என்று வந்தவளைக் கையைக் காலைப் பிடித்துக் கெஞ்சுகிறவன் நானல்ல!" என்றான் அவன் வீராப்பாக.

"ஓ... அதுதான் உறுத்தியிருக்கிறது. நான் வந்தது எப்படித் தெரிந்தது என்று, ஆனால், கண் மூடி இருந்ததாலேயே ரேவதி சொன்னது



உண்மை என்று எண்ணி, அழுகை வந்துவிட்டது" என்றவளை அன்பு கனியப் பார்த்தான் சுதாங்கன்.

அவளது கன்னத்தை வருடி, "இப்படி நிலைமை நேர்ந்ததாக எண்ணியும் எப்படி விட்டுப் போவேன் என்று மதி அழுதாளா? அப்போதுதான்... எல்லாம் எனக்கு முழுதாகக் கண் திறப்பதற்காகவே நடந்திருக்கிறது. பணம் அழகு என்று அவளைக் கொண்டாடியது தப்பு என்று தெளிவாகப் புரியவேண்டும் அல்லவா?" என்றாள் பவானி.

"இப்போதும் உங்கள் கருத்து தப்புதான் அம்மா. இவளும் அழகிதான்!" என்றான் சுதாங்கன்,

"ஆமாம்டா, முன்பு ஒல்லியாக, அலைந்து திரிந்து, மனதிலும் கஷ்டப்பட்டு இருந்தபோதே, அழகான சிரிப்பைக் காட்டி மகனை மயக்கியிருக்கிறாள் என்று நினைத்தேன், பங்களூர்க் காற்று, என் மருமகளைப் புடம் போட்டிருக்கிறது. இனி, இவள் வாடாமல் காப்பது என் பொறுப்பு" என்று உறுதியான குரலில் கூறினாள் அந்தத் தாய்.

"ரைட். இந்த புத்தி வந்துவிட்டதல்லவா? இன்னும் ஒரு போனஸ் செய்தி. மதிவதனியுடைய தந்தை பெரிய பண்ணைக்காரர். நீ சொன்ன பரம்பரை உள்ளவள். பெற்றோர் இருவரும் விபத்தில் மறையவே, சொந்தத் தாய் மாமா, தன்னுடைய தங்கை மக்கள் என்று பாராமல், வில்லத்தனம் செய்திருக்கிறார், அக்காவும் தம்பியும், அவரிடம் இருந்து தப்பி ஓடி வந்திருக்கிறார்கள். எல்லாம், அந்தப் பத்திரத்தைப் பார்த்தபின் பாலனிடம் பேசித் தெரிந்து கொண்டேன். இனி, அந்த ஒண்ட வந்த பிடாரிகளை விரட்டி, இந்தப் பிள்ளைகளுக்கு உரியதைப் பெற்றுத் தருவது, நம் பொறுப்பு" என்றார் மாதவன்.

"இல்லாவிட்டாலும் பரவாயில்லை, எனக்கு என் மருமகள் போதும்" என்றாள் பவானி,

"எனக்கும் என் பெண்டாட்டி போதுமாக்கும்" என்று சுதாங்கன் இடையிட்டுச் சொல்ல எல்லோரும் நகைத்தனர்.

"என்ன ஒரே கூட்டம் என்று நர்ஸ் வந்து விரட்டுமுன், நாம் எல்லோரும் வெளியே போய்விடலாமா? மதி. நீ வேண்டுமானால் சற்று நேரம் அவனுக்கு உதவியாக இருந்துவிட்டு வாம்மா" என்று மனைவியை அழைத்துக்கொண்டு மாதவன் வெளியே போனார்.

"என்ன. மாமனார். மாமியார் பரவாயில்லையா?" என்று பெருமையோடு கேட்டான் சுதாங்கன்.

"பரவா இல்லையாவா? பிரமாதம்! சொல்லப் போனால்..." என்று இழுத்தபடி கடைக்கண்ணால் சுதாங்கனைப் பார்த்தாள் மதிவதனி.

"ம். சொல்லப் போனால் என்ன? சொல்லி முடி" என்று சிரித்துக் கொண்டே ஊக்கினான் அவன்.

"சொல்லாமல் விடுவேனா? அதாவது உண்மை என்னவென்றால், அவர்கள் இருவருக்காகவும்தான் போனால் போகிறது என்று உங்களை மணந்து கொள்ளலாம் என்று, நான் முடிவு செய்திருப்பதே" என்றாள் அவள் மிடுக்காக.

கண்களை அகல விரித்து "ஆஹா... என் மேல் உனக்கு இவ்வளவு ஆசையா, மதிம்மா? இந்...த அளவு, நான் எதிர்பார்க்கவே இல்லையே! ஆ...ஹ்ஹா, என்னே உன் அன்பு! என்னே உன் நேசம்! நினைக்கும்போதே, உடம்பெல்லாம் புல்...லரிக்கிறதுப்பா!" என்று அவன் பாவனையோடு கூறவும், இருவருக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

இருவரின் நகையும், இனிமையாக இணைந்து ஒலிக்க, அதைக் கேட்டு, வெளியே அமர்ந்திருந்த பெற்றோரின் முகங்களும் மலர்ந்து விகசித்தன!

முற்றும்